# மார்க்ஸீய சமூக இயல் கொள்கை

நா. வானமாமலை

NCBH

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மார்க்ஸிய
# சமூகவியல்
# கொள்கை

# மார்க்ஸீய சமூகவியல் கொள்கை

(வரலாற்றுப் பொருள்முதல்வாதம்)

நா. வானமாமலை, எம்.ஏ., எல்.டி.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.
6, நல்லதம்பி செட்டி தெரு,
சென்னை-600 002.

முதல் பதிப்பு : ஏப்ரல் 1976

உரிமைப் பதிவு

விலை : ரூ. 3-00

அச்சிட்டோர்

நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,

அம்பத்தூர், சென்னை-98.

# முன்னுரை

இந்நூல் எனது சொற்பொழிவு ஒன்றின் எழுத்தாக்கமாகும். 1974-ல் முத்துமோகன், காசி விஸ்வநாதன், கிருஷ்ணமூர்த்தி, நாராயணன், சுப்பிரமணியன், மங்கை ஆகிய ஆறு பேர்களுக்கு முக்கியமான அடிப்படை மார்க்ஸீய நூல்களை அறிமுகம் செய்து வைப்பதற்காக வகுப்புகள் நடத்தினேன். மூன்று சொற்பொழிவுகள் ரிகார்டரில் பதிவு செய்யப்பட்டன. அவற்றுள் இரண்டாவது சொற்பொழிவை சிறிது விரிவுபடுத்தி எழுதியதே இந்த நூல்.

இந்த நூலில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய மார்க்ஸீய தத்துவத்தின் முதலாசிரியர்களின் சமூக வளர்ச்சி பற்றிய ஆய்வுரைகளை அவர்களுடைய மேற்கோள்களிலிருந்தே விளக்க முயன்றுள்ளேன்.

சமுதாயம் மாறுவதற்குரிய காரணம் என்ன? உலக வரலாற்றில் எத்தனை வகையான சமுதாய அமைப்புகள் இருந்து மாறியுள்ளன? சமுதாய வரலாற்றில் எந்தக் கட்டத்தில் அரசு தோன்றியது? வர்க்க சமுதாயத்தில் அரசின் பணி என்ன? வர்க்கமற்ற சமுதாயத்தில் ஆரம்பக் கட்டத்திலும், வளர்ச்சியடைந்த கட்டத்திலும் அதன் பணி எப்படி வேறுபடுகிறது? ''அரசு கம்யூனிஸ சமுதாயத்தில் வாடி உதிர்ந்து விடும்'' என்று மார்க்ஸ் கூறியது எந்தப் பொருளில்? இது பற்றிய கம்யூனிஸ விரோதிகளின் வியாக்கியானங்களுக்கு லெனினுடைய பதில் என்ன?

இன்று சோஷலிஸ நாடுகளின் அரசுகள் தங்கள் நாடுகளுக்குள்ளும், உலக அரங்கிலும் செய்துவரும் பணி என்ன?

இதுபோன்ற வினுக்களுக்கு இந்நூல் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய மூவரது எழுத்துக்களிலிருந்தே விடைதர முயலுகிறது.

பொதுவாகத் தமிழ்நாட்டு இளைஞர்கள் மார்க்ஸீயம் பற்றியும், தற்கால சமுதாய மாற்றங்கள் பற்றியும் அறிந்துகொள்ளப் பேரார்வம் கொண்டுள்ளார்கள். இத்தேவையை உணர்வதும், நிறைவேற்றுவதுமான முயற்சிகள் தேவைக்குப் போதுமானதாக இல்லை. இந்த நூல் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை வகுப்புகளிலோ தனியாகவோ கற்பவர்களுக்கு ஒரு துணைநூலாக இருக்கும் என்று நம்புகிறேன்.

எனது சொற்பொழிவுகளையும், எனது குறிப்புக்களையும் விரிவாக்கி எழுதி, மூன்று நூல்கள் வெளியிட நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் முதல் நூல் வெளிவருவதற்கு முன்னரே, தமிழ்நாட்டின் கிராமப்புற உழைக்கும் மக்களின் பண்பாட்டை, கேரளம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் உழைக்கும் மக்களின் பண்பாடுகளோடு ஒப்பிட்டு ஆராயும் பணியை சர்வதேசீய திராவிட மொழியியல் கழகம் என்னிடம் ஒப்படைத்துள்ளது. இப்பணிக்குரிய வசதிகளை அளிக்க தார்வாரிலுள்ள கர்நாடகப் பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது. எனவே 1976 டிசம்பர் மாதமுடிய நான் கொண்டிருந்த திட்டத்தை நிறைவேற்ற இயலாது. அதன்பின் முயலுவேன்.

எனது நூல்களையெல்லாம் வெளியிட்டுவரும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தார் இச்சிறு நூலையும் வெளியிடுகிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தார்வார்,
6-2-76

நா. வானமாமலை

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மார்க்ஸீய தத்துவத்தின் மூன்று உட்கூறுகள் | .. | 1 |
| 2. | வரலாற்றியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன? | .. | 5 |
| 3. | உற்பத்தியும்—உற்பத்தி உறவுகளும் | .. | 7 |
| 4. | உற்பத்தி சக்திகள்—புரட்சி | .. | 15 |
| 5. | வர்க்க சமுதாய அமைப்புகள் | .. | 19 |
| 6. | தற்கால வர்க்கப் போராட்டங்கள் | .. | 40 |
| 7. | முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும்பொழுது வர்க்கப் போராட்டம் | .. | 60 |
| 8. | மார்க்ஸீய சமுதாயப் புரட்சிக் கொள்கை | .. | 66 |
| 9. | அரசு பற்றிய மார்க்ஸீயக் கொள்கை | .. | 87 |
| 10. | பாட்டாளி வர்க்கப் புரட்சியும்-அரசும் | .. | 96 |
| 11. | சோஷலிஸப் புரட்சியும், அரசும் | .. | 101 |
| 12. | சோஷலிஸ அரசின் தன்மையும் கடமையும் | .. | 110 |

# மார்க்ஸீய சமூகவியல் கொள்கை

## மார்க்ஸீய தத்துவத்தின் மூன்று உட்கூறுகள்

மார்க்ஸீயம் என்பது உலக தொழிலாளர் வர்க்கத்தின் பிரபஞ்சக் கண்ணோட்டமாகும். இது தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியில் தோன்றி வளர்ச்சி பெற்றது. தொழிலாளர் வர்க்கம் புரட்சிகரமான வர்க்கம் ஆனதால் அதன் படைப்பான தத்துவம் புரட்சிகரமான தத்துவமாய் உள்ளது. இதன் பொருள் என்ன? மார்க்ஸ் இந்தக் கேள்விக்கு விடை கூறுகிறார்: "உலகில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளில் பற்பல தத்துவங்கள் தோன்றியுள்ளன. அவை பிரபஞ்சத்தை விளக்குகின்றன. ஆனால் இன்றைய கேள்வி பிரபஞ்சத்தை எப்படி மாற்றுவது என்பதேயாம்."

இந்தக் கேள்விக்கு, மார்க்ஸீயத்திற்கு முந்திய எந்தத் தத்துவமும், விடைகூற முடியவில்லை. அவை **இருப்பையும், உணர்வையும்** ஆராய்ந்து அவ்விரண்டின் உறவுகளை விளக்க முயன்றன. ஆனால் மார்க்ஸீயம் இவ்விரண்டின் தோற்றம், வளர்ச்சிக்குரிய உந்து சக்தி, வளர்ச்சியால் ஏற்படும் மாற்றங்கள்,

இருப்பு—Being, உணர்வு—Consciousness

இந் நிகழ்ச்சிகளுக்கு காரணமான மாறுதல் பற்றிய பொது விதிகள் அனைத்தையும் ஆராய்ந்து விடை கண்டு விவரிக்கிறது.

இவ்வாறு பிரபஞ்ச மாற்றம் பற்றிய விஞ்ஞான அறிவு மார்க்ஸீய தத்துவம். இதன் உள்ளடக்கத்தை லெனின் மூன்று பிரிவுகளாகப் பகுத்தார்.

1. இயற்கை, மனிதன், சிந்தனை ஆகிய மூன்று வஸ்துகளைப் பற்றியும், அவற்றிடையே உள்ள உட்தொடர்புகளைப் பற்றியும், மாற்றங்கள், புனர் படைப்புகள் பற்றியும் ஆராய்ந்து பொது நியதிகளை வரையறுத்துக் கூறுகிற தத்துவப் பகுதிக்கு இயக்கவியல் பொருள் முதல்வாதம் (Dialectical materialism) என்று பெயர்.

2. மனிதன் சமூகக் கூட்டுகளை அமைத்துக் கொண்டு தனது கட்டமைப்புக்குத் தேவையான உணவு, உடை, உறையுள், மற்றும் வாழ்க்கைக்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்து கொண்டே கருத்துக்களையும், கலைகளையும், தத்துவங்களையும் படைத்து முன்னேறி உயர்நிலைகளுக்கு வளர்ச்சியடைகிறான். இது மனித வரலாற்றின் வளர்ச்சிப் போக்கு, மனித வரலாற்றின் எல்லா அம்சங்களையும் காரண காரியத் தொடர்புகளின் பொருத்தத்தோடு ஆராய்வது மார்க்ஸீயத் தத்துவத்தின் இரண்டாவது பகுதியாகும். இதனை வரலாற்றியல் பொருள் முதல்வாதம் என அழைக்கிறோம்.

3. மார்க்ஸ், எங்கெல்ஸ் காலத்தில் புரட்சிகரமான முதலாளித்துவ மாற்றங்கள் நிகழ்ந்து வந்தன. முதலாளித்துவத்தின் தோற்றத்தையும், அதன் உற்பத்தி முறை முரண்பாடுகளையும், அது இரண்டு புதிய வர்க்கங்களை அரசியல் அரங்கில் முன்னிறுத்துவதையும், இந்த சமுதாயம் எவ்வாறு

மாறும் என்பதையும் தம் ஆயுட் காலம் முழுவதும் ஆராய்ந்து மார்க்ஸ், ''மூலதனம்'' எனும் தனது நூலில் விளக்கமாக எழுதினுர். இந் நூல் உலகத்தில் விஞ்ஞானத்தால் உற்பத்தி சக்திகள் வரலாற்றில் என்றுமில்லாத அளவில் வளர்ந்திருக்கும் காலத்தில் தொழிலாளர் வர்க்கத்திற்கு பொருளாதாரம், முதலாளித்துவ வளர்ச்சி பற்றிய விஞ்ஞான பூர்வமான அறிவை அளித்து, அதன் இயக்கத்தில் நியதிகளை வெளிப்படுத்தி அச்சமுதாயத்தை மாற்றும் .வழிகளைக் கற்பித்தது. இதனை அரசியல் பொருளாதாரம் என்று கூறுகிறோம். இதனையே இரு பகுதிகளாகப் பிரித்து முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான சோஷலிசம் என்று தற்காலத்தில் கூறுகிறோம். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் என்ற மூன்று தத்துவாசிரியர்களின் நூல்கள் எழுதப்பட்டபின், சோஷலிஸ்ட் புரட்சி நடந்து, கருத்துலகில் மட்டும் நிலவியிருந்து சோஷலிச சமுதாயம் புறநிலை உண்மையாகி வளர்ச்சி பெற்றபின், அதன் இயக்கம் பற்றிய அறிவு ஒரு தனிப்பகுதியாகி விட்டது.

இதனால் மார்க்ஸீய தத்துவம் இன்று முக்கியமாக நான்கு பகுதிகளாகக் கற்றுக் கொள்ளப்படுகிறது.

இச் சிறு நூலில் மார்க்ஸீய தத்துவத்தின் இரண்டாவது பகுதியான வரலாற்றியல் பொருள் முதல்வாதம் (Historical Materialism) பற்றிய சில அடிப்படையான கருத்துக்களைக் காண்போம்.

### வரலாற்றுப் பொருள் முதல்வாதம்

வரலாறு (History) என்பது மனிதனின் சமூக சிந்தனைகளால், கருத்துக்களால் உருவானது என்று பழைய சித்தாந்தங்கள் கூறி வந்தன. பண்டைக்

காலத்திலிருந்து மிகப் புகழ்பெற்ற பொருள்முதல் வாதிகள் கூட வரலாறு கருத்துக்களாலேயே இயக்கப்படுகிறது என்று கூறி வந்தார்கள். எனவே வரலாறு ஆன்மீக உணர்வினாலேயே தூண்டப்பட்டு வந்தது என நம்பப்பட்டது. மார்க்ஸ்தான் இயக்க வியல் பொருள்முதல்வாதம் என்பது வரலாற்றிற் கும் பொருந்தும் என நிரூபித்தார். அதாவது, "மனிதனின் சமூக செயல்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறது" என்று மார்க்ஸ் கூறினார். இது வரலாறு பற்றி ஒரு புரட்சிகரமான கருத்தமைப்பை ஏற்படுத்தியது. அதாவது சமூகக் கருத்துக்கள் வரலாற்றை உருவாக்கவில்லை. சமூக செயல்கள் தான் வரலாற்றை உருவாக்குகின்றன என்பதே இப் புரட்சிகரமான கருத்து. மார்க்ஸ் குறிப்பிட்ட முதல் விஷயம்—"மனிதனது கருத்து, வரலாற்றை உருவாக்கவில்லை, மனிதனது செயல்கள்தான் உருவாக்குகின்றன" என்பது. இரண்டாவது விஷயம்—மக்களுடைய கூட்டு முயற்சியினால் நடக் கும் செயல்கள்தான் வரலாற்றை உருவாக்குகின் றன என்பது. இதனை அடிப்படையாகக் கொண்டு தான் மார்க்ஸும் எங்கெல்ஸும் மார்க்ஸீய வரலாற்றுத் தத்துவத்தை உருவாக்கினார்கள். அதற்கு முன்னால் மார்க்ஸ் இயக்கவியல் பொருள் முதல்வாத தத்துவத்தை உருவாக்கியிருந்தார். இது இயற்கை, மனிதன், சிந்தனை மூன்றிற்கிடையே யான உறவுகளின் பொது விதிகளை விளக்குவது. இவற்றை வரலாற்றுக்குப் பொருத்தி ஆராய்வதே பொருள்முதல்வாதம் ஆகும்.

பொருள்முதல்வாதம் முதலில் தோன்றியதா, வரலாற்றியல் பொருள்முதல்வாதம் முதலில் தோன் றியதா என்று கேட்பது சரியானதல்ல. இரண்டும் ஏககாலத்தில் தோன்றின. அவை ஒரே ஆணி வேரின் இரண்டு கிளைகள். மார்க்ஸும் எங்கெல்ஸும்

வாழ்க்கையை ஆராய்ந்தார்கள்; வாழ்க்கைக்கும் மனித சிந்தனைக்கும் உள்ள உறவுகளை ஆய்ந்தார்கள். சமூக வாழ்க்கைக்கும், சமூக சிந்தனைக்கும் உள்ள உறவையும் ஆராய்ந்தார்கள். மார்க்ஸும் எங்கெல்ஸும் எழுதிய கட்டுரைகளை கால வரிசைப் படுத்திப் பார்த்தால் ஒரு கட்டுரை தத்துவம் பற்றியதாக இருக்கும், மற்றொன்று வரலாறு பற்றியதாக இருக்கும். இரண்டிலும் அவர்கள் இயக்கவியல் பொருள்முதல்வாத விதிகளைப் பயன் படுத்தி ஆய்ந்தார்கள். ஏக காலத்தில் அவர்கள் இரண்டையும் ஒரே அடிப்படையின்கீழ் வளர்த்தார்கள். அதனால் அவர்கள் பொருள்முதல்வாதத்தையும், வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தையும் வளர்த்தார்கள். அதனால் எது முதலில் என்ற கேள்வி, முட்டை முதலிலா, கோழி முதலிலா என்ற அனாவசியக் கேள்வியைப் போலாகும்.

## 2. வரலாற்றியல் பொருள் முதல்வாதம் என்றால் என்ன?

**இது சமூக இருப்பு, சமூக உணர்வு** ஆகிய இரண்டிற்கும் இடையேயான உறவை அறிந்து விளக்க முயலுகிறது. பொருள்முதல்வாதம் இருப்பு, உணர்வு இவற்றின் தொடர்பை விளக்குகிறது. வரலாற்றியல் பொருள் முதல்வாதம் தொடர்பு பற்றிய விஞ்ஞானம்—இரண்டிற்கு முள்ள உறவை வரையறுப்பது. இதன்பொருள் என்ன?

*சமூக இருப்பு*—social being
*சமூக உணர்வு*—social consciousness

மனிதன் தனக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்கிறான். இது **பொருள் உற்பத்தி** எனப்படும். பொருள் உற்பத்தி செய்யும்போதே அவன் சிந்திக்கவும் செய்கிறான். அதனால் கருத்துக்களைப் படைக்கிறான். **கருத்து உற்பத்திக்கு** உதாரணங்கள் —விஞ்ஞானம், இலக்கியம், ஒழுக்கம், சட்டம், தத்துவம், கலைகள் இவை பொருள் உற்பத்தி எனும் புறவியல் அடிப்படைகளிலிருந்து பிறக்கும் மனப் பிரதிபலிப்புகள். சமூக இருப்பு சமூக உணர்வுகளுக்கிடையேயான உறவுகளைச் சுருக்கிக் கூறலாம். ஒரு சமுதாயத்தில், அதற்குத் தேவையான பொருள்களின் உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகள் இவற்றிற்கும், அச் சமுதாயத்தில் வாழும் மக்கள் இப் புறநிலைபற்றி மனதில் கொண்டிருக்கும் சிந்தனைகளுக்கும் தொடர்பு உண்டு. இந்தச் சிந்தனைகள் புறநிலை உண்மைகளின் பிரதிபலிப்புகளாக, அவற்றிற்கு ஏற்றதாக இருக்கும். இந்த உறவின் அடிப்படை பொருள் உற்பத்திதான். எனவே உற்பத்தி சக்திக்கும் உற்பத்தி முறையில் மக்கள் கொள்ளும் உறவிற்கும் உள்ள தொடர்பே இத் தத்துவத்தின் உள்ளடக்கம். மார்க்சிற்கு முந்திய தத்துவ ஆசிரியர்கள் அனைவருமே, மனிதன் சிந்திப்பதற்கு முன்னால் உணவு உட்கொளல் வேண்டும், உடை உடுத்திக் கொளல் வேண்டும், ஒரு இடத்தில் தங்கவேண்டும், ஓய்வு உறக்கம்வேண்டும் என்ற வாழ்க்கையின் புறத் தேவைகளை பொருளாயதத் தேவைகளை மறந்துவிட்டார்கள். மனிதனுக்கு தேவையெல்லாம் அவனது மனதிலுள்ள சிந்தனை மட்டும்தான் என்று எண்ணி வந்தார்கள். இப்படி அவர்கள் எண்ணி வந்ததால் அவர்களுக்கு நிழலே உருவமாகத் தோன்றியது. இந்த நிழல் நீண்டிருக்கிறதா, சிறுத்திருக்கிறதா

---

பொருள் உற்பத்தி—Material production
கருத்து உற்பத்தி—Spiritual production

என்று வேறு அவர்களுக்குள்ளேயே விவாதத்தில் இறங்கினூர்கள். இதனுல் சமூக அமைப்பிற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு பற்றிப் பேசும் போது முதலில் வாழ்க்கைத் தேவைகளே, உற்பத்தியை எப்படிப் பெறுகிருன், அதாவது உற்பத்தி முறை ஒவ்வொரு காலக் கட்டத்திலும் எப்படி இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். அப்போதுதான் உண்மையான மனிதனே அறிய முடியும். மனிதன் உற்பத்தி செய்யும்போது அதன் விளேவாகத் தோன்றும் அனுபவ சிந்தனேப் பிரதிபலிப்புத்தான் சிந்தனே அல்லது கருத்து பொருள்தான் மூலம். சிந்தனே அதிலிருந்து பெறப்படுவது (Derivative). எனவே வரலாற்றியல் பொருள் முதல்வாதம் என்பது ஒவ்வொரு காலகட்டத்திலுள்ள உற்பத்தி முறைகளே அறிந்து அந்தந்தக் கால கட்டங்களின் உற்பத்தி முறைகளின்கீழ் மனிதர்கள் எத்தகைய உறவுகளேக் கொண்டிருந்தார்கள் என்பதை விளக்குவது. வாழ்க்கைக்கும், உற்பத்தி முறைக்கும் உள்ள உறவை அறியாததனுல், மேற்கோப்புகளான, பிரதிபலிப்புகளான தத்துவம், கலே, இலக்கியம், சட்டம் போன்ற கருத்துக்களேயே வாழ்க்கையின் அடிப்படையாகக் கருதியதில் இருந்து முரண்பட்டு மார்க்ஸ், எங்கெல்ஸ் வரலாற்றியல் பொருள் முதல்வாதத்தை உற்பத்தி முறையின் அடிப்படையில் அமைத்தனர்.

## 3. உற்பத்தியும்—உற்பத்தி உறவுகளும்

**நா**ம் போராடுவது, கம்யூனிஸ்ட் கட்சி போராடுவது, தொழிலாளர் வர்க்கம் போராடுவது சமுதாயத்தின் பொருள் உற்பத்தி முறையை மாற்று

வதற்காக. பொருள் உற்பத்தி முறை மாறும் போது சமூக உறவு முறையும் மாறிவிடும். உதாரண மாக முதலாளித்துவ சமுதாய அமைப்பில் பொரு ளுற்பத்திக்கான இயந்திரங்கள் எல்லாம்—சுரங்கங் கள், தொழிற்சாலைகள்,வயல்கள், மின்சாரம் முதலா னவை ஒரு குறிப்பிட்ட அளவு வளர்ச்சி அடைந் துள்ளன. இதற்கு முந்திய நிலஉடைமைச் சமுதாய அமைப்பில் இந்த அளவிற்கு இந்த உற்பத்தி சக்திகள் வளர்ச்சி அடையவில்லை. இந்த அளவிற்கு உற்பத்தி தேவைப்படவுமில்லை. காரணம் 200 வருடங் களுக்கு முந்தைய உலக ஜனத்தொகைக்கு இன்று எவ்வளவோ அதிகமாகிவிட்டது.

இந்த உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் முத லாளிகளுக்கு சொந்தமாக இருக்கின்றன. உழைக்கக் கூடியவர்களுக்கு உற்பத்தி சாதனங்கள் சொந்த மாக இல்லை. ஆனால் இந்த இருவருமே அதாவது உற்பத்தி சாதனங்களின் உடைமையாளர்களும், உழைப்பவர்களும் தங்களுக்காக மட்டும் உற்பத்தி செய்யவில்லை, சமுதாயத்திற்காகத்தான் உற்பத்தி செய்கின்றனர். எனவே அவர்கள் சமூகத்திலிருந்து தனிமைப்பட்டு இயங்கவில்லை. உற்பத்திப் பொருட் களை சமுதாயம் முழுவதிலுமுள்ள மக்களுக்கு விநி யோகம் செய்வதன் மூலம், உற்பத்தியாளர்கள் சமூகத்துடன் உறவு கொள்கிறார்கள்.

இந்த வகையான சமூக அமைப்பில் சமூக உறவு களின் நிலை என்ன? உற்பத்திச் சாதனங்கள் யாருக் குச் சொந்தமாக இருக்கின்றன? இதில் உழைப் பினைச் செலுத்தும் தொழிலாளர் கொள்ளும் பங்கு என்ன?—என்பவற்றைக் காண்போம். **கூலியுழைப்பு** இதுதான் அடிப்படை. உற்பத்தியாகும் பொருட் கள் சமூகத்தில் பொதுமக்களால் விலை கொடுத்து

கூலியுழைப்பு—Wage labour.

வாங்கப்படுகிறது. மக்கள் கொடுக்கும் விலையில் ஒரு பகுதி அந்தப் பொருளின் மதிப்பில் சம்பந்தப்படாத சாதனங்களின் சொந்தக்காரனைப் போய்ச் சேருகிறது. எனவே ஒரு குறிப்பிட்ட சமுதாய அமைப்பில் உற்பத்திக்குக் காரணமான உடைமைகளின் சொந்தக்காரனாக இருக்கும் வர்க்கம்தான் ஆளும் வர்க்கம் ஆகிறது. அந்த ஆளும் வர்க்கத்தின் சிந்தனை தான் அந்தச் சமுதாயம் முழுவதிலுமுள்ள மற்ற வர்க்கங்களின் சிந்தனையாக அமையும். அதற்காக அந்த சிந்தனைகளை அனைவரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்பதுஅர்த்தமல்ல. ஆனால் ஆளும் வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்தின் சிந்தனைகளும், சட்டங்களும், தத்துவங்களும், இலக்கியமும், ஒழுக்க நெறிகளும்தான் பரப்பப்படும்—அமுல் நடத்தப்படும். அதற்கான அதிகாரம் அவர்களிடம்தான் இருக்கும். அதேசமயம் மற்ற வர்க்கங்களின் சிந்தனை கட்டுப் படுத்தப்படும். அதற்காக சிந்தனையே தோன்றாது என்பதல்ல. அந்தந்த வர்க்கத்தில் உள்ளவனுக்கு அந்தந்த வர்க்கத்தின் சிந்தனை எழத்தான் செய்யும். ஆனால் சட்டத்தின் மூலமும், பிரச்சாரத்தின் மூலமும், ஒழுங்கு முறைகளின் மூலமும் மற்ற வர்க்கங்களின் சிந்தனைகள், கருத்துக்கள் எழவொட்டாமல் தடுக்கப்படும். இவ்வாறாகத்தான் தத்துவம், இலக்கியம், சட்டம் இவற்றிற்கும் உற்பத்தி முறைகளுக்கும் இடையேயுள்ள சமூக உறவு முறைகளை மார்க்ஸும் எங்கெல்ஸும் விவரித்தார்கள். இதிலிருந்துதான் இலக்கியம் என்றால் என்ன, தத்துவம் என்றால் என்ன என்று தனித்தனியாக பின்னர் விளக்கினார்கள். முந்தைய ஆசிரியர்கள் வாழ்க்கையின் அடிப்படையையே மறுத்ததால் இவற்றை விளக்க முடியவில்லை. மார்க்ஸும் எங்கல்ஸும்தான் விளக்கினார்கள். எனவே சமூக வளர்ச்சி பற்றிய சரித்திரவியல் பொருள் முதல்வாதத்தின் தோற்றம்

ஒரு மாபெரும் பரட்சி அதனை ஏற்படுத்தியவர்கள் மார்க்ஸும் எங்கெல்ஸும்.

காலங்காலமாக உற்பத்தி சாதனங்கள் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. அந்தந்த சமுதாய தேவைகளுக்கேற்ப, உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக அவற்றிற்குத் தகுந்தாற்போல உற்பத்தி சாதனங்களும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. உற்பத்திச் சாதனங்களை அழித்துவிட்டு சமுதாயத்தை மாற்ற முடியாது. சமுதாயத்தை மாற்றுவது என்பது, உற்பத்தி சாதனங்கள் யாருடைய கட்டுப்பாட்டினுள் இருக்கிறது, உற்பத்தியாகும் பொருள்கள் யாருக்குச் சொந்தமாக இருக்கிறது என்பதைப் பற்றியது. உற்பத்திச் சாதனங்கள் அந்த சமுதாயத்தின் ஒரு சிறுபான்மையினருக்கு சொந்தமாக இருந்தால், அங்கு தயாராகும் பொருள்கள் அந்தச் சிறுபான்மையினரின் லாபநோக்கு என்னும் வட்டத்தினுள்தாம் அமையும். ஆனல் உற்பத்தியான பொருள்களோ, சமுதாயம் முழுவதிலுமுள்ள மக்களால் உபயோகிக்கப்படும் சமூகத் தன்மை உடையது. உற்பத்தியாகும் பொருள்களை முதலாளி மட்டும் வைத்துக் கொள்வதில்லை. அவை மக்களுக்கு விலைக்கு விற்கப்படுகிறது. இந்த உற்பத்திக்குக் காரணமாக தனது உழைப்பைச் செலுத்தக்கூடிய தொழிலாளி தன்னுடைய உழைப்பைக் கொடுத்து ஒருபகுதி தனக்குக் கூலியாகப் பெறுகிறுன். ஒரு பகுதியை உபரி உழைப்பாக முதலாளிக்கும் கொடுக்கிறுன். அப்படியானல், சமுதாய மாற்றத்திற்கு உற்பத்தி சாதனங்கள் தனியுடைமையாளர்களிடமிருந்து மாற்றி சமுதாயம் முழுமைக்கும் சொந்தமானதாக மாற்ற வேண்டும். அப்படியென்றுல்- உற்பத்தி சாதனங்களை ஒரு இடத்திலிருந்து மாற்றி இன்னேரிடத்தில் கொடுப்பதுதான் சமுதாய மாற்றமா? உற்பத்தி உடைமைகளை எல்லோருக்கும்

உடைமைகளாக்குவதும், உற்பத்தி பொருள்களை எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்வதும்தான் சமுதாய மாற்றம். எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்வது என்றால்—காமராஜ் சொல்லியது மாதிரி ஒரு தொழிற்சாலையை அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்து ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்து விடுவதா? இதுதான் சோஷலிசமா? அப்படிச் செய்தால் உற்பத்தியே நடக்காது. சோஷலிச மாற்றம் என்பது மக்களுக்காக உற்பத்தி செய்யும் தொழிற் சாலையை அல்லது அந்த உற்பத்தி சாதனத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சர்க்காரிடம் ஒப்படைப்பது. அந்த சர்க்கார் உடைமை வர்க்கத்தின் சர்க்கார் அல்ல. சுரண்டப்பட்ட வர்க்கங்களின் அரசு இந்த சர்க்கார். முதல் கட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் சர்க்காராக இருக்கும். இது தான் அதிகார மாற்றம் அல்லது சமுதாயப் புரட்சி என்பது. இந்த அதிகாரம், தனி உடைமையை ஒழிக்கப் பயன்படுத்தப்படும்.

உடைமை மாறியதும் நோக்கமும் மாறி விடுகிறது. அது எப்படி? முதலாளித்துவ சர்க்காரின் கீழுள்ள தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதின் நோக்கம்—லாபம்தான். அதாவது முதலாளித்துவ சுரண்டல் தான். தொழிலாளியின் உழைப்பின் ஒருபகுதி லாபம் என்ற பெயரில் முதலாளிக்குச் சென்று சேருகிறது. அதாவது தொழிலாளியின் உழைப்பினால் உண்டாகும் உபரி உழைப்பு. லாபம் கிடைக்காது என்று சொன்னால் முதலாளி பொருளை உற்பத்தி செய்வானா? விலை குறைகிறது என்பதனால் அமெரிக்காவிலுள்ள முதலாளிகள் கார்களை உற்பத்தி செய்வதைக் குறைத்துள்ளார்கள். கோயம்புத்தூர் பஞ்சாலைத் தொழிலதிபர்கள் துணிஉற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்று கூடி பேசியுள்ளார்கள்.

எனவே உற்பத்தி முதலாளிக்கு லாபம் தருவது. ஆனல் மக்களுக்குச் சமூகத் தேவை. அதேசமயம் தொழிலாளிக்கு அதுதான் கூலி. ஆக, சமுதாய அமைப்பு மாறும்போது இதுபோன்ற நோக்கங்கள் மாறுதலடைகின்றன. உற்பத்தியின் நோக்கம் சமுதாயத்தின் அனைத்துப் பகுதியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வது என்றாகிறது. உற்பத்தியின் நோக்கம் உற்பத்தியில் உழைப்பை செலுத்துகின்ற தொழிலாளிக்கு மட்டுமல்லாமல், உற்பத்தி பொருள்களை உபயோகிக்கின்ற அனைத்துப் பகுதியினரின் தேவைகளை பூர்த்தி செய்வது என்றாகிறது. நோக்கம் மாறிவிடுகிறது. நோக்கம் மாறும்போது தனி மனித லாபம் என்ற அச்சமே இல்லாமல் போய்விடுகிறது. லாபம் ஒன்றுக்காக மட்டும் உற்பத்தி செய்யப்பட்ட தேவையில்லாத பொருள்களின் உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. உதாரணமாக ஒரு கம்பெனி முகத்தில் பூசக்கூடிய பவுடர் தயாரிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதே கம்பெனி ஒரு மருந்தினையும் தயாரிக்கிறது என வைத்துக்கொள்வோம். குறிப்பிட்ட ஒரே ஒரு ரசாயனப் பொருளைச் சேர்த்தால் பவுடர் மருந்தாகிவிடும். உலகம் முழுமைக்கும் ஏராளமான மருந்து தேவைப்படுகிறது. அது அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்று மாதத்திற்கு மருந்து உற்பத்தி நிறுத்தப்படும். உலக மார்க்கெட்டில் மருந்தின் தேவையினல், அதன் விலை அதிகமாகிவிடும். இதை எதிர்பார்த்துத்தான் முதலாளி திட்டமிட்டு உற்பத்தியை நிறுத்துகிறான். மற்றொரு மூன்று மாதத்திற்கு பவுடர் உற்பத்தி நிறுத்தப்படும், அதனுடைய விலையும் கூடும். முதலாளி அதிக லாபம் சம்பாதிக்க முடிகிறது. எனவே முதலாளித்துவ அமைப்பில் உற்பத்தியின் நோக்கம் லாபம் என்பது மட்டும்தான். மக்களின் தேவைகளைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. உற்பத்தியின்

நோக்கம் மாறும்பொழுது, தேவைப் பொருள் தான் உற்பத்தி செய்யப்படும்.

1942-43-ல் இந்தியாவில் கடுமையான பஞ்சம். அதே சமயத்தில் கோதுமை அமெரிக்காவில் அதிக உற்பத்தியாகியிருந்தது. லாபம் குறைந்தது, லாபம் குறைகிறது என்பதற்காக அமெரிக்க முதலாளிகள் கோதுமையைக் கப்பலில் ஏற்றி கடலில் கொண்டு போய்க் கொட்டினார்கள். இதேபோல சில வருடங்களுக்கு முன்னால் அமெரிக்காவில் உருளைக்கிழங்கின் விளைச்சல் அதிகரித்தது. உலக மார்க்கெட்டில் விலை குறைந்தது. அமெரிக்காவின் உருளைக்கிழங்கு முதலாளிக்கு லாபம் குறைந்தது. உடனே கென்னடிஅரசு ஒரு சட்டம் இயற்றியது. அதன்படி, உருளைக்கிழங்கு விளையக்கூடிய நான்கு மாகாணங்களிலுள்ள வயல்களிலிருந்து உருளைக்கிழங்கு எடுக்கப்படவில்லை. வயல்களிலேயே அழுக விடப்பட்டது. அதற்கான மார்க்கெட் விலையை விவசாயிகளுக்கு அரசாங்கமே கொடுத்தது. ஆனால் அதே சமயத்தில் அமெரிக்காவின் தென்பகுதியிலுள்ள நீக்ரோ மக்கள் பசியினால் செத்தார்கள். அதைப்பற்றி அந்த நாட்டு அரசாங்கமோ, அந்த நாட்டு முதலாளிகளோ கவலைப் படவில்லை. நியூயார்க் நகரத்தில் மட்டும், ஒரே ஒரு மாதத்தில் மட்டும் ஒரு மில்லியன் லிட்டர் பால் சாக்கடையில் கொட்டப்பட்டது. ஏனெனில் பாலின் விலை குறைந்துவிட்டால் லாபம் குறையும். பால் கிடைக்காவிட்டால் விலை சரியும். அப்படியானால், நியூயார்க் நகரத்தில் அனைவருக்குமே போதுமான அளவு பால் கிடைத்துவிட்டது என்பதல்ல. எத்தனையோ நீக்ரோ குழந்தைகள், தொழிலாளர் குழந்தைகள் பாலின்றி தவித்தன. முதலாளிக்கு லாபம் குறைகிறது என்றால் லாபத்தை அதிகப்படுத்த சகல வழிகளையும்—அதனால் எத்தனை உயிர்கள் அழிந்தாலும் சரி—கையாளுவான்.

இவ்வுதாரணங்கள் எதனை விளக்குகின்றன என்றால்—உற்பத்தியின் தன்மை, உற்பத்தியின் நோக்கம் முதலாளித்துவ உற்பத்தி முறையில் எப்படி அமைகிறது என்பதைத்தான். உற்பத்திச் சாதனங்கள் தனி மனித உடைமையாக இருப்பதே, முதலாளித்துவ அமைப்பில் உற்பத்தியின் தன்மையாகும். உற்பத்தியின் நோக்கம், தனி முதலாளிகளின் லாபம்.

இந்த உற்பத்தி முறையில் தொழிலாளி வர்க்க நாடுகளின் முதலாளி வர்க்கமும் பங்கு கொள்ளுகின்றன.

சமுதாய வரலாற்றை அறிவதற்கு வர்க்கங்கள் என்றால் என்ன என்பது பற்றியும், ஒவ்வொரு சமுதாய அமைப்பை மாற்றுவதில் அவற்றின் போராட்டத்தின் தன்மை பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். முதலாளித்துவத்திற்கு எதிரான தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில், போராட்ட முறைகளை வகுக்க வர்க்கப் போராட்டம் வர்க்க நலன்கள் பற்றிய விஞ்ஞான ரீதியான அறிவு அவசியம்.

லெனின் வர்க்கம் என்ற கருத்தை பின்வருமாறு வரையறுத்தார்: "வர்க்கங்கள் என்ற பெருங் குழுக்கள், பின்வரும் அம்சங்களில் வேறுபடும். மனிதர்களைக் கொண்டதும் வரலாற்றால் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தியில், (1) தங்களுடைய ஸ்தானம் உற்பத்திச் சாதனங்களில் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட ஸ்தானம், (2) இதன் விளைவாக உற்பத்தியில் அவர்களுக்குக் கிடைக்கும் பங்கு. இவற்றால் வேறுபட்டவர்கள் வர்க்கங்களில் ஒன்றைச் சேர்ந்த மனிதர்கள், சமூகத்தில் தங்களுக்கிருக்கும் ஸ்தானத்தால், மற்றோர் வர்க்கத்தைச் சேர்ந்த மனிதர்களின் உழைப்பைச் சொந்தமாக்கிக்கொள்ள

முடியும். இதனுல் அவர்களிடையே பகைமை நிலவும் வர்க்கங்கள் தங்கள் நலன்களுக்காகப் போராடும். இதுவே வர்க்கப் போராட்டம்.

நான் இதுவரை கூறி வந்துள்ள உதாரணங்கள் முதலாளித்துவ சமுதாய அமைப்பிலிருந்துதான். ஆனுல் வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தின் அடிப்படை விதிகள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத் திற்கு மட்டும்தான் பொருந்தும் என்று எண்ணக் கூடாது. மனித வரலாறு முழுமைக்கும் பொருந்தக் கூடியது. எனவே, மனித வரலாற்றில் எத்தனை விதமான சமுதாய அமைப்புகள் இருந்தன—அவை ஒவ்வொன்றும் எப்படி மாறுதலடைந்து வந் துள்ளன, இம் மாறுதல்களின் இயக்க விதிகள் என்ன என்பதை அறியும் விஞ்ஞானமே வரலாற் றியல் பொருள்முதல்வாதம் ஆகும்.

## 4. உற்பத்தி சக்திகள்—புரட்சி

மனிதன், தனக்குத் தேவையான பொருள் களைத் தானே உற்பத்தி செய்யத் தொடங்கியதி லிருந்துதான் விலங்கு வாழ்க்கையிலிருந்து வேறு படத் தொடங்கினுன். இதனை எங்கெல்ஸ் ஓரிடத்தில் வேடிக்கையாகச் சொல்லியிருக்கிருர். சிமியன் எனும் ஒருவகைக் குரங்கின் கையமைப்பு 1850-ம் ஆண்டிலிருந்ததைப் போலவே சுமார் 10 லட்சம் வருடங்களுக்கு முன்புமிருந்தது. ஆனுல் மனிதனுடைய கையமைப்பு சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்குள்ளேயே மிக வேகமாக மாறி வந் திருக்கிறது. இதனை எங்கெல்ஸ், என்னே மனித கைகளின் மகத்துவம் என்று வியக்கிருர். இதை

எதற்காக இங்கே குறிப்பிடுகிறேன் என்ருல், அந்தக் குரங்கின் கையமைப்பு மாற வாய்ப்பு ஏற்பட வில்லை. காரணம் அது கருவிகளைப் பயன்படுத்துவ தில்லை. தனக்குத் தேவையான பொருள்களை தானே உற்பத்தி செய்யும் உற்பத்தியாளன் அல்ல. ஆனுல் மனிதன் தனக்குத் தேவையான பொருள் களைத் தானே உற்பத்தி செய்து கொள்கிருன். இதனுல் கையமைப்பு, தேவைக்குத் தகுந்தாற்போல மாறுதலடைய அவனுக்கு வாய்ப்பு உண்டு. கையமைப்பு மட்டுமல்ல—கையின் வளர்ச்சியோடு உடலமைப்பு வளர்ச்சியும், மூளை வளர்ச்சியும் தொடர்ந்து இணையாக உழைப்பினுல் அவனுக்கு உண்டாகிறது.

என்றைக்கு மனிதன் கருவியைச் செய்யத் தொடங்குகிருனே அன்றிலிருந்து, இயற்கையின் கொடுமையிலிருந்து, இயற்கைக்குக் கட்டுப்பட்டு இயற்கையை முழுக்க முழுக்க நம்பி வாழ்ந்த நிலையி லிருந்து விடுதலை பெறுகிருன். எவ்வளவுக் கெவ்வளவு இயற்கையை எதிர்பாராமல் தனக்குத் தேவையான பொருள்களை தானே சுயமாக உற்பத்தி செய்ய மனிதனுல் முடிகிறதோ அந்த அளவிற்கு அவன் இயற்கையிலிருந்து விடுபடுகிருன்.

இயற்கையிலிருந்து படிப்படியாக மனிதன் விடுதலை பெற்று, விஞ்ஞான அறிவின், விஞ்ஞானத் தின் பயனை உணரும்போதுதான் மனிதன் வளரு கிருன். மனித சமுதாயத்தின் வளர்ச்சி தொடர் கிறது. இதை மார்க்ஸ் ஓரிடத்தில் உதாரணத் துடன் விளக்குகிருர். ஜெர்மன் நாட்டு விவசாயிகள் தமது விடுதலைக்காகக் குரல் கொடுத்துக்கொண்டு இருந்தனர். அப்போது மார்க்ஸ் சொன்னுர், ''இந்த விடுதலை, விடுதலை எனும் குரல் மட்டும் விடுதலையைக் கொண்டு வராது. நீராவியின் உபயோகமும் அதைத்

தொடர்ந்து விஞ்ஞான வளர்ச்சியும்தான் ஜெர்மெனிய மக்களுக்கு விடுதலையைத் தேடித்தரும்'' என்றார். நீராவி எப்படி விடுதலை தரும்? நீராவியின் உபயோகம் வளர்ந்தால் முதலாளித்துவம் வளரும். முதலாளித்துவம் வளர வளர அதற்கு இணையாகவே தொழிலாளர் வர்க்கமும் அதன் ஒற்றுமையும் வளரும். தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமை வளர்ந்தால் சமுதாய மாற்றம் அல்லது புரட்சிக்கான பக்குவ நிலைமையும் வளரும்; சமுதாய புரட்சி ஏற்படும். மக்களுக்கு விடுதலை கிடைக்கும் என்பதையே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வளர்ச்சிகள் இயற்கை விதிகளின் அடிப்படையில் நடைபெறும், அவை தவிர்க்க முடியாதவை. இதுதான் மார்க்ஸ் குறிப்பிட்ட பொருள் முதல்வாதத்தின் இயக்கயியல் குணம்சம். ஆனால் இதற்கிடையில் மனிதன் செய்ய வேண்டியதும் ஒன்று உண்டு. தவிர்க்க முடியாதபடி நடக்கப் போகின்றவைதாமே என மனிதன் கையைக் கட்டிக் கொண்டு இருந்துவிட முடியாது. பலமான எதிர் சக்திகள் இந்த வளர்ச்சியை தாமதப்படுத்தலாம் அல்லது திசைதிருப்ப முயலலாம். எனவே அடிப்படையான விதிகளை உணர்ந்து மனிதன் வளர்ச்சிப் போக்கை வழிப்படுத்த வேண்டும். விளக்கு எரிய தூண்டுகோலும்தான் தேவை. ஒரு பெண் கருவுற்றிருக்கிறாள் என வைத்துக் கொள்வோம். ஒரு குறிப்பிட்ட காலத்தில், பிரசவத்திற்கான நிலையை அடைகிறாள். விஞ்ஞான விதிகளின்படி நிச்சயமாக குழந்தை பிறக்கத்தான் போகிறது. இருப்பினும் இடையில் ஒரு தாதி தேவைப்படுகிறாள். அந்தத் தாதிதான் புரட்சி. அதாவது நிலைமைகள் பக்குவமடைந்து ஒரு சமுதாய மாற்றத்திற்கு தயாராக இருந்தாலும் அதனை வழிநடத்திச் செல்ல ஒரு தாதி தேவை. இயற்கையான விதிகளுக்குட்பட்டு இயங்

கும் சமுதாய மாற்றத்தினை உடனிருந்து முழுமை யாக்கும் தாதிதான் புரட்சி.

இப்படி ஒவ்வொரு அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்புமுகிழ்த்தெழும்போதும் ஒரு தாதி தேவைப் படுகிறாள். இந்த அடிப்படையில் ஐந்து விதமான சமுதாய அமைப்பு முறைகளையும் அவை அடைந்த மாற்றங்களையும் நாம் வரலாற்றில் காண்கிறோம். இவற்றைப்பற்றி மார்க்ஸ் முதலில் ஜெர்மன் தத்துவ ஞானம் (German Ideology) எனும் நூலில் எழுதி னார். **பியூர்பாக்** எனும் புகழ் பெற்ற ஜெர்மன் பொருள்முதல்வாத தத்துவாசிரியருக்கு எழுதிய பதிலாக இந் நூல் அமைந்தது. பியூர்பாக்கின் பொருள்முதல்வாதம், கருத்து முதல்வாதத்தை எதிர்த்து வாதாடுவது வரையில் சரி, ஆனால் அவை கருத்துலகில் நின்றுவிடுகின்றன. சமுதாய மாற்றத் திற்கான வழிமுறைகளை பியூர்பாக் காட்டவில்லை என்று மார்க்ஸ் அந்நூலில் சுட்டிக் காட்டியிருந்தார். அந்நூலில் அதற்கு முந்தைய நான்கு விதமான சமுதாய வர்க்க அமைப்பு முறைகளைச் சுட்டிக் காட்டி அவை மாற்றமடைந்ததற்கான வர்க்கப் போராட்டங்களின் தன்மையையும் அவர் குறிப் பிட்டார்.

இவ்வாறு சொல்லி வரும்போது அந்தந்த சமுதாய அமைப்புகளிலிருந்த உற்பத்தி முறைகளைக் கூறி, அங்கெல்லாம் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத் திக்கும் இடையிலிருந்த உறவுகளையும்கூறி மார்க்ஸ் தனது கருத்தை நிலைநாட்டுகிறார். அவை பற்றி இனி நாம் இந்நூலில் சிறிது காண்போம்.

பியூர்பாக்—Feurbach

# 5. வர்க்க சமுதாய அமைப்புகள்

ஆரம்பத்தில் நீண்ட நெடுங்காலமாக மனித சமுதாயம் புராதன கம்யூனிச சமுதாயமாக இருந்தது. அப்பொழுது உபயோகப்படுத்தப்பட்ட உற்பத்திக் கருவிகள் எல்லாம் மிகப் பிற்போக்கானவை. முன்னேற்ற மடையாதவை. கற்கருவிகள். வெறும் பாறையாக இல்லாமல், நீண்ட கல்லாக, உபயோகத்திற்குத் தகுந்த கல்லாக இருக்கும். அவ்வளவுதான். நம் தமிழ் நாட்டையே இதற்கு உதாரணமாகக் காட்டலாம். தமிழ் நாட்டில் எவ்வளவு காலத்திற்கு முன்பிருந்து மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பதை வரையறுத்துக் கூற இயலாது. ஆனால் இத்தனை வருடங்களுக்கு முன்னால் மனிதன் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து அறிந்து சொல்லியிருக்கின்றார்கள். தமிழ் நாட்டிற்கு வந்து பழங்கால மக்கள் உபயோகித்த கருவிகளையும், அவர்களது எலும்புகளையும் தோண்டியெடுத்து ஆராய்ந்தறிந்த அறிஞரின் பெயர் புருஸ் புட் என்பதாகும். இவர் சென்னையருகிலுள்ள பல்லாவரம் எனும் ஊரில் அகழ்ந்து எடுத்து ஒரு எலும்பைக் கண்டு பிடித்தார். அது சுமார் 4லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனுடையது என்று அவர் ஆராய்ந்து கூறினார். அதைத் தொடர்ந்து அவரது மாணவர்களில் பலர் செங்கல்பட்டு மாவட்டத்தில் பல பகுதிகளில் ஏராளமான எலும்புகளைக் கண்டு பிடித்துள்ளனர். இத்தோடு கருவிகளும் கிடைத்துள்ளன. ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் கிடைக்கும் கருவி அதே ஆழத்தில் கிடைக்கும் எலும்புக்கூடு மனிதன் உபயோகித்த கருவி எனக் கணக்கிடலாம். இந்தியா முழுவதும் இது போன்ற கற்கால மனிதர்கள் வாழ்ந்த அடையாளங்கள் கிடைத்துள்ளன. பண்டைக் காலம் மனிதர்

களில் இவன் நியாண்டர்தால் மனிதன் என்றே ஆராய்ச்சியாளர்களால் அழைக்கப்படுகிறன். இதே போல பீகிங் மனிதன், லூரவா மனிதன்ஆகியோரும் பல இடங்களில் வாழ்ந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது இங்கெல்லாம் நாலு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னல் மனிதர்கள் வாழ்ந்திருக்கிறர்கள். அவர்கள் உபயோகித்த கற்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் ஒரு அகழ்வாராய்ச்சியாளர் வடஆப்பிரிக்காவில் சுமார் 20லட்சம் ஆண்டுகளுக்கு முன்னல் மனிதன் வாழ்ந்திருப்பதாகவும் அதற்கு ஆதாரங்களாக எலும்புக் கூடுகளும், கற்கருவிகளும் கிடைத்துள்ளதாகவும் கூறியுள்ளார். தந்தையும் மகனுமாக லீக்கி என்ற பெயருடைய ஆய்வாளர்கள் நூற்றுக்கணக்கான எலும்புகளைத் தோண்டியெடுத்து காலத்தை நிர்ணயித்துள்ளனர்.

இந்தப் பழங்கால மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்திருக்கிறர்கள். அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள் மொத்தமாக அந்தக் கூட்டத்திற்கே சொந்தமாக இருந்தது. விலங்கு நிலையிலிருந்து சிறிதே வளர்ச்சி பெற்றிருந்த மனிதன் இயற்கையின் அத்தனை நிகழ்ச்சிகளையும் கண்டு அஞ்சி வாழ்ந்தான். அவற்றின் காரண காரிய விளக்கங்கள் அவனது அறிவுக்கு எட்டாதவை. இடி, மழை, புயல், வெள்ளம், நிலநடுக்கம் போன்ற நிகழ்ச்சிகளுக்கும், பயங்கர விலங்குகள் போன்ற அபாய விலங்குகளுக்கும் அஞ்சி கூட்டமாகவே வாழ்ந்திருந்தான். இவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, தன்னிடமுள்ள முன்னேறுத ஆயுதங்களை மட்டும் நம்பி அவன் உயிர்வாழ முடியாது. வேட்டையாடி, மிருகங்களைக் கொன்று உயிர்வாழ வேண்டியிருந்ததால், தனது வாழ்க்கைத் தேவைகளுக்காகவும், தனது பாதுகாப்பிற்காகவும் கூட்டம் கூட்டமாகவே வாழ்ந்து வந்தான். அவர்கள் உபயோகித்து வந்த

ஆயுதங்கள் அனைத்துமே அந்தக் கூட்டத்திற்கே சொந்தமாக இருந்தது. இந்தக் கருவிகளைப் பயன் படுத்தியே அந்தக் கூட்டத்திற்குத் தேவையான பொருள்களை மனிதன் பெற்றுக் கொண்டான்.

என்றைக்கு மனிதன் கருவிகளை உபயோகிக்கத் தெரிந்து கொண்டானோ, அன்றையிலிருந்தே கருவி கள் வளர்ச்சியடையவும் தொடங்கி விட்டன. கிடைக்கும் கற்களின் அமைப்பு, அனுபவத்தினால் கிடைக்கும் அறிவு, ஆகிய இவை கருவிகளின் நுட் பத்தை வளர்த்தன. இந்த மனிதர்கள் ஒரு இடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு போகும்போது இன் னும் அந்தக் கருவிகள் வளர்ச்சியடைந்தன. அந்தந்த இடங்களுக்குத் தகுந்தாற்போல கருவி களின் அமைப்பும் விரிவடைந்தன.

இந்தக் கருவிகளின் அடிப்படையில் கற் காலத்தை மூன்று விதமாகப் பிரிக்கலாம்: பழங்கற் காலம், இடைக்கற்காலம், புதுக்கற்காலம் என்பவை அவை.

இவ்வாறாக மனிதன் மிக நீண்ட காலமாக கற் கருவிகளை உபயோகித்து வாழ்ந்திருக்கிறான். இதனை சுமார் 20 லட்சம் வருடங்களாகக் கணக்கிட்டிருக் கிறார்கள் (இதில் கருத்து வேறுபாடுகள் உண்டு). வாழ்க்கையில் மனிதனுக்கு தேவைகள் அதிகமாகிக் கொண்டே வரும். ஜனத்தொகையும் அதிகமாகிக் கொண்டே வரும். ஜனத்தொகை அதிகமாக வேண்டியது அவர்களுக்கு அத்தியாவசிய தேவை யாகும். ஏனெனில் வேட்டைச் சமுதாயத்தால் உயிர்ச்சேதம் மிக அதிகம். ஒரு கூட்டமாக மனிதர் கள் வேட்டைக்குச் செல்வார்கள். திரும்பும்போது கூட்டத்தின் ஒரு பகுதிதான், மிருகங்களிடமிருந்து தப்பி உயிரோடு வர முடியும். எனவே ஜனத் தொகை அதிகரிப்பு என்பது அந்தக் காலத்தில்

கூட்டம் நிலைத்திருப்பதற்கே அவசியமாக இருந்தது.

திருமண விஷயத்திலும் எந்த விதமான கட்டுப்பாடும் கிடையாது. ஒரு குழுவினுள் யாரும் யாருடனும் பாலுறவு கொள்ளலாம் என்பதே நியதி. இதற்கு கொஞ்ச காலத்திற்குப் பிறகுதான் சில கட்டுப்பாடுகள் வந்தன. ஒரு கணத்திலுள்ள ஆண்கள் மற்றொரு கணத்திலுள்ள பெண்களை மட்டும் தான் மணந்து கொள்ளலாம் என்று ஏற்பட்டது. இது புராதன கோத்திர முறை மணமாகும். இந்த வகையான வாழ்க்கையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது, இரும்பின் உபயோகம் தெரிய வந்ததன் பிறகு தான். அதாவது, இரும்பின் உபயோகம் தெரிய வந்தது, மாபெரும் உற்பத்தி புரட்சி எனலாம் (Pro ductionRevolution). நிலத்தைஉழுது உற்பத்தியைப் பெருக்குவதற்கு இரும்பு உதவியது. இதே காலத்தில் சக்கரத்தின் தொழில் நுட்பமும் தெரிய வந்தது. இதன்பின், வண்டிகளின் மூலம் ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்கு பொருள்களை எடுத்துச் செல்ல உதவியது. பொருள்களின் போக்குவரத்து குழுக்களின் தனிமையை உடைத்தது.

ஆக, கற்காலத்தைவிட இரும்புக் காலத்தில் உற்பத்தி சக்திகள் மிக முன்னேறியிருந்தன. தேவைகள், உற்பத்தி, கருவிகள்—அனைத்தும் முன்பைவிட வேகமாக முன்னேறின. ஆனால் இந்தக் காலத்தில் இன்னும் வர்க்கங்கள் தோன்றவில்லை. அதாவது உற்பத்திக் கருவிகளுக்கு சொந்தக்காரர்கள் என்றோ, உற்பத்திப் பொருட்களின் சொந்தக்காரர்கள் என்றோ எவரும் கிடையாது. ''ஒவ்வொருவருக்காகவும் எல்லோரும், எல்லோருக்காகவும் ஒவ்வொருவரும்'' என்ற நிலைதான் இருந்தது. ஏனெனில் அன்றைய சமுதாய நிர்ப்பந்தம் அது. குழு ஒற்றுமை

ஒன்றே அவர்களுடைய வாழ்க்கைக்கு அடிப்படை யாக இருந்தது.

ஆரம்பத்தில் வேட்டையாடி உயிர் வாழ்ந்த மனிதன் விவசாய அறிவு பெறும்போது கால்நடை களையும் வளர்க்கத் தொடங்கினன். கால்நடைகளை வளர்த்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதும், உணவாக்கிக் கொள்வதும் விரிவடைந்தது. கால் நடைகளை மனிதன் பயன்படுத்தத் தொடங்கியது மனித சமுதாய வரலாற்றில் மற்றுமொரு புரட்சி கரமான முன்னேற்றமாகும்.

இரும்பினுல் ஏற்பட்ட முன்னேற்றத்திற்குப் பிறகு கால்நடைகளை வசக்கிப் பயன்படுத்தத் தொடங்கியது மற்றுமொரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் இதனுல் ஒரு நிலைத்த வாழ்க்கையை மனிதன் பெற்றுன். ஆடுமாடுகளை வளர்க்க, பராமரிக்க, பயன்படுத்த—நீர்வசதி, மேய்ச்சல் வசதி, விவசாய வசதி உள்ள இடங்களில் நிலையாக மனிதன் வாழத் தொடங்கினன். இதனுல் நாடோடியாக வாழ்ந்த, வேட்டைத் தொழில் செய்து வந்த மனிதனின் வாழ்க்கையில் மாறுபாடு ஏற்பட்டது. இந்த வாழ்க்கையில் தனக்கு வேண்டிய உணவுக்காக மட்டுமல்லாமல், தனது கால்நடை களுக்கு வேண்டிய தீவனத்திற்காகவும் மனிதன் விவ சாயம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. தனது உழைப்புச் சக்தியை மட்டுமின்றி, கால்நடைகளின் உழைப்புச் சக்தியையும் மனிதன் பயன்படுத்தினுன். விவசாயம் பரவலாக்கப்பட்டு, விவசாய வேலைகள் விரைந்து முன்னேறின.

இவ்வகையிலான மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே, மற்ருெரு இனமும் வாழக் கூடும். ஒரு கூட்டம் பயன்படுத்தும் கருவிகளும். வாழ்க்கை முறையும், மற்ருெரு கூட்டத்தின் கருவிகளுக்கும்,

வாழ்க்கை முறைக்கும் ஒற்றுமை வேற்றுமைகள் இருக்கும். அவை சமமாகவும் இருக்கலாம், ஒன்றை விட மற்றொன்று சிறிது முன்னேறியுமிருக்கலாம். இப்படி சமமாக இல்லாத இடங்களில் செல்வத்தைக் கொள்ளையடிப்பதற்காக போர்கள் நடைபெறும். பின்தங்கிய கூட்டம் முன்னேறிய மக்களின் செல்வத்தைக் கொள்ளையடிக்க, அடிக்கடி போர்களில் ஈடுபட்டு செல்வத்தை அபகரித்துச் செல்லும். அந்தக் காலத்தில் செல்வமாக கருதப்பட்டது கால்நடைகள்தாம். அதனால் இந்தக் கால்நடைகளை, குறிப்பாக மாடுகளைத் திருடிக்கொண்டு போவது அந்தப் போர்களில் வழக்கமாக இருந்திருக்கிறது. தமிழ் நாட்டில் கூட போர்களில் மாடுகள் கடத்தப்பட்டிருக்கின்றன என்பதை நாம் காண முடிகிறது. தொல்காப்பிய நூலில் இம் மாதிரி மாடுகள் கடத்தப் படுதலை, கரந்தை வெட்சித்திணைகள் குறிப்பிடுகின்றன. மாடுபிடிக்கச் சென்று இறந்த வீரனுக்கு அவனது நினைவாக நடுகற்கள் எழுப்பப்படுவது அக்கால வழக்கம் ஆகும். தமிழ்நாட்டில், தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் இம்மாதிரி நடுகற்கள் காணப்படுகின்றன. வட ஆற்காடு மாவட்டம் செங்கம் எனும் பகுதியில் காணப்படும் நடுகற்களில், மாடுபிடிச் சண்டையில் இறந்த வீரர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவைபற்றிய செய்திகளை ''செங்கம் நடுகற்கள்'' என்ற நூலில் இருந்து அறியலாம்.

இது போன்ற ஏராளமான போர்கள் அக்காலத்தில் நடந்திருக்கின்றன. போர்கள் என்றாலே வெற்றியும், தோல்வியும் இயற்கை. இந்தப் போர்களில் தோல்வியடைபவர்களைக் கொன்று விடுவதே அந்தக் காலத்திலிருந்து வழக்கமாக வந்துள்ளது. ஏனெனில், உணவு என்பது அந்தக் காலத்தில் பெரும் பிரச்னையாக இருந்தது. எனவே, தன்னோடு

ரத்த சம்பந்தமில்லாத மற்ருெரு இனத்தை சேர்ந்த வனுக்கும் உணவளித்து, கைதியாக வைத்திருப்பது மேலும் பற்ருக்குறைக்கே வழியாகும். ஆனுல் காலப்போக்கில், உழைப்பின் அவசியம் அதிகரித்த போது, தனக்காக மட்டுமன்றி கால்நடைகளுக் காகவும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலே ஏற்பட்ட காலத்தில் போரில் தோல்வியடைந்த வர்களே அடிமைகளாக வைத்திருக்கும் நிலே ஏற் பட்டது. இம்மாதிரி அடிமைமுறை ஏற்பட்டதன் காரணம் உற்பத்தி சக்திகள் வளர வேண்டிய தேவைகள் ஏற்பட்டதால்தான்.

அடிமை முறை உலகில் எங்கெங்கு இருந்தன என்று ஆராய்ந்து கண்டறியப்பட்டுள்ளது. எகிப்து, பாபிலோனியா, கிரீஸ், ஆஸ்திரேலியா, சீனு ஆகிய இடங்களில் அடிமை முறைகள் இருந்திருக் கின்றன என்பதற்கு ஆதாரங்கள் கிடைத் துள்ளன. ஆனுல் இந்தியாவில், அடிமை முறை இருந்ததென்றும் இல்லேயென்றும் இருவிதக் கருத் துக்கள் நிலவுகின்றன. சமீபத்தில்கூட சோவியத் ஆய்வாளர்கள் இந்தியாவில் அடிமைமுறை பற்றி இருவிதக் கருத்துக்களேக் கூறியிருக்கின்றனர். சூத்திரர்கள் எனும் உழைக்கும் மக்கள், மற்ற பகுதி களில் காணப்பட்ட அடிமைகளேப் போலல்லாமல், சிறிது மாறுபட்ட அடிமைகளாக இருந்ததாக வட இந்திய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கௌடில் யர் எழுதிய அர்த்த சாஸ்திரமும் மனுஸ்மிருதி எனும் நூலும் சூத்திரர் ஒரு வகை அடிமைகளே என்று கூறுகின்றன. ஆரியர் எனும் இனக்குழு மக் கள் பெருகியபோதும், உற்பத்தி சக்திகள் வளர்ச்சி யடைந்தபோதும் வேலேப்பிரிவினேகள் ஏற்பட்டன. அடிமைப்படுத்தப்பட்ட வேற்று இன மக்களான சூத்திரர்கள் ஆரியர்கள் பிற இடங்களில் காணப்படு கின்ற அடிமைகளேப் போலவே நடத்தியிருக்கின்ற

னர். சூத்திரர்கள் தான் உழைத்து மற்ற இன மக்க ளுக்கு உணவளிக்க வேண்டும் என்ற நிலையும் இருந் திருக்கிறது. சூத்திரர்கள் என்பது வட இந்தியாவில் மட்டும் ஆரியர் என்ற வேற்று இன மக்களுக்கு இட்ட பெயர்.

ஆனால் சூத்திரர்களுக்கும், அடிமைகளுக்கும் வேறுபாடுகள் இருந்தன. அடிமைகளை வாங்கலாம், விற்கலாம். ஆனால் சூத்திரர்களை வாங்கவோ விற்கவோ முடியாது. அடிமைகளுக்கு மனைவி என்றோ மக்களென்றோ எவரும் கிடையாது. ஆடு மாடுகளைப்போல வாழ்ந்தனர். ஒரு மாட்டை விற்க உரிமையாளனுக்கு எப்படி உரிமை உண்டோ, அதேபோல அடிமைகளை விற்கவும், வாங்கவும் உடைமையாளனுக்கு உரிமையுண்டு. இந்த உரிமை கள் இல்லாவிடினும், ஏறக்குறைய இதே நிலையில் தான் சூத்திரர்கள் வாழ்ந்தார்கள். இந்த சூத்திரர் களின் உழைப்பினால்தான் மாபெரும் சாம்ராஜ்யங் கள் தோன்றியிருக்கின்றன. பெரும் செல்வம் உற் பத்தியாகி இருக்கிறது. அசோகரின் சாம்ராஜ்யம், மௌரிய சாம்ராஜ்யம் போன்ற அநேக சாம்ராஜ் யங்கள் அனைத்துமே சூத்திரர்களின் உழைப்பில்தான் உற்பத்தியாயின. இதனை இந்திய சரித்திர மார்க்ஸீய ஆய்வாளர்களில் தலை சிறந்தவரான டி. டி. கோசாம்பி தனது நூலில் நிரூபித்துக் காட்டி யுள்ளார்.

அடிமை முறைச் சமுதாய அமைப்பு தோன்றிய போது உற்பத்தி முறைகளும் மாறிவந்திருக்கின்றன. முந்தைய அமைப்பில், மக்களனைவரும் சுதந்திரமாக இருந்திருக்கின்றனர். உற்பத்திச் சாதனங்களும் எவ ருக்கும் சொந்தமாக இருக்கவில்லை. சமுதாயம் முழு வதற்கும் உற்பத்திச் சாதனங்கள் சொந்தமாக இருந்திருக்கிறது. ஆனால் அடிமைச் சமுதாயத்தில் உற்பத்திக் கருவிகளுக்கு சொந்தக்காரன் உண்டு.

உற்பத்திக் கருவிகளில் ஒன்ருகத்தான் அடிமையும் இருந்தான். கருவிகள் பேசாது, அடிமை பேசுவான். இதுதான் வேறுபாடு. அடிமைகளைப் பற்றி அரிஸ்டாடில் எனும் கிரேக்க ஞானி ''அடிமை ஒரு பேசும் கருவி'' என்ருர். அடிமை முறையில் இருந்த கவனிக்க வேண்டிய அம்சம் என்னவென்ருல் அடிமைகள் உழைக்க வேண்டும். அடிமைச் சொந்தக்காரர்கள் உழைக்க வேண்டியதில்லை. சமுதாய அமைப்பில், ஒரு பிரிவின் உடலுழைப்பை மற்ருெரு பிரிவு சுரண்டும் முதல் வர்க்கப்பிரிவு இங்குதான் தொடங்குகிறது. அடிமை முறையில் தோன்றிய வர்க்கப் பிரிவினையிலிருந்து, சோஷலிச அமைப்பு ஏற்படும்வரை இடையில் உள்ள எல்லா சமுதாய அமைப்பிலும் வர்க்கப் பிரிவினையும், சுரண்டலும் பல வேறுபட்ட வடிவங்களில் இருந்துவந்திருக்கிறது.

அடிமைமுறைச் சமுதாயத்தில் உள்ள வர்க்கங்களுக்கிடையில் உள்ள தொடர்பைக் கொண்டுதான், அந்தச் சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளை அல்லது சமுதாய உறவுகளைப் புரிந்து கொள்ள முடியும். அடிமைச் சமுதாயத்தில் அடிமைகளும், அடிமைச் சொந்தக்காரர்களும் என்ற இரு வர்க்கங்கள் இருந்தன. இதில் அடிமைகள் உழைப்பவர்கள். அவர்கள்தான் உற்பத்திக்குக் காரணமானவர்கள். அடிமைச் சொந்தக்காரர்கள்தான் அடிமைகளுக்கு மட்டுமின்றி, நிலங்களுக்கும் சிறுதொழில் பட்டறைகளுக்கும் சொந்தக்காரர்களாக இருந்தனர். ஆனுல் இம் மாதிரி நிலச் சொந்தக்காரர்கள் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் வருகின்ற நிலப்பிரபுக்கள் அல்லர். நிலச் சொந்தக்காரர்கள், மொத்த சமுதாயத்தினையும் ஆளுகின்ற ஆட்சிப் பொறுப்பின் ஏற்ற, அரசியலில் ஈடுபடும்போதுதான் நிலப்பிரபுகள் (**Feudal Lords**) எனப்படுகின்றனர். அடிமைச் சமுதாயத்தில் இருந்தவர்கள்

வெறும் நிலச்சொந்தக்காரர்களே; ஆளும் வர்க்கமாக ஆகும் அளவுக்கு சமுதாய உற்பத்தியில் அவர்களுடைய ஸ்தானம் உயரவில்லை.

இதுதவிர, உற்பத்தியாகும் பொருள்களை ஒரு இடத்திலிருந்து மற்ருெரிடத்திற்கு கொண்டுசென்று விற்பனை செய்யும் வியாபாரிகளும் இருந்தார்கள். உற்பத்தியாகும் பொருள்களிலிருந்து வேறு சில பொருள்களை உற்பத்தி செய்கின்ற சிறு தொழில் உரிமையாளர்களும் இருந்தார்கள். அதாவது, கிடைக்கின்ற தோலிலிருந்து செருப்பு செய்வார்கள்; தச்சு வேலை செய்வார்கள். ஆனால் இதுபோன்ற எல்லாப் பிரிவினருமே ஆண்டை—அடிமை என்ற பெரும் வர்க்கப் பிரிவின் உறவுகளுக்கு கட்டுப்பட்டே வாழ்ந்தார்கள்.

அடிமைச் சமுதாய அமைப்பின் தொடக்க காலத்தில் உற்பத்திக் கருவிகளும் புதுமையடைந்தன. அனுபவ அறிவின் அடிப்படையும், தேவைகளின் அதிகரிப்பும் கருவிகளை அபிவிருத்தி செய்தன. ஆனல் பிற்காலத்தில் உற்பத்திக் கருவிகள் வளராத நிலை ஏற்பட்டது. ஏனெனில், உற்பத்திக் கருவிகளைப் பயன்படுத்திய அடிமைகள், தாம் எவ்வளவு தான் உழைத்தாலும், கருவிகள் நவீனப்படுத்தினலும் தமக்குக் கிடைப்பதென்னவோ வெறும் சோறு மட்டும்தான் என்ற உண்மையை உணரத் தலைப்பட்டார்கள். ஒழுங்கமைந்த குடும்ப வாழ்க்கையோ, உழைப்பிற்கான கூலியோ, எதுவுமே தமக்குக் கிடைக்கப்போவதில்லை என்று உணர்ந்து கொண்டதால் அடிமைகளுக்கிடையில் உழைப்பிற்கான உற்சாகம் குன்றி, அதிருப்தியும் அதன் தொடர்ச்சியாக சோம்பலும் வளர்ந்தது. இந் நிலையினல் உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடைய முடியவில்லை. அடிமைகளுக்கும் ஆண்டைகளுக்குமிடையில் பெரும் போராட்டங்கள் நடைபெறத் தொடங்கின.

அடிமைச் சமுதாயத்தில் நடைபெற்ற போராட்டங்கள் அனைத்துமே, அடிமைகளின் கஷ்டங்கள் குறைய வேண்டும் என்பதற்காக மட்டுமே நடந்த போராட்டங்கள். அடிமைச் சமுதாய அமைப்பினையே முழுமையாக மாற்றி புதியதொரு அமைப்பினை ஏற்படுத்துவதற்கான புரட்சிகரமான போராட்டங்கள் அல்ல. இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களும், சமுதாய அமைப்பினை மாற்றக்கூடிய புரட்சிகரச் சக்திகளும் அல்லர்.

சிறு சிறு கூட்டங்களாக அடிமைகள் நாட்டை விட்டு தப்பியோடினர்.

அவர்களில் பெரும்பான்மையினரும் பயங்கரமாகக் கொல்லப்பட்டனர். சில பெரிய போராட்டங்களும் நடைபெற்றன. கி. மு. 60-ம் ஆண்டுகளில் ரோமில், சுமார் 6 வருடங்களாக ஸ்பார்ட்டகஸ் என்ற தலைவனின்கீழ் அடிமைப் போராட்டங்கள் நடைபெற்றன. ஆனால் இந்தப் போராட்டங்கள் அடக்கியொடுக்கப்பட்டன. பல நாடுகளில் உள்ள, பயிற்சி பெற்ற கட்டுப்பாடான ஆயுதந்தாங்கிய படை வீரர்கள் அடிமைகளுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டனர். அடிமைகள் போர்ப் பயிற்சியோ, ஆயுதங்களோ, கட்டுப்பாடோ, உறுதியான தலைமையோ இல்லாதவர்கள். எனவே மிக எளிதாக அடிமைகள் ஒடுக்கப்பட்டனர். தோற்றுப் போன அடிமைகளில் 6,000 பேர் சிலுவையிலறைந்து கொல்லப்பட்டனர். (இதுவே மரண தண்டனையை நிறைவேற்றும் பழைய ரோமானிய முறை) அடிமைகளுக்கு ஒரு தெளிவான நோக்கமுமில்லை. சில குறைந்தபட்ச உரிமைகள் தமக்கு இல்லை என்ற எண்ணத்தினால் மட்டுமே இந்தப் போராட்டங்கள் விளைந்தன. அடிக்கடி நடந்த இந்தப் போராட்டங்களினால் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. போராட்டக் காலங்களில் அடிமைகள்

கூட்டம் கூட்டமாக நாட்டை விட்டு தப்பித்து ஓடினார்கள்.

தப்பித்து ஓடிய அடிமைகள், நாட்டின் மற்றொரு பகுதியிலிருந்த சிறு விவசாயிகளிடம் சென்று சேர்ந்தார்கள். விவசாய முறைகளை தெளிவாக அறிந்த விவசாயி, நிலச்சுவானாகவும், வேலை செய்யும் உடல்பலம் மட்டும் உடைய அடிமை, விவசாய அறிவும் திறனும் பெற்று விவசாயம் செய்பவனாகவும் மாறினான். தொடர்ச்சியாக அடிமைகள் தப்பித்து ஓடுதல் அதிகரித்து நிலச்சுவான்தாரி முறையும் அதிகரித்தது. இந்த நிலையில் நிலச்சுவான்களின் தலைவன் அரசன் ஆகின்றான். பெரும் நிலச்சுவான்களின் பிரதிநிதி ஆளும் உரிமை பெற்றான். ஆனால் நில உடைமை அமைப்பின் பிரதிநிதியான அரசனுக்கு எதிராயிருப்பது பழைய, தேய்ந்து கொண்டிருக்கும் அடிமை உடைமை முறை. எனவே எஞ்சியிருந்த அடிமையுடைமை முறை, அரசர்களால் முற்றிலும் அழிக்கப்பட்டு நில உடைமை உற்பத்தி முறை ஸ்தாபிக்கப்பட்டது. கி.மு. 3 முதல் 5 நூற்றாண்டுகள் வரை இது போன்ற நிலஉடைமை அரசாங்கங்கள் (Feudal States) உலகமெங்கும் ஏற்பட்டன. சில நாடுகளில் இதற்கு முன்னும் பின்னும் நிலவுடைமை தோன்றியிருக்கலாம்.

எனவே, அடிமையுடைமை அமைப்பிலிருந்து நிலவுடைமை அமைப்பு ஏற்பட்டதற்கான காரணம்—அடிமைச் சமுதாயத்தில் வளரும் மனிதனின் தேவைகளுக்கேற்ப உற்பத்தி சக்திகள் வளர்ச்சியடையவில்லை. எனவே தகுந்தாற்போல உற்பத்தி சக்திகள் வளர்ப்பதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய நில உடைமை முறையாக அடிமை முறை மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவேதான் அந்தக் குறிப்பிட்ட நிலையில் உலகமெங்கும் நிலவுடைமை அரசாங்கங்கள் அமைந்தன. இதனுடைய வளர்ச்சியாக, பெரும்

பெரும் நிலப்பரப்புகளைப் பிடித்து விவசாயம் செய்வதற்கு வாய்ப்பாக சாம்ராஜ்யங்கள் விஸ்தரிக்கப்பட்டன. அடிமை முறையில் எகிப்து, ஆசிரியா போன்ற சிறு சிறு ராஜ்யங்கள் தோன்றின. ஆனால், நிலவுடைமை சமுதாய அமைப்பில் அரசர்களுக்கிடையில் நடைபெற்ற திருமணங்கள் மூலமாகவும், பெரும் போர்கள் மூலமாகவும் சாம்ராஜ்யங்கள் விஸ்தரிக்கப்பட்டன. போர் மூலம் சாம்ராஜ்யங்கள் விஸ்தரிக்கப்பட்டதற்கு இந்திய இலக்கியங்கள் சான்று தருகின்றன. சந்திர குப்த மௌரியன், கரிகாலன், ராஜராஜசோழன் போன்றோர் போர்களின் வெற்றியின்மூலம் நிலவுடைமை அமைப்பை நிலைநாட்டினர். திருமணங்கள் மூலம் ஆட்சி விஸ்தரிக்கப்பட்டதற்கு சீவக சிந்தாமணி போன்ற நூல்களும் பிற இலக்கியங்களும் சான்று பகர்கின்றன.

நில உடைமை அமைப்பின் மிக முற்போக்கான அம்சம் தண்ணீரை மிக அதிகமாகப் பயன்படுத்தியதே. நதிகளுக்கிடையில் பெரும் அணைகளைக் கட்டி நீரை விவசாயத்திற்கு பயன்படும்படியாக வழிப்படுத்தினர். காவிரியில் கல்லணை கட்டப்பட்டது, கங்கையிலும் பிற நதிகளிலும் அணைகள் கட்டப்பட்டன. (கங்கை நதியையே பூமிக்கு கொண்டு வந்தவன் என்று சகரன் என ஒரு பெயர் புராணத்தில் காணப்படுகிறது. சாகரம்—கடல்; கடல்போல நீரைக் கங்கையில் தேக்கியவன் சகரன் என தெய்வத் தன்மை சுமத்திக் காட்டப்பட்டிருக்கிறது.) இது மனித முயற்சியை மிகைபடக் கூறியதேயாகும். இவனைப்போன்றோர் தண்ணீரைத் தேக்க அணைக்கட்டியவர்களே.

இந்தக் காலத்தில் நாட்டின் பரந்த பகுதிகளை இணைக்க சாலைகள் அமைக்கப்பட்டன. வியாபாரம் வளர்ந்தது. வியாபாரப் போட்டிகளினால் நாடுகளுக்

கிடையில் போர்கள் நடைபெற்றன. ஆனால் போரில் யார் வென்றாலும், மையமான நிலவுடைமை அமைப்பு மாறவில்லை; பாதுகாக்கப்பட்டது. தமிழ் நாட்டில் சேரர், சோழர், பாண்டியர், களப்பிரர், கங்கர், ஆயர், கோசர், ஹோய்சளர், பல்லவர் போன்ற பல அரசகுலங்களுக்கிடையில் போர்கள் நடைபெற்றதாக கல்வெட்டுகள் கூறுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மதுரையில் ஆண்ட பாண்டியனை சோழன் வென்றதாக ஒரு கல்வெட்டு கூறும். ஆனால் நான்கு வருடங்களுக்குப் பிறகு பாண்டிய வம்சத்தைச் சார்ந்த மற்றொரு மன்னன் மதுரையை ஆண்டதாக மற்றொரு கல்வெட்டு கூறுகிறது. அதாவது எத்தனை போர்கள் நடந்தாலும் நிலப்பிரபுத்துவ அரசாங்க அமைப்பு மாறவில்லை. தோல்வியடைந்த மன்னனை தனது கட்டுப்பாட்டினுள் வைத்துக்கொண்டு, அவனது நாட்டை அவனையே ஆளச்செய்து மொத்த அமைப்பு முறையை மாறாமல் காத்துவந்த நிலைதான் இருந்திருக்கிறது. இவையெல்லாம் நிலப்பிரபுத்துவத்தின் வளர்ச்சி நிலை.

ஆனால் இதிலும் ஒரு கட்டத்தில் தேக்க நிலை ஏற்பட்டது. நிலவுடைமை அமைப்பில் உற்பத்தி அதிகரிக்கும்போது மனிதனின் அறிவும் வளர்ந்தது. விஞ்ஞானமும் வளர்ந்தது. இவை மட்டுமின்றி போக்குவரத்து வசதிகள் பெருகின. வியாபாரம் பெருகி வளர்ந்தது. இம்மாதிரி வளர்ச்சியினால், புதிதாக ஒரு வர்க்கம் தோன்றியது. அதிகமான நிலத்திற்கு சொந்தமாகி உற்பத்தியை முதலாக்கிய பெரும் பணக்காரர்கள், வியாபாரத்திற்கு கடனுதவிசெய்த பணக்காரர்கள். இவர்கள் அனைவரும் விஞ்ஞான அறிவினால் அனைவரும் பெற்ற கருவிகளின் உதவியுடன் தொழிற்சாலைகளை உருவாக்கினர். வேகமாக வளர்ந்த விஞ்ஞான அறிவு நீராவியின் உபயோகத்தைக் கண்டு பிடித்தது. நீராவியின்

பயனும், இயந்திரக்கதிர்களும் சேரும்போது மிகப் பெரிய பஞ்சாலைகள் உருவாயின. கப்பல்களில் நீராவி பயன்படுத்தப்பட்டன. ரயில்கள், விமானங்கள், கப்பல்கள்—போக்குவரத்து வசதிகள் அதிகமாயின. உற்பத்தியாகும் பொருள்களை உலகமெங்கும் கொண்டு சென்று வாழ்வதற்குரிய வாய்ப்பும், வசதியும் பெருகின. ஆனால் இந்த உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக நிற்பது நிலவுடைமைச் சமுதாய அமைப்பு, அதன் சட்டங்கள், மரபுகள், கோட்பாடுகள் முதலியன. ஆளும் உரிமை நிலவுடைமை வர்க்கத்தின் பிரதிநிதிகளான அரசினிடம் இருந்ததால், அரசுக்குக் கட்டுப்பட்டே தொழில் முதலாளிகள், தமது முயற்சிகளை நடத்திக்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. எனவே தொழில் முதலாளிகள், தமது நலன்களின் மீது அக்கறையில்லாத, தமது முயற்சிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கின்ற நிலவுடைமை அமைப்பு முறையை மாற்றிவிடவேண்டும் என்ற நிலைக்கு இயற்கையாகவே வருகின்றனர். உற்பத்தி சக்தியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட வர்க்கம், அச்சக்திகளைத் தடுக்கும் அமைப்பை அகற்ற முன்வந்தது.

முதலாளிகளின் தொழில் முயற்சிகளுக்குத் தேவைப்பட்ட கச்சாப் பொருள்கள் நிலப்பிரபுக்களிடமிருந்து பெற வேண்டியிருந்தது. தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் நிலப்பிரபுக்களின்கீழ் கட்டுப்பட்டு விவசாயிகளாக இருந்தனர். உற்பத்தியான தொழிற்சாலையின் பொருள்களை விற்பனை செய்வதற்காக சந்தை, போக்குவரத்து வரி போன்ற கட்டுப்பாடுகள் அனைத்தும் நிலப்பிரபுக்களால் ஆளப்பட்டன. எனவே தொழில் முதலாளிகள் நிலப்பிரபுத்துவ அமைப்பை உடைத்தெறியாமல் தமது நலன்களைக் காப்பாற்றிக்

கொள்ள முடியாது. இந்த நிலைகளினால்தான் ஒரு சமூக புரட்சிக்கான சூழல்கள் ஏற்படுகின்றன.

நிலபிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவ சமுதாய அமைப்பிற்கான மாற்றத்தினை பூர்ஷ்வா புரட்சிகள் என்கிறோம். இந்தப் புரட்சியில் தலைமைப் பாத்திரம் வகித்தது முதலாளிகள் வர்க்கம். ஆனால் போராட்ட சக்தியாக, முதலாளிகளுக்குப் பின்னால் மிகப்பெரும்பான்மையாகத் திரண்டுநின்றது தொழிலாளர் வர்க்கம். இதைத்தான் மார்க்ஸ் சொன்னார். ''நிலபிரப்புத்துவத்தை ஒழிக்கப் போராடும் முதலாளித்துவ வர்க்கம் தன்னையே ஒழிக்க உதித்துள்ள தொழிலாளர் வர்க்கத்தை கையைப் பிடித்து அரசியல் அரங்கத்தினுள் இழுத்து வருகிறது. இந்தப் புரட்சிகளின்மூலம் முதல் அரசியல் அனுபவத்தை தொழிலாளர் வர்க்கம் பெறுகின்றது.''

பூர்ஷ்வா புரட்சிகளின் மூலம் முன்பு இருந்த உற்பத்தி முறை மாற்றியமைக்கப்பட்டது; முதலாளிகள் ஆட்சி பொறுப்பேற்றனர். முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டங்கள், மரபுகள், கலை, இலக்கியம், தத்துவம், தலைமையிடம் பெற்றன; ஆனால் முதலாளித்துவ வர்க்கம் தோன்றியபோதே தொழிலாளர் வர்க்கமும் தோன்றி விட்டது. முதலாளித்துவ அமைப்பில், அதிக உற்பத்திக்காக முதலாளிகள் ஆயிரம் தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொண்டு, அவர்களது உழைப்பைச் சுரண்டும் நிலையை ஏற்படுத்திக் கொண்டபோதே, தொழிலாளர் வர்க்கமும் தோன்றியது. கிருஷ்ணன் கம்சனைக் கொல்வதற்கென்றே பிறந்த மாதிரி, தனியுடைமை வர்க்கம் தன்னை ஒழிக்கக்கூடிய தொழிலாளர் வர்க்கத்தையும் தானே தோற்றுவித்தது. முதலாளித்துவம் லாபத்திற்காக உற்பத்தியைப் பெருக்கும்போதே,

தனக்கு சவக்குழி தோண்டக்கூடிய வர்க்கத்தையும் தோற்றுவித்தது. முதலாளித்துவ அமைப்பில் இரு பிரதான வர்க்கங்களாக, (main classes) ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு பெரும் பிரிவுகளாக தொழிலாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும் நிலவுடமையின் வயிற்றிலேயே தோன்றி இரட்டைப் பிள்ளைகளாக உருவெடுத்தன.

நாம் முன்னுல் வர்ணித்த சமுதாய அமைப்பு முறைகளில், வர்க்க உறவுகளையும், வர்க்க அமைப்பையும் பற்றி இப்பகுதியில் விவரிப்போம்.

புராதன சமுதாய அமைப்பில், வர்க்கப் பிரிவினைகள் தோன்றவில்லை; அடிமை சமுதாய அமைப்பில்தான் முதன்முதலில் வர்க்கப் பிரிவினைகளும் வர்க்கப் போராட்டங்களும் தோன்றின.

வர்க்க சமுதாய அமைப்புகளில் ஒவ்வொரு வர்க்கமும் உற்பத்தி முறைகளில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தை வகிக்கிறது. ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை அடக்கி அதன் உழைப்பை தனக்கு சொந்தமாக்கிக் கொள்கிறது. பிரதான வர்க்கங்கள் ஒன்றிற்கொன்று பகைமை, முரண்பாடு கொண்டவை.

சமுதாய உற்பத்தி முறையில் வர்க்கங்களுக்கு இருக்கும் ஸ்தான வேறுபாட்டிற்குக் காரணம் உற்பத்தி சாதனங்களும் அவற்றிற்கு இருக்கும் உரிமை வேறுபாடுகள் ஆகும். எல்லாவித பகைமை வர்க்க வேறுபாடுகள் உடைய சமுதாய அமைப்புகளில் சில வர்க்கங்கள் உற்பத்தி சாதனங்களை உடைமையாகக் கொண்டுள்ளன. இதனுல் அவை பிற வர்க்கங்களின் உழைப்பைச் சுரண்டுகின்றன. உடைமை உரிமையும், சுரண்டல் உரிமையும் சட்ட பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளன. உதாரணமாக சுரண்டல்காரர்களின் சொத்துரிமைக்கு சட்டங்களில்

பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையை அவர்களுடைய அரசியல் அதிகாரத்திலும் அரசாங்க இயந்திரத்திலும் அவர்கள் பாதுகாத்துக் கொள்ளுகிறார்கள். முதலாளித்துவ அரசியல் சட்டங்களில் தனிச் சொத்துரிமை புனிதமாகவும், மாற்ற முடியாததாகவும் ஆக்கப்பட்டுள்ளது. இந் நிலையால் உழைக்கும் மக்களைக் கொள்ளையடிப் பதற்கு சட்ட பூர்வமான உரிமை அளிக்கப் பட்டுள்ளது. உற்பத்தி சாதனங்களோடு வர்க்கங்களுக்குள்ள உறவுகள்தான் உழைப்பை சமுதாயத்திற்குப் பயன்படுத்துவதில் அவ்வர்க்கங் களின் பாத்திரத்தை நிர்ணயிக்கின்றன. இது பற்றி மார்க்ஸ் கூறுவதாவது: ''ஒரு முதலாளி தொழில் நுட்பத்தை நிர்வாகம் செய்வதால் முதலாளியாக இருப்பதில்லை. ஆனால் முதலாளியாக இருப்பதா லேயே தொழிலை நிர்வாகம் செய்கிறான்''. எல்லா வர்க்க சமுதாய அமைப்புகளிலும் சுரண்டும் வர்க் கங்கள் உற்பத்திச் சாதனங்களுக்கு சொந்தமாயிருப் பதால் உற்பத்தியை நிர்வகிப்பது, அரசாங்கத்தை நிர்வகிப்பது, கருத்துலகில் ஆதிக்கம் செலுத்துவது ஆகிய உரிமைகளைப் பெறுகிறார்கள். உதாரணமாக, அடிமை உற்பத்தி சமுதாய அமைப்பில் அடிமைச் சொந்தக்காரர்கள் அரசாங்கத்தை நிர்வகித்தார் கள் தத்துவத்தைப் படைத்தார்கள்; பண்பாட்டைப் படைத்தார்கள்; உற்பத்தியை நிர்வகித்தார்கள். இதுபோலவே ஒவ்வொரு வர்க்க சமுதாய அமைப் பிலும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர் கள்தாம் பொருளாதார வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் ஆன்மீக பண்பாட்டுத் துறையிலும் ஆதிக்கம் செலுத்துவார்கள். ஆனால் உழைக்கும் மக்கள் தங்கள் உழைப்பைச் செலுத்துவதற்கான உற்பத்திச் சாதனங்களில் உரிமையற்றவர்களாக இருப்பதால் உற்பத்தியை வழிப்படுத்தவும் சமுதா

யத்தை இயக்கவும் உரிமையற்றவர்களாக இருக்கிறார்கள். தற்காலத்தில் ஏகபோக முதலாளிகள் தொழில் நிர்வாகத்தை சம்பளம் பெறும் நிர்வாகிகள், என்ஜினீயர்கள், தொழில்நுணுக்க வல்லுநர்கள் மூலம் நடத்துகிறார்கள். ஏகபோக முதலாளிகள் தற்காலத்தில் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களாக இருப்பதால் மட்டுமே புல்லுருவித்தனமான வாழ்க்கை வாழ முடிகிறது. உற்பத்தியிலிருந்து ஒவ்வொரு வர்க்கமும் பெறுகிற பொருளின் பங்கு அவர்கள் உற்பத்திச் சாதனங்களோடு கொண்டிருக்கிற தொடர்பைப் பொறுத்திருக்கும். அதாவது அவை யாருடைய உடைமை என்ற வினாவின் விடையைப் பொறுத்தது. சுரண்டல்களின் வடிவத்திற்கு ஏற்றபடி, சுரண்டல் வர்க்கங்களின் பங்குஇருக்கும். அடிமை சொந்தக்காரர்கள் அடிமைகளிடமிருந்து வன்முறையால் உழைப்பின்விளைவான உபரிப் பொருளைப் பெற்றார்கள். நிலப்பிரபுக்கள் வன்முறையால் அல்லாமல் குத்தகை, நிலவாரம், இலவச உழைப்பு முதலிய முறைகளால் லாபம் பெற்றார்கள். முதலாளிகள் மறைமுகமான இலவச உழைப்பினால் அதாவது உபரி மதிப்பினால் கொள்ளை லாபம் பெறுகிறார்கள்.

மேற்கூறியவற்றின் மூலம் வர்க்க சமுதாய அமைப்புகளில் ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தின் உழைப்பை கைப்பற்றிக் கொள்ளுகிறது என்பது தெளிவாகிறது. வர்க்கப் பகைமையின் மூல காரணம் இதுவே. இதுதான் பகைமை வர்க்கங்களின் நலன்கள், சமரசம் செய்துவிக்க முடியாது என்பதன் பொருள். ஆகையால் பகைமை வர்க்க சமுதாயங்களில் வர்க்க போராட்டம் எதேச்சையானதென்று எண்ணக்கூடாது. அது தவிர்க்க முடியாத சமுதாய வளர்ச்சி விதி ஆகும்.

ஒரு சமுதாயத்தின் அமைப்பு சிக்கலானதாக இருக்கும். ஒவ்வொரு சமுதாய அமைப்பிலும் மேலோங்கி நிற்கும் உற்பத்தி உறவுகளோடு கூடவே அழிந்துவரும் பழைய உற்பத்தி முறையின் எச்சங்களும் இருக்கும். இங்கே பழைமையும், புதுமையும் முரண்பட்டு நிற்கும். இச் சமுதாயத்தின் வர்க்க அமைப்பில் எல்லா உற்பத்தி உறவுகளின் முரண்பாடும் வெளிப்படும். சமுதாய வரலாற்றை அறிவதற்கு ஒவ்வொரு சமுதாயத்திலும் பிரதான வர்க்கங்கள் எவை என்ற கேள்விக்கு பதில் காணவேண்டும். ஒவ்வொரு சமுதாயத்திலும் இது ஒரு ஜோடியாக இருக்கும். பிரதான வர்க்கம் என்றால்என்ன? வர்க்கங்கள் என்றால் என்ன? ஒவ்வொரு சமுதாயத்திலும் நடைமுறையில் உள்ள பிரதான உற்பத்தி முறையில் பங்கு கொள்ளும் வர்க்கங்கள் பிரதான வர்க்கங்கள் ஆகும். எனவே, ஒவ்வொரு சுரண்டல் சமுதாய அமைப்பிலும், பொதுவாக இருபிரதான வர்க்கங்கள் இருந்து வந்திருக்கின்றன. அடிமையுடைமைச் சமுதாயத்தில் அடிமைச் சொந்தக்காரர்களும் அடிமைகளும்; நிலப்பிரபுத்துவ அமைப்பில் நிலச் சொந்தக்காரர்களும் குடியானவர்களும்; முதலாளித்துவ சமுதாய அமைப்பில் பூர்ஷுவாக்களும் பாட்டாளி வர்க்கமும். பிரதானமற்ற வர்க்கங்கள் என்பவை பழைய உற்பத்தி முறையின் எச்சங்களில் காணப்படும் வர்க்கங்களாகவோ அல்லது புதிய உற்பத்தி முறையின் துவக்கத்தில் தோன்றுகிற வர்க்கங்களாகவோ இருக்கும். உதாரணமாக, நிலப்பிரபுத்துவ காலத்தின் இறுதியில் முதலாளி வர்க்கமும் தொழிலாளர் வர்க்கமும் தோன்றுகின்றன. நிலப்பிரபுத்துவம் அழிந்து முதலாளித்துவம் தோன்றுகிறபோது இவ்விரு வர்க்கங்களும் பிரதான வர்க்கங்களாகின்றன. தற்காலத்தில் முதலாளித்துவ நாடுகளில் நிலப்பிரபுத்துவ உறவுகளில் எஞ்சியிருந்தால், நிலப்

பிரபுக்கள் பிரதானமற்ற வர்க்கங்கள் ஆவார்கள். சிறு விவசாயியும், நடுத்தர விவசாயியும் வளர்ச்சி பெற்ற நாடுகளிலும், வளர்ச்சியடையாத நாடுகளி லும் அதிகத் தொகையினராக இருக்கிறார்கள். இவர்கள் முதலாளித்துவம் மேலும் வளர்ச்சியடை யும்போது நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தினின்றும் முத லாளித்துவ ஆதிக்கத்தினுள் வருகிறார்கள். பிரதான வர்க்கங்கள், பிரதான மற்ற வர்க்கங்கள் என்ற இரண்டைத் தவிர வேறு பல சமூக பிரிவுகளும் ஒரு சமுதாய அமைப்பினுள் இருக்கலாம். தற்கால சமுதாயத்தில் அப்பிரிவுகளில் முக்கியமானது அறி வாளிப்பகுதி. இது ஒரு தனி வர்க்கமல்ல. இதன் அமைப்பு பல தன்மைப்பட்ட கலவையான மூலங் களைக் கொண்டது. சமுதாய உற்பத்தி முறையில் இவர்களுக்கென சுயேச்சையான உறவு கிடையாது. அறிவாளிப் பகுதியினர் நிபுணத்துவம் உடைய மூளை வேலையையோ அல்லது சாதாரண மூளை வேலையையோ செய்யும் பகுதியினர். இப்பகுதியின ரின் தொகை பல வர்க்கங்களில் பிறந்தவர்கள் மூளைத் தொழில்களை செய்யும்போது அதிகரிக்கிறது. இப்பகுதிகளில் பல பிரிவினர் வெவ்வேறு வர்க்கங் களின் நலனுக்காக தொழில் புரிகிறார்கள். அடிமைச் சமுதாயத்திலும், நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் சிறிதளவாக இருந்த இந்த சமுதாயப்பகுதி முதலா ளித்துவ சமுதாயத்தில் சிறப்பான சமூகப் பகுதி யினர் ஆகிவிட்டார்கள். அடிமைச் சமுதாயத்திலும் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் சமுதாயம் சில அந்தஸ்துப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரிவுகளுக்கு அடிப்படை பொருளாதார வர்க்கப் பிரிவுகள்தான். ஆனால் அப் பிரிவுகளுக்கு சட்ட பூர்வமாக அவர்களுடைய அந்தஸ்து நிலைகள் உறுதிப்படுத்தப்பட்டன. ஒரு அந்தஸ்து நிலையி லிருந்து அதற்கு மேலுள்ள அந்தஸ்து நிலைக்கு உயர்

அமைப்புகளில் நடைபெறும் வரலாற்று மாறுதல்களைக் காண்போம். அதாவது தற்கால வர்க்கப் போராட்டங்களின் தன்மைகளை சுருக்கமாக அறிந்து கொள்ள முயலுவோம். தற்கால வர்க்கப் போராட்டம் உலகளாவிய தன்மையுடையது. எனவே அதனை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் காண்போம். அப்பிரிவுகள் வருமாறு:

1. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டங்களும்.

2. தற்காலத்தில் தேசிய விடுதலை அடைந்த நாடுகளிலும், தேசீய விடுதலைக்காகப் போராடும் நாடுகளிலும் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டங்களும்.

3. சோஷலிசப் புரட்சி நடைபெற்று வெற்றி பெற்ற நாடுகளில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுகிற இடைநிலைக் கட்டத்தில் வர்க்கங்களின் நிலைகளும், வர்க்கப் போராட்டமும்.

உலகிலுள்ள பல நாடுகளிலும் சமுதாய வளர்ச்சி நிலைமைகள் வெவ்வேறுக உள்ளன என்பது நமக்குத் தெரியும். அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகள், தொழில் வளர்ச்சி (முதலாளித்துவம்) யடைந்த நாடுகள், இந்தியா, பாகிஸ்தான், எகிப்து, வளர்ச்சியடையாத புதிதாக விடுதலை யடைந்த நாடுகள். ஆப்பிரிக்காவில் உள்ள சில நாடுகள் இன்னும் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருப்பவை. சோவியத் ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி, போலந்து, கியூபா, வடக்கு வியத்னும் முதலிய நாடுகள் சோஷலிச நாடுகள். ஒவ்வொரு நாடும் வளர்ச்சி நிலையிலும், வளர்ச்சி விகிதத்திலும் வேறுபட்டுள்ளன.

அதனால் உற்பத்தி முறையில் தொடர்பு கொண்டுள்ள, வர்க்கங்களின் உறவுகளும் வர்க்கப் போராட்டமும் வெவ்வேறு நிலைகளில் இருக்கும். தற்கால தொழிலாளி வர்க்கப் போராட்டங்களை வழி நடத்தவும், தொழிலாளி வர்க்க குறிக்கோளான சோஷலிசத்தை நோக்கி, அவர்களுடைய இயக்கத்தை வழிப்படுத்தவும், ஒவ்வொரு நாட்டின் சமுதாயத்தின் வர்க்க அமைப்பின் தன்மையையும், வர்க்கப் போராட்டத்தின் தன்மையையும், கம்யூனிஸ்டுக் கட்சிகள் அறிந்து கொண்டால்தான், அவற்றை வழி நடத்த முடியும்.

தொழில் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளிலும், ஜப்பானிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், சமுதாய அமைப்பின் பிரதான வர்க்கங்கள் முதலாளித்துவ வர்க்கமும், பாட்டாளி வர்க்கமும் ஆகும்.

இந்நாடுகளின் ஆளும் வர்க்கம் முதலாளித்துவ வர்க்கம்தான் (பூர்ஷுவா) "பூர்ஷுவா என்றால் சமூக உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரர்கள். கூலிஉழைப்பை தங்கள் தொழில்களுக்குப் பெறுகிற நவீன முதலாளிகள்'' என்று மார்க்சும், எங்கெல்சும் வரையறுத்துக் கூறினர்.

இவ்வர்க்கம் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் வயிற்றில் தோன்றியது. நிலப்பிரபுத்துவ அமைப்பின் பகுதிகளான தொழில் உடைமைக்குழுக்கள், வட்டித் தொழில்காரர்கள், பணக்கார வியாபாரிகள் முதலியவர்களிடமிருந்து முதலாளித்துவ வர்க்கம் உருவாயிற்று. தற்காலத்தில் இந்த வர்க்கத்தினுள் பல உட் பிரிவுகள் தோன்றியுள்ளன: 1. வியாபார முதலாளித்துவம், 2. தொழில் முதலாளித்துவம், 3. பாங்கு முதலாளித்துவம், 4. விவசாய முதலாளித்துவம். ஆரம்பகாலத்தில் பாங்கு

முதலாளிகளும் வியாபார முதலாளிகளும், முதலாளித்துவ வளர்ச்சியில் ஆதிக்க பாத்திரம் பெற்றிருந்தனர். முதலாளித்துவம் ஏகபோகங்களாக வளருவதற்கு முந்திய காலத்தில் தொழில் முதலாளிகள் ஆதிக்கம் பெற்றிருந்தனர். ஏகாதிபத்திய காலகட்டத்தில், ஏகபோக முதலாளிகள் சர்வாதிக்கம் பெற்றுள்ளனர். சமுதாயத்திற்குத் தேவையான பொருள் உற்பத்தி முழுவதும் தற்காலத்தில் ஏகபோக முதலாளிகள் கையிலேயே உள்ளது. அமெரிக்க பெருமுதலாளிகள் உலகத்தின் பொருள் உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கும் பெருவளர்ச்சி பெற்றுள்ளனர். தங்கள் நாட்டுச் செல்வத்தில் அவர் கொண்டுள்ள ஆதிக்கத்தால் உலக முழுவதிலும் ஆதிக்கம் செலுத்த முயலுகிறுர்கள். அந்நிய நாட்டு உறவுகளாலும், ராணுவக் கூட்டுகளாலும், காலனியாதிக்கக் கொள்கையாலும், பொருளாதார ஊடுருவல்களாலும், வியாபாரங்களாலும் உலகத்தையே அவர்கள் கொள்ளையடித்து வருகிறுர்கள். யுத்தக் கருவிகளைச் செய்து குவிக்க தங்கள் அரசைத் தூண்டுகிறுர்கள். இப்பகுதி முக்கியமாக அமெரிக்காவில் உள்ளது. வேறு நாடுகளில், உதாரணமாக ஜப்பான், மேற்கு ஜெர்மனியிலுள்ள பெரு முதலாளிகளோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு, போட்டிகளைத் தவிர்த்து பல நாட்டு ஏகபோகங்களாக பெருக்கமடைந்துள்ளார்கள்.

ஏகபோகமல்லாத முதலாளித்துவமும் சுரண்டல் தன்மையுடையதுதான். அது தொழிலாளர்களைச் சுரண்டுகிறது. ஆனுல் அது ஏகபோகங்களால் பலவகையிலும் நெருக்கப்படுகிறது. எனவே அதன் நலன்கள் எப்பொழுதும் ஏகபோகங்களின் நலன்களோடு ஒத்துப்போவதில்லை. சில சமயங்களில் தனது நலன்கள், ஏகபோகங்களின் நலன்களுக்கு முரணுக இருக்கும்பொழுது அவை ஏகபோகங்களை

எதிர்க்கின்றன. தற்காலத்தில் இத்தகைய எதிர்ப்பு அதிகமாகும் வகையில் ஏகபோகங்களின் நெருக்கடிகளால் அவை ஏகபோகமற்ற முதலாளித்துவத்தின் நலன்களுக்கெதிராக செயல்படுகின்றன. ஏகபோகங்கள் தங்களது நெருக்கடியை ஏகபோகமற்ற முதலாளித்துவத்தின்மீது சுமத்தப் பார்க்கின்றன. அப்பொழுதெல்லாம் ஏகபோகமற்ற முதலாளித்துவம் ஏகபோக எதிர்ப்பு நிலைக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

முதலாளித்துவம் வளருகிற பொழுது, முதலாளித்துவ உற்பத்தி முறைகளே, தொழிலாளிகளை ஸ்தாபன ரீதியாக ஒற்றுமைப்படுத்தி பயிற்சியளித்து வருகின்றன.

இனி தற்கால சமூக உற்பத்தி முறையில் பங்கு கொள்ளும் உழைக்கும் வர்க்கங்களைப் பற்றிக் கூறுவோம்.

தற்காலத்துப் புராதன வர்க்கங்கள் பூர்ஷுவா வர்க்கமும், பாட்டாளிவர்க்கமும் என்று முன்னர் கூறினோம். சர்வதேச மொழிவழக்கில் முதலாளித்துவ வர்க்கத்தை பூர்ஷுவா என்றும், பாட்டாளி வர்க்கத்தை ப்ராலிட்டேரியட் (Proletariat) என்றும் அழைக்கிறோம்.

கடந்த ஐம்பதாண்டுகளில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் காரணமாகவும், விரைவான தொழில் நுணுக்க வளர்ச்சியின் காரணமாகவும், தொழிலாளி வர்க்கத்தின் உள்ளமைப்பில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியால் உடல் உழைப்பால் மட்டும் இயந்திரங்களில் உழைக்கிற தொழிலாளி வர்க்கப் பகுதிதவிர, வேறுபல திறமைகளையுடைய தொழிலாளிப் பகுதிகளும் தொழில்

களில் ஈடுபட்டுள்ளனர். ஏகபோக வளர்ச்சியினால் சுரண்டலின் தீவிரம் அதிகரித்துள்ளதால், சொந்த தொழில்கள் நடத்திவந்த பல சிறு தொழில் உடைமையாளர்கள், உடைமையிழந்து பாட்டாளி களாகியுள்ளனர். தொழில் வளர்ச்சியடைந்த முத லாளித்துவ நாடுகளில், தொழிலாளி வர்க்கத்தினுள் மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன.

1. இயந்திரத் தொழில் பாட்டாளிப் பிரிவு.
2. விவசாயத் தொழில் பாட்டாளிப்பிரிவு.
3. வியாபாரத் தொழில் பாட்டாளிப்பிரிவு.
4. [illegible]

**1. இயந்திரத் தொழில் பாட்டாளிப்பிரிவு**

இப்பிரிவில் உற்பத்தி தொழில்களிலும், கட்டிடம், போக்குவரத்து, செய்தி போக்குவரத்து, (தபால் தந்தி) ஆகியவை அடங்கும்.

முனிசிபல் தொழில்கள் (வாயு, நீர் வினியோ கம்) முதலிய பெரு இயந்திரத் தொழில்களில் கூலி பெறும் உழைப்பாளிகளாக பணிபுரிகிறவர்கள் பெரிய அளவு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதால் சமு தாயத்தின் உபரி மதிப்பில் பெரும்பான்மைப் பகுதி யைப் படைப்பவர்கள். இப்பகுதி ஸ்தாபன அமைப் பிலும், வர்க்க உணர்விலும், ஒற்றுமையிலும், பிற தொழிலாளிப் பகுதிகளைவிட மிக உயர்ந்த நிலையில் உள்ளது. அதனால் தொழிலாளி வர்க்கத்தின் செயல் மையமாக, பிறரை ஒன்றுபடுத்தி இணைக்கும் தலைமை யாக இப்பகுதி செயல்படுகிறது. எல்லா உழைக் கும் மக்களின் போராட்டங்களில் இவர்களே முன் னணிப் படையாக செயல்படுகிறார்கள். கம்யூனிஸ் டுக் கட்சிகளின் அடித்தளமும், மூலபலமும் இப் பகுதியாகத்தான் இருக்கவேண்டும்.

## 2. விவசாயத் தொழிலாளி வர்க்கம்

வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள் இயந்திரங்களோடு தொடர்புடையவர்கள். மரமறுக்கும் தொழில் போன்ற வகைத் தொழில்களிலும் இயந்திரங்களின் மூலம் உழைப்பு பயன்படுத்தப்படுகிறது. இவர்கள் கிராமப் புறத்து பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அடிமைத்தளமாவார்கள். ஆனால் நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கம்போல, ஸ்தாபன பலமும், வர்க்க உணர்வும் இப் பகுதியினருக்கும் இல்லை. இயந்திரப் பெருக்கத்தாலும், விவசாயம் இயந்திரமயமாகி வருவதாலும், தொழில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இப்பகுதியைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கைக் குறைந்துகொண்டே வருகிறது.

## 3. வியாபாரப் பாட்டாளிப்பகுதி

இப்பகுதியினர் உற்பத்தியான செய்ப்பொருள்களை விநியோகம் செய்யும் வியாபாரத் தொழிலில் கூலி பெற்று பணிபுரிகிறவர்கள். இவர்களுக்கு வர்க்க உணர்வு மிகக் குறைவு. இவர்களது எண்ணிக்கை முதல் பகுதியினரைவிட அதிகம். ஆனால் இவர்கள் முதலாளித்துவ தத்துவார்த்த பிடிப்பினுள் சிக்கியிருப்பவர்கள். தாங்களும் ஒருநாள் முதலாளியாகி விடலாம் என்று நம்புகிறவர்கள்.

## புரட்சியின் தலைமை

சமுதாய மாற்றத்தில் தலைமைப் பாத்திரம் வகிப்பது எந்தப் பகுதி? இக் கேள்வி சமுதாயவியல் அறிஞர்களிடையே 50 ஆண்டுகளுக்கு முன்னர் விவாதிக்கப்பட்டது. பூர்ஷுவா அறிஞர்கள், 1960-ல் முதலாளித்துவ நாடுகளில் இயந்திரத் தொழிலாளர்களின் தொகையையும், அலுவலக ஊழியர் தொகையையும் ஒப்பிட்டுக் கணக்கிட்டார்கள்.

மொத்தம் 20கோடி உழைப்பாளிகளில் 8.5 லட்சம் தான் இயந்திரத் தொழிலாளர்கள். 11.5 லட்சம் அலுவலக ஊழியர்கள். இந்தக் கணக்கிலிருந்து அவர்கள் வந்தமுடிவு இதுதான்.

''சமுதாய மாற்றத்தில் இயந்திரத் தொழிலாளி வர்க்கம்தான் முதன்மைப் பாத்திரம் உடையது என்று சொல்வது தவறு. ஏனெனில் அதன் எண்ணிக்கை, அலுவலக ஊழியர் எண்ணிக்கையைவிடக் குறைவு.''

இதற்கு லெனின் முன்னரே பதிலளித்துள்ளார். ''சமுதாயப் புரட்சியை செயல் படுத்தும் வர்க்கத்தின் பலம் எந்த அம்சங்களில் இருத்தல் வேண்டும்?

1. எண்ணிக்கை 2. நாட்டின் பொருளாதாரத்தின் அந்த வர்க்கத்தின் பாத்திரம் 3. உழைக்கும் மக்களோடு அந்த வர்க்கத்திற்கும் நேசத் தொடர்புகள் 4. ஸ்தாபன பலம். ஒரு நாட்டின் மொத்த ஜனத் தொகையில் அதன் விகிதத்தை விட மிக அதிகமான வலிமை இயந்திரத் தொழிலாளி வர்க்கத்திற்கு உண்டு. அலுவலக ஊழியர்கள், வர்த்தகத் தொழிலாளிகள், எலெக்ரானிக் தொழிலில் திறமை பெற்ற தொழிலாளிகளைவிடக் குறைந்த ஊதியம் பெறுகிறார்கள். இருபகுதியினரிடையே உள்ள பொருளாதார நிலையிலுள்ள வேறுபாடுகள் குறைந்து வருகின்றன. அலுவலகப் பணிகள் இயந்திரமயமாகி வருவதால் வேலையின் தன்மையிலும் வேறுபாடு குறைகிறது.

இவர்களில் நிர்வாகப் பொறுப்பிலுள்ள உயர்தர அதிகாரிகள், சுரண்டலுக்கு ஏஜென்டுகளாக உள்ளனர். அவர்கள் முதலாளிகளின் கருவிகளாகச் செயல்படுகின்றனர். நடுத்தர ஊழியர்களில் மேற்

பார்வை செய்பவர்களும், நிர்வாகிகளும் முதலாளிகளுக்கு நெருக்கமாக இருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மை அலுவலக ஊழியர்கள், தொழிலாளிகளைப்போல கூலி உழைப்பில் அமர்ந்துள்ளார்கள். அவர்களும் சுரண்டப்படுகிறார்கள். சுரண்டலை எதிர்த்து ஸ்தாபனங்கள் அமைத்துப் போராடுகிறார்கள். இப்பகுதிகளை தொழிலாளி வர்க்கம்; சமுதாய மாற்றத்திற்கும் சமாதானம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகிய போராட்டங்களில் இணைந்துக் கொள்ள முடியும். இவர்களைப் **ப்ரோலிட்டேரியட்** என்று சொல்லுகிறார்கள். உலக முழுவதும் மார்க்ஸீய நூல்களில் இச்சொற்கள் வழங்கி வருகின்றன.

தொழிலாளி வர்க்கம் அல்லது பாட்டாளி வர்க்கம் என்ற சொல்லை மார்க்ஸ் அளித்த வரையறுப்பு வருமாறு:

''உற்பத்தி சாதனங்கள் தம்மிடமிருந்து பறிக்கப்பட்டதால் தமது உழைப்பை மூலதன, உடைமையாளருக்கு விற்று பிழைக்கும் நிலைக்குத் தாழ்த்தப்பட்டதால், முதலாளித்துவ உற்பத்தி முறையில் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகிற வர்க்கம்.''

வரலாற்றில் இதற்கு முன் இருந்த சுரண்டப்பட்ட வர்க்கங்களிலிருந்து தொழிலாளி வர்க்கம் தன்மையில் வேறுபட்ட பெரிய இயந்திர உற்பத்தியோடு வேறுபட்டது. பெரிய இயந்திர உற்பத்தியோடு தொடர்பு கொண்டிருப்பதால் இதற்கு தனிச் சொத்துரிமையில் அக்கறையில்லை. சுரண்டலை உறுதியாக எதிர்க்கும் வர்க்கம் அதுவே. புரட்சிகரமான சமுதாய மாற்றத்திற்கு அதுவே உந்துசக்தியாக இருக்கிறது. இதனால்தான் லெனின், ''பெரிய அளவு

ப்ராலிட்டேரியட்—Proletariat

உற்பத்தியில், தொழிலாளி வர்க்கம் வகிக்கும் பாத்திரத்தினுல், அனைத்து உழைக்கும் மக்கள், சுரண்டப்படும் மக்களின் தலைமைப் பாத்திரத் தகுதியை அது பெறுகிறது''

தற்கால முதலாளித்துவ வளர்ச்சியினுல் அலுவலக ஊழியர்களின் எண்ணிக்கையும், அறிவாளிப் பிரிவினையின் (டாக்டர், ஆசிரியர் போன்ருேர்) எண்ணிக்கையும் அதிகமாயுள்ளது. இவர்களது பொருளாதார நிலைமை முதலாளித்துவ நாடுகளில், தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைக்கு நெருங்கி வந்துள்ளது. இப்பகுதியினரும் தங்களது பொருளாதார உரிமைகளுக்கு தொழிலாளி வர்க்கத்தைப் போலவே வேலை நிறுத்தம் உள்படப் பல விதப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். இவர்களது முதலாளித்துவ எதிர்ப்புணர்ச்சியையும், உரிமையுணர்வையும் மதித்து, சமாதானம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகிய போராட்டங்களில் தொழிலாளி வர்க்கம் இப்பகுதியினரை அணைத்துக் கொள்ள முடியும்.

அறிவாளிப் பகுதியினரைப் போலவே, அலுவலக ஊழியர்களின் பொருளாதார நிலைமையும் தொழிலாளிகளின் நிலைமையை நெருக்கி உள்ளது. சில தொழிலாளிப் பிரிவினர் அலுவலக ஊழியர்களைவிட அதிக ஊதியம் பெறுகிருர்கள். அவர்களும், உதாரணமாக அரசு ஊழியர்கள், பாங்கி ஊழியர்கள், தபால்தந்தி தொழிலாளி வர்க்கமும், வளர்ச்சியடைந்த முதலாளி வர்க்கமும் உள்ளன. ஆப்பிரிக்க நாடுகளில் வளர்ச்சியடையாத தொழிலாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும் இருக்கின்றன. விவசாயத்தில் நிலங்கள் பொதுவுடைமையாக உள்ளன. ஆசிய நாடுகளில் சமுதாய அமைப்புச் சிக்கலாக இருக்கிறது. இந்தியாவில் பெருமுதலாளி

வர்க்கம் உள்ளது. எண்ணிக்கையில் பிற ஆசிய நாடுகளைவிட தொழிலாளி வர்க்கம் அதிகம்,விவசாயி களே பெரும்பான்மையோர். நிலப்பிரபுத்துவம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அழிக்கப்பட வில்லை.

ஏகாதிபத்திய காலத்தில் தொழில் வளர்ச்சி அதிகமில்லாமல், விடுதலைப் பெற்ற பின்னரே இந் நாடுகளில் தொழில் வளர்ச்சியேற்பட்டதால், தொழிலாளி வர்க்கம் சிறியதாயும் பலவீனமானதா யும் இருக்கிறது. தொழில் வளர்ச்சி அதிகரித்து வருவதால், தொழிலாளி வர்க்கம் பெருகி வருகிறது. புதிதாக விடுதலைப் பெற்ற நாடுகளின் தொழிலாளி வர்க்கம் தற்கால முதலாளித்துவ சமுதாயங்களில் நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை அதிகரித் துள்ள போதிலும், இன்னும் இச் சமுதாயங்களில் பிரதான வர்க்க முரண்பாடு பூர்ஷுவா பாட்டாளி முரண்பாடுதான். பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்த்து, நடுத்தர வர்க்கங்களில் பல பகுதிகள் போராடு கின்றன. அவை தொழிலாளி வர்க்கத்தோடு இணைந்துகொண்டு வருகின்றன. அவை தொழிற் சங்க உரிமைகள் கோருகின்றன. தொழிலாளி வர்க்கப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக் கின்றன. பொதுப் போராட்டங்களில் கலந்துக் கொள்ள முன் வருகின்றன.

தொழிலாளி வர்க்கம், பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்த்து மூன்று அரங்கங்களில் போராடுகிறது.

1. பொருளாதாரப் போராட்டங்கள்.

2. அரசியல் போராட்டங்கள்.

3. தத்துவார்த்தப் போராட்டங்கள்.

பொருளாதாரப் போராட்டங்களில்தான் தொழிலாளி வர்க்கம், அதன் தோற்றக் காலத்தி

லிருந்து ஈடுபட்டு வந்துள்ளது. தற்காலத்தில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெருத தொழிலே கிடையாது. உலக ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் பரவலான அளவில் நடைபெறுகின்றன. தொழிலாளி வர்க்க நலன்களையும், ஒற்றுமையையும் பொருளாதாரப் போராட்டங்கள் பாதுகாக்க உதவுகின்றன. ஆயினும் இவற்ருல் மட்டும் முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படைகள் நொறுங்கி விடுவதில்லை.

சோஷலிஸ உணர்வு தொழிலாளி வர்க்கத்தில் தோன்றும்போதுதான் பொருளாதாரப் போராட்டம், அரசியல் போராட்டமாக மாற்றம் பெறுகிறது. அப்பொழுது தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தோடு, வர்க்கங்கள் என்ற நிலையில் ஒன்றையொன்று முழுமையாக எதிர்த்து நிற்கின்றன. அரசியல் போராட்டங்களே வர்க்கப் போராட்டத்தின் பிரதானமான வடிவமாகும். மற்றெல்லாப் போராட்டங்களும் அரசியல் போராட்டத்திற்கு அடங்கிய முக்கியத்துவ முடையவைதான். மார்க்சிஸ்டு லெனினிஸ்டுக் கட்சிகளின் தலைமையில், தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவ சட்டங்களையும் எதிர்த்து தனது சுதந்திரங்களுக்காகப் போராடுகிறது. தனது உரிமைகளை விஸ்தரித்துக் கொள்ளவும், முடிவில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும் போராடுகிறது. தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள், அரசியல் சீர்திருத்தங்களுக்காக அல்லாமல் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான நோக்கமுடையதாக இருந்தால்தான் அது புரட்சிகரமான போராட்டமாக இருக்கும்.

''தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது வரலாற்றுப் போக்கின்

தவிர்க்க முடியாத நிகழ்ச்சி என்பதை உணர வேண்டும்'' என்ற கருத்தே மார்க்சீய லெனினிஸத்தின் புரட்சிகரமான முடிவாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் குறிக்கோள்களையும், கடமைகளையும் தெளிவாக உணர்த்துகிற லெனினுடைய பின்வரும் வாசகத்தை மார்க்சிஸ்டு-லெனினிஸ்டுகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

''வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிப்பவர்கள் எல்லோரும் மார்க்சிஸ்டுகள் அல்லர். அவர்கள் முதலாளித்துவ அரசியல் சிந்தனையுடையவர்களாக இருக்கலாம். மார்க்சீயத்தை வர்க்கப் போராட்டம் என்ற கருத்தமைப்புக்குச் சுருக்கி விடுவது, மார்க்சீயத்தின் பரப்பைச் சுருக்குவதாகும். இது ஒரு திரிபாகும். இதை முதலாளிகள்கூட ஒப்புக் கொள்ளுவார்கள். மார்க்சிஸ்டு என்ற பெயருக்குத் தகுதிபெற வேண்டுமானால் ஒருவர், வர்க்கப் போராட்டத்தை ஒப்புக்கொள்வதோடு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும். இதுதான் மார்க்ஸிஸ்டு சிந்தனைக்கும், குட்டி - பூர்ஷ்வா சிந்தனைக்குமுள்ள வேறுபாடு.''

வர்க்கப் போராட்டத்தின் மூன்றாவது அரங்கம் தத்துவார்த்தப் போராட்டமாகும். இன்னும் தொழிலாளி வர்க்கம் உள்பட மக்கள் மனத்தில் ஆதிக்கம் செலுத்துவது முதலாளித்துவக் கருத்துக்களும், கருத்தமைப்புகளுமாகும். அவற்றை எதிர்த்து சோஷலிஸ்டு கருத்தமைப்பை தொழிலாளி வர்க்கத்தின் மனத்தில் புகுத்துவதும், மார்க்சீய சிந்தனையை அவர்கள் மனத்தில் வளர்ப்பதும், கொள்கைப் போராட்டம் அல்லது தத்துவார்த்தப் போராட்டம் எனப்படும்.

தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள், கடமைகள், குறிக்கோள்களையும் பற்றிய விஞ்ஞானக்

கண்ணோட்டத்தை மனத்தில் பதித்துக்கொள்ளாமல், ஆளும் வர்க்கத்தை எதிர்த்து தொழிலாளி வர்க்கம் தெளிவான போராட்டத் திசை வழியை வகுத்துக்கொண்டு போராட முடியாது.

தொழிலாளி வர்க்க இயக்கத்தில் விஞ்ஞான சோஷலிஸ தத்துவ அறிவையும், மார்க்சீய தத்துவ சிந்தனையையும் இணைக்காமல், அதனைப் புரட்சிகரமான போராட்டமாக உயர்த்த முடியாது. இக் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருப்பது பூர்ஷுவா தத்துவங்களும், நிலப்பிரபுத்துவ தத்துவங்களும்தான். சமய தத்துவங்களும், பூர்ஷுவா சமுதாய அரசியல் தத்துவங்களும் இப்பொழுது முழு முயற்சியோடு பரப்பப்படுகின்றன. கம்யூனிஸ எதிர்ப்பு சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காக அமெரிக்க அரசு, கோடிக்கணக்கான டாலர் செலவழிக்கிறது. தங்கள் நாட்டில் நூற்றுக்கணக்கான பல்கலைக் கழகங்களில் சோவியத்தாலஜி, மார்க்ஸாலஜி என்ற துறைகளில் கம்யூனிஸத்தையும், சோவியத் வாழ்க்கையையும் எதிர்க்கிற ஆராய்ச்சிகளும், வெளியீடுகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த வெளியீடுகளைப் பல நாடுகளில் ஏகபோகப்பத்திரிகைகள், பூர்ஷுவா பத்திரிகைகள் மூலமாகவும் டாலர் காதலர்களின் பிரசுரங்கள் மூலமாகவும் கடமையாக பரப்புகின்றது. இதனை எதிர்த்து மார்க்சீய தத்துவத்தையும், விஞ்ஞான சோஷலிஸத்தையும் பரப்புவதும், தொழிலாளி வர்க்க இயக்கத்தையும், விஞ்ஞான சோஷலிச சிந்தனையையும் இணைப்பதற்குரிய மார்க்ஸிஸ்டு லெனினிஸ்டுக் கட்சிகள் மேற்கொண்டுள்ளன.

தற்கால அரசியல் கட்சிகளில், உலக வியாபகமுடையவையும், புரட்சிகரமானவையும், சிறந்த ஸ்தாபன அமைப்புடையவும், ஒவ்வொரு நாட்டிலும்

தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக இருப்பவையும், தொழிலாளி வர்க்கத்தின் நலன் களுக்காக மட்டுமல்லாமல், உலக மக்களின் இன்ப வாழ்விற்காக நற்பணிபுரிபவையும், மார்க்ஸிஸ்டு லெனினிஸ்டுக் கட்சிகளே. பெரும்பான்மையான நாடுகளில் இவை "கம்யூனிஸ்டுக் கட்சி" என்ற பெயரில் இயங்கிவருகின்றன. சில நாடுகளில் வர லாற்றுக் காரணங்களினுல் வேறு பெயர்களில் செயல் படுவதும் உண்டு. "தொழிலாளர் கட்சி, சோஷ லிஸ்டு ஒற்றுமைக் கட்சி, தொழிலாளர்-விவசாயிகள் கட்சி, உழைக்கும் மக்கள் கட்சி" என்ற பெயர்களில் சில நாட்டு மார்க்ஸிஸ்டு லெனினிஸ்டுக் கட்சிகள் அழைக்கப்படுகின்றன.

உலகில் முதலில் தோன்றிய கம்யூனிஸ்டுக் கட்சியை மார்க்சும் லெனினும் 1848-ல் தோற்று வித்தார்கள். அதன் பெயர் 'கம்யூனிஸ்டு லீக்'. அதன் உறுப்பினர்கள் தொகை 300. இன்று உலகில் 88 கம்யூனிஸ்டுக் கட்சிகள் உள்ளன. 5 கோடி உறுப் பினர்கள் கம்யூனிஸ லட்சியத்திற்காக அனைத்து விதத் தியாகங்களும் செய்து பணி புரிகிறுர்கள். இன்று இக்கட்சிகள் உலகில் மாபெரும் அரசியல் சக்தியாக வளர்ச்சி பெற்று சமுதாய முன்னேற்ற திற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. முதலாளித் துவ நாடுகளில் ஜனநாயக சக்திகளோடும், கட்சி களோடும் இணைந்து, சமூக முன்னேற்றத்திற்காக வும், ஏகபோக ஆட்சியை ஒழிப்பதற்காகவும் கம்யூ னிஸ்டுக் கட்சிகள் போராடுகின்றன.

### விடுதலைக்குப் போராடும் நாடுகளிலும் விடுதலைப் பெற்ற நாடுகளிலும் வர்க்கப் போராட்டத்தின் நிலைமைகள்

ஆசியா, லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களில் என்பது நாடுகளுக்கு மேல்

1940ஆம் ஆண்டிற்குப் பின், ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுள்ளன. அவை விடுதலை பெறுவதற்கு அரை நூற்றாண்டிற்கு மேல் தமது சிறந்த புதல்வர்களை விடுதலைப்பீடத்தில் பலி கொடுத்துப் போராடியுள்ளன. இப்போராட்டங்களின் விளைவாக ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி அந்நாட்டு மக்களிடையே பெரிதும் வளர்ந்துள்ளது. விடுதலை பெற்ற நாடுகளில், வர்க்க அமைப்பு, வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் உள்ளது போல இல்லை. விடுதலை பெற்றுள்ள நாடுகளில்கூட வர்க்க அமைப்பு ஒரே மாதிரியாக இல்லை. இதற்குக் காரணம் அந்நாடுகளின் வேறுபட்ட வரலாற்று வளர்ச்சியாகும். இந்நாடுகளில் நிலப்பிரபுத்துவ, அடிமைச்சமுதாய எச்சங்கள் இன்னும் காணப்படுகின்றன. அவற்றோடு வளரும் முதலாளித்துவ வர்க்க உறவுகளும் உள்ளன. இந்நாடுகளில் ஒவ்வொரு வர்க்கத்தின் எண்ணிக்கையும், வர்க்க உறவுகளும், வர்க்கங்களின் சமூகப் பாத்திரங்களும் வேறுபடுகின்றன. பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் (சிலி, அர்ஜென்டைனா, பொலிவியா, பெரு) எண்ணிக்கையில் அதிகமான தொழிலாளிகளைக் கொண்டுள்ளது. ஆப்பிரிக்க நாடுகளில் தொழில் வளர்ச்சி பின் தங்கியிருப்பதால், ஆரம்பத்தில் முதலாளித்துவ வர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் பலவீனமாக உள்ளன. ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகப்பட்டு வருகிறது. மாலி போன்ற சிறிய நாடுகளில் இயந்திரத் தொழிலே இல்லாததால் முதலாளி வர்க்கமோ தொழிலாளி வர்க்கமோ இல்லாத இந்த நிலங்கள் குழுவுடைமையாக உள்ளன. குழுத்தலைவர்களது சுரண்டலும், வட்டிச் சுரண்டலும் வியாபாரச் சுரண்டலும் உள்ளன. இங்கு படித்த அறிவாளி வர்க்கம் சமுதாய மாறுதலுக்குத் தலைமைத் தாங்கி உழைப்

பாளி மக்களை சமுதாய முன்னேற்றத்துக்காகப் போராடத் தூண்டுகிறது.

இந்தியாவில் பெருமுதலாளிகள் உள்ளனர். இவர்கள் வளரும் நாட்டில் இருக்கும் பெருமுதலாளிகள் ஏகாதிபத்திய நாட்டு ஏகபோகங்களுடன் ஒப்பிடும்போது, இவர்கள் மிக அற்பமானவர்கள். இங்கு தொழிலாளி வர்க்கம் வளர்ந்துள்ளது. எண்ணிக்கையில் அதிகமான சமுதாய வர்க்கம், விவசாயிகளே. இங்கு நிலப்பிரபுத்துவம் முற்றிலும் அழிக்கப்படவில்லை. விவசாயிகளில் பலதரப்பட்டவர்கள் உள்ளனர்.

இந்நாடுகள் பலவற்றில் தொழிலாளி வர்க்கம் சிறிதாயுள்ளது. இந்நாடுகளில் இயந்திரத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளே ஆகியுள்ளதால் இன்னும் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் பெருகவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்கத்தின் பலம் வேறுபட்டதாயுள்ளது. எல்லா நாடுகளுக்கும் பொதுவானத் தன்மைகளை இங்கே குறிப்பிடுவோம்.

1. ஜனத்தொகையில் தொழிலாளி வர்க்கம் சிறிய பகுதிதான். சில ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னரே இயந்திரத் தொழில்களும் தொழிலாளி வர்க்கமும் தோன்றியது.

2. திறமையற்ற, அரைகுறைத் திறமையுள்ள தொழிலாளிகளே தொழிலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியாக இருப்பார்கள். மொத்தப் பாட்டாளி வர்க்க எண்ணிக்கையில் 80-90 சதவிகிதம் இவர்களே. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இவர்கள் அதிகம். இவர்களுக்குப் பொதுப் பள்ளிப் படிப்பும் குறைவு. வளர்ச்சியடைந்த நாடுகளைவிட இந்நாடு

களில் பெற்ருேர்களேயும், குழந்தைகளேயும் அதிக மாக தொழில்களில் வேலைக்கமர்த்துவது ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் அதிகம்.

3. சிறிய-நடுத்தரத் தொழில்களில் மிகப் பெரும்பான்மையான தொழிலாளிகள் பணிபுரிகின் றனர். இதனுல் அவர்கள் ஸ்தாபன ரீதியாகக் கூடு வதும், முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடு வதும் கடினமாக உள்ளது. அவர்களுக்கு வர்க்க உணர்வூட்டுவதும் சிரமமாக உள்ளது.

4. விவசாயத் தொழிலில் ஈடுப்பட்ட தொழி லாளரின் எண்ணிக்கை எல்லாத் தொழிலாளர் எண்ணிக்கையைப் பார்க்கிலும் அதிகம்.

விவசாயிகள் தொழிலாளிகளின் இயற்கை நண்பர்கள். அவர்களே இந்நாடுகளில் பெரும்பான் மையினர். இந்நாடுகளில் குத்தகை முறையில் விவ சாயிகள் பயிரிடுகிருர்கள். இந்நாடுகளில் விவசாயி களின் வருமானம் மிகக்குறைவு. மிகப் பல விவசாயி களுக்குப் போதுமான நிலம் கிடையாது அல்லது நிலமே இராது. நிலமற்ற விவசாயிகள், மொத்த ஜனத்தொகையில் பெரும் பகுதியினராக உள்ளனர் என்பதை பின்வரும் புள்ளி விவரம் காட்டும்.

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | — | 66 | சதவிகிதம் |
| ஈராக் | — | 60 | ,, |
| லெபனுன் | — | 70 | ,, |
| மே. ரொக்கா | — | 72 | ,, |
| அர்ஜென்டினு | — | 72 | ,, |

லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலவுடைமை யாளர்களாலும் இதர உள்நாட்டு முதலாளிகளா லும்மட்டுமின்றி, அமெரிக்க நாட்டு ஏகபோகங் களாலும் விவசாயிகள் சுரண்டப்படுகின்றனர்.

யுனைட்டெட் பழக் கம்பெனி என்ற அமெரிக்க ஏக போகத்திற்கு 10 லட்சம் ஹெக்டேர் நிலங்கள், லத்தீன் அமெரிக்க நாடுகளில் சொந்தமாயுள்ளது. இந் நாடுகளில் விவசாயிகள் இரட்டைச் சுரண்ட லுக்கு உள்ளாகியுள்ளனர். இந்நாடுகளில் மக்கள் சுரண்டலில் இருந்து விடுதலை பெறுவதற்கு நிலப்பிர புத்துவச் சுரண்டலையும், அந்நிய ஏகபோகச் சுரண் டலையும் ஒழிக்கப் போராட வேண்டும்.

இந் நாடுகளில் விவசாயி - தொழிலாளி ஒற்றுமை, தொழிலாளி வர்க்கத் தலைமையின்கீழ் உருவாக்கப்படுதல் வேண்டும். இந்த சக்திகள்தான் புரட்சிகரமான சமுதாய மாறுதல்களை ஏற்படுத்த முடியும், தேசீய சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும். இந்த நேச கூட்டமைப்புதான் ஏகாதிபத்தி யத்திற்கும், கலோனியலிஸத்திற்கும் (காலனியாதிக் கத்திற்கும்) எதிரான பரந்தஅணியாக விளங்கும்.

இந் நாடுகளில் பூர்ஷுவா வர்க்கம் இரு பிரிவு களாக உள்ளது. ஒன்று ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான பெரு முதலாளி வர்க்கம், மற்றொன்று நடுத்தர, சிறுதர, தேசீய முதலாளி வர்க்கம். தேசீய முதலாளி வர்க்கப் பகுதியின் நலன்கள், பெரு முதலாளிப் பகுதியால் ஒடுக்கப்படுகின்றன. ஏகாதி பத்திய நாடுகளில் தலையீடு இல்லாமல் தங்கள் நாட்டுத் தொழில்களை, தங்கள் நாட்டுச் செல்வா தாரங்களாகக் கொண்டே வளர்த்துக் கொள்ள இப் பகுதி விரும்புகிறது. தம் நாட்டுத் தொழில் களின் சுயேச்சையான வளர்ச்சியை விரும்பும் முதலாளித்துவ வர்க்கப்பகுதி இது. அயல் நாட்டு முதலாளித்துவத்தைச் சார்ந்து நிற்காமல் உள் நாட்டுத் தொழில்களை வளர்த்துக் கொள்ள விரும் பும் பகுதி இது.

இதற்கு நேர்மாறாக உள் நாட்டு பெரு முதலாளிப் பகுதி, (ஏகபோகப் பகுதி) அயல் நாட்டு

ஏகபோகங்களோடு தொடர்புக் கொண்டிருப்பதால், அவற்றின் நலன்களுக்கேற்ப இரட்டைச் சுரண்டலில் ஒரு பங்குப் பெற விரும்புகிறது. இவர்கள், தேசீய முதலாளிகளுக்கு விரோதமாக இருக்கிறார்கள்.

இந் நாடுகளில், நிலவுடைமையாளர்கள் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளார்கள். இவர்களுள் பரம்பரை நிலப்பிரபுக்களும், புதுப்பணக்கார-நிலவுடைமையாளர்களும் உள்ளனர். தங்களுடைய உரிமைகளையும், ஆதிக்கத்தையும் இவர்கள் பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்றனர். தேசீய விடுதலை இயக்கத்திற்கும் சமூக முன்னேற்ற இயக்கத்திற்கும் இவர்கள் விரோதமாகவே செயல்படுகின்றனர். இவர்கள் அயல்நாட்டு சுரண்டல்காரர்களோடு சேர்ந்து கொள்ளும் உள்நாட்டுப் பிற்போக்குச் சுரட்டல்காரர்கள்.

இவர்களுடைய துணையோடு வெளிநாட்டு ஏகாதிபத்தியம், இந் நாடுகளின் உள் நாட்டு அரசியலில் தலையிடுகிறது. முற்போக்கு இயக்கங்களுக்கு எதிராக இவர்களுக்கு உதவி செய்து, பிற்போக்கு இயக்கங்களைத் தூண்டி விடுகிறது. இதனுல்தான் இந் நாடுகளின் வர்க்கப் போராட்டத்தின் உள்ளடக்கம், முற்போக்கு வர்க்கங்களுக்கும், ஏகாதிபத்திய-உள் நாட்டுப் பிற்போக்குக் கூட்டிற்கும் இடையே நடைபெறுகிற போராட்டமாகும்.

# 7. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும்பொழுது வர்க்கப் போராட்டம்

வர்க்க வேறுபாடில்லாத கம்யூனிஸ்டு சமுதாயத்தை ஏற்படுத்துவதுதான் தொழிலாளி வர்க்கத்தின் குறிக்கோளாகும். வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதற்கு உற்பத்தி சாதனங்களில் தனி உடைமையை அகற்ற வேண்டும். இது பற்றி லெனின் எழுதியதாவது: ''வர்க்கங்களை முழுமையாக ஒழிப்பதற்கு சுரண்டல்காரர்களைத் தோற்கடித்தால் மட்டும் போதாது. உற்பத்திச் சாதனங்களின்மீது உடைமையாளர்களுக்கு இருக்கும் உரிமைகளை ஒழித்தால் மட்டும் போதாது. உற்பத்தி சாதனங்களில் தனி உடைமையை முழுவதும் ஒழிக்க வேண்டும். நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசங்களை ஒழிக்கவேண்டும். உடல் உழைப்பாளிகளுக்கும், மூளை உழைப்பாளிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை ஒழிக்க வேண்டும். இக் கடமைகளை நிறைவேற்ற நீண்ட காலம் ஆகும்.''

இக் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எவையென்பது சோஷலிஸ நாடுகளின் அனுபவத்திலிருந்து தெளிவாக விளங்குகிறது.

முதலில் சுரண்டல்காரர்களின் ஆட்சியை ஒழிக்க வேண்டும். உற்பத்தி சாதனங்களில் அவர்களுடைய தனி உடைமையை அகற்றவேண்டும்.

இரண்டாவது சிறிய பண்ணைகளை இணைத்து பெரிய கூட்டுப் பண்ணைகளை அமைக்க வேண்டும். ஒரே விதமான சோஷலிஸ்டு நிலவுடைமையை

ஏற்படுத்த வேண்டும். நிலப்பிரபுக்களின் சுரண்டலை முழுவதும் அகற்ற வேண்டும்.

மூன்றாவது தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும்இடையேயுள்ள வர்க்க வேறுபாடுகளை நீக்க வேண்டும். நகரத்துக்கும், கிராமத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை அகற்ற வேண்டும்.

சோஷலிஸகட்டத் துவக்கக் காலத்தில் பல வகைப் பொருளாதார அமைப்புகள் இருக்கும். முதலாளித்துவ அமைப்பிலிருந்து சோஷலிஸ அமைப்புத் தோன்றுகிற காலத்தில், சோஷலிஸ்டு உற்பத்தி, சிறு உடைமை உற்பத்தி, முதலாளித்துவ உற்பத்தி ஆகிய உற்பத்தி முறைகள் ஒரே சமயத்தில் செயல்படும். இந்த அமைப்புகளுக்குரிய தொழிலாளி வர்க்கம், சிறு உற்பத்தியாளர் வர்க்கம், முதலாளித்துவ வர்க்கம் மூன்றும் உற்பத்தி உறவுகள் கொண்டிருக்கும். நிலப்பிரபுக்கள், நிலவுடைமை ஒழிக்கப்பட்டு விடுவதால் ஒரு வர்க்கமாக இருக்க மாட்டார்கள்.

தொழிலாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாகிறது. உடைமை வர்க்கங்களை ஒழிப்பதற்காக அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமைத்துக் கொள்கிறது. அரசியல் அதிகாரத்தையும், உற்பத்தி சாதனங்களின் உடைமையையும் இழந்து விட்டதால் முதலாளித்துவ வர்க்கம் பிரதான வர்க்கம் என்ற நிலையிலிருந்து, பிரதான மற்ற வர்க்கமாகத் தாழ்ந்து விடுகிறது. அடக்கப்பட்ட வர்க்கமாயிருந்த தொழிலாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாகிறது. இவ்வர்க்கம், சோஷலிஸ்டு நிர்மாணத்திற்கு வழிகாட்டியாகவும், அமைப்பாளியாகவும் மாறி விடுகிறது. உழைக்கும் விவசாயி வர்க்கம் பிரதான துணைவர்க்கம் ஆகிறது. சிறு விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், நிலப்பிரபுக்களின் சுரண்டலினின்றும் விடுதலை பெறுகி

ரூர்கள். கூட்டுப் பண்ணைகளின் தோற்றத்தில் எண்ணிக்கையில் மிகுதியான விவசாயிகள், முதலாளிகளை ஆதரிப்பார்களா அல்லது தொழிலாளிகளை ஆதரிப்பார்களா என்பதைப் பொறுத்துள்ளது. எனவே தொழிலாளி வர்க்கம் உழைக்கும் விவசாயிகளை சோஷலிஸப் பாதையில் வழி நடத்தி, அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டும். இதற்குத் தேவையான போராட்டம் முன்னர் தொழிலாளி வர்க்கம் நடத்திய விரோதப் பான்மையான போராட்டமல்ல. தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் நண்பர்கள் என்ற உணர்வில் அவர்களோடு விவாதித்தும், அவர்களை வற்புறுத்தியும், பொறுமையாக விளக்கம் தந்தும், சோஷலிஸ உணர்வை வளர்த்து, தன்னோடு உறுதியாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

இக் காலக் கட்டத்தில் சிறு உற்பத்தியாளர் வர்க்கத்தை, நடுநிலைமை நிலையில் வைத்திருக்க வேண்டும். அவர்கள் இரட்டைத் தன்மையுடையவர்கள். அவர்கள் பெரு முதலாளிகளின் சுரண்டலுக்குட்பட்டவர்கள். ஆனால் அவர்களே தொழிலாளிகளை சுரண்டுபவர்களும் ஆவார்கள். அவர்களை முதலாளிகள் பக்கம் தள்ளிவிடக் கூடாது.

இக்கால கட்டத்தில் ஐந்து விதமான வர்க்கப் போராட்ட வடிவங்கள் தோன்றக்கூடும்.

**முதலாவது:** சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை ஒடுக்க வேண்டும். வர்க்கப் போராட்டத்தின் நிலைமைக்கும், நாட்டின் சமுதாய நிலைகளுக்கும் ஏற்றவாறு, பொருளாதார, அரசியல் ராணுவ நிலைமைகளை தொழிலாளி வர்க்கம் மேற்கொள்ள வேண்டும்.

**இரண்டாவது:** சுரண்டல்காரர்கள் தமது பழைய உடைமைகளைக் கைப்பற்றிக் கொள்ள ஆயுதம்

தாங்கி போராட முற்பட்டால், ஆயுதம் தாங்கி தொழிலாளி வர்க்கமும், அதன் வர்க்க அரசும் உள்நாட்டுப் போரில் ஈடுபட நேரிடும். ஆயுதம் தாங்கிப் போராடி, விரோதமான வர்க்கங்களின் எதிர்ப் புரட்சியை அடக்க வேண்டும்.

**மூன்ருவது:** சிறு உடைமையாளர்களை விரோதித்துக் கொள்ளாமல் நடு நிலைமையில் வைத்துக் கொள்ள வேண்டும். இது பற்றி முன்னரே குறிப்பிட்டோம்.

**நான்காவது:** புதிய சோஷலிஸ்டு சமுதாயத்தில் உற்பத்தியில் பங்காற்றுவதற்கு, அறிவாளிப் பகுதி இராது. அதனுல் திறமைப் பெற்ற முதலாளித்துவ அறிவாளிப் பகுதியின் திறமையை சோஷலிஸ நிர்மாணப் பணிக்கு பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை சோஷலிஸ்டு உணர்வுடையவர்களாக மாற்றுவது ஒரு முக்கியமான பணியாகும்.

**ஐந்தாவது:** இக் காலத்தில், ஒரு புதிய கட்டுப்பாட்டை அமுல் படுத்த வேண்டும். "ஒவ்வொரு புதிய சமூக அமைப்பிற்கும், புதிய மனித உறவுகளும் புதிய கட்டுப்பாடுகளும் தேவை" என்று லெனின் எழுதினுர். சோஷலிசத்தைக் கட்டி அமைப்பதற்கு, சுரண்டல் வர்க்கங்களை ஒழித்து விட்டப்பிறகு, சிறு உற்பத்தியாளர்களின் மனப்பான்மையை மாற்றியும், முதலாளித்துவ அறிவாளிப் பகுதியாளரையும், சோஷலிஸ உணர்விற்கு மாற்றத் தீவிர முயற்சி செய்ய வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் பழைய சிந்தனைகளையும் சோஷலிஸ சிந்தனையால் மாற்ற வேண்டும்.

எனவே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு, சமுதாயம் மாற்றப்படுகிற கால கட்டத்தில் தனது குறிக்கோள்களையும் மேலும் வளர்ப்பதால்

அவர்களுடைய புற வாழ்க்கையும் அக வாழ்க்கையும் வளர்ச்சி பெறுகின்றன. பொருளாதார, அரசியல் நலன்களில் ஒன்றுபட்டு, தொழிலாளி வர்க்கமும், விவசாயி வர்க்கம் உறுதியான நேச சக்திகளாகின்றன. இவ்வர்க்கங்களிலிருந்தே படித்துப் பயிற்சி பெற்ற இளைஞர்கள் புதிய சோஷலிஸ்டு அறிவாளி வர்க்கமாக வளருகின்றனர்.

சமுதாய அமைப்பு புரட்சிகரமாக மாறியபின் வர்க்கங்களின் உறவுகளின் தன்மையும், போராட்டத்தின் தலையும் மாறுகின்றன. வர்க்கப் போராட்டம் இக்காலத்தில் முடிந்து விடுவதில்லை. ஆனால் அதன் கடமைகளும், வடிவங்களும் வழி முறைகளும் மாறிவிடுகின்றன. ஏனெனில், தொழிலாளி வர்க்கம் இப்பொழுது ஒடுக்கப்பட்ட வர்க்கமாக இல்லாமல், ஆளும் வர்க்கமாக அரசாங்க அதிகாரத்தைக் கைவசம் கொண்டுள்ளது. இந்த அதிகாரத்தை அது பழைய உடைமை வர்க்கங்களின் எதிர்ப்பை அடக்குவதற்கும், சோஷலிஸ்டு மாற்றங்களை ஏற்படுத்தவும் அது பயன்படுத்துகிறது. இந்தக் கால கட்டத்தில் பிரதான முரண்பாடு தொழிலாளி வர்க்கத்திற்கும், பழைய முதலாளி வர்க்கத்திற்கும் இடையே உள்ள முரண்பாடாகும். சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும், அழிந்து வரும் முதலாளித்துவத்திற்கும், வளர்ந்து வரும் தொழிலாளி வர்க்கத்திற்கும் பலமுனைப் போராட்டங்கள் நடைபெறும். தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக தொழிலாளி வர்க்கம் தீவிரமாகப் போராட வேண்டியுள்ளது. ஆனால் போராட்டத்தின் வடிவங்களும், வழி முறைகளும் பெரிதும் மாறுதல் அடைகின்றன. இக்கால கட்டத்தின் வர்க்கப் போராட்டம் சமுதாய வளர்ச்சிக்குரிய உந்து சக்திகளில் ஒன்றாக இருக்கிறது.

## சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு சமுதாயம் மாறும் கட்டத்தில் வர்க்க முரண்பாடுகள் மறைதல்

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு சமுதாயம் மாறுகிற காலகட்டம் முடிவடையும் பொழுது சோஷலிச உற்பத்தி முறைகள் உறுதிப் படுகின்றன. இப்பொழுது சமுதாய அமைப்பில் வர்க்க முரண்பாட்டு நிலைமை பெரிதும் மாறுதல் அடைகிறது. சுரண்டும் வர்க்கங்கள் மறைந்து விட்ட பின்னர், நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் குறைந்துவிட்ட பின்னர், உடலுழைப்பிற்கும், மூளை உழைப்பிற்கும் வித்தியாசம் இல்லாமற்போன பின்னர், இரண்டு நேச வர்க்கங்களே, சோஷலிஸ சமுதாயத்தில் மிஞ்சுகின்றன. இவற்றோடு மக்கள் அறிவாளிப் பகுதியும் வளர்ச்சி பெறுகிறது.

சமுதாய அமைப்பின் தீவிர மாற்றங்களின் காரணமாக சமுதாய வர்க்கங்களின் நிலைமைகளிலும் மாறுதலேற்படுகிறது. தொழிலாளி வர்க்கம் சுரண்டலிலிருந்து முற்றிலும் விடுதலையடைந்து சோஷலிச தொழில்களில் பணிபுரிகிறது. முதலாளித்துவ தொழில்களில் பணிபுரியும் தொழிலாளிகள் யாருமில்லை. விவசாயிகள் சிறிய நிலவுடைமையாளர்களாக இருந்த நிலைமை மாறி, பெரிய கூட்டுறவுப் பண்ணைகளில் பணி புரிகிறார்கள். பழைய சமுதாயத்தில் இருந்த ஏழை விவசாயி, நடுத்தர விவசாயி, பணக்கார விவசாயி என்ற பிரிவுகள் இப் புதிய சமுதாயத்தில் இல்லாமற் போய்விடுகிறது. அறிவாளிப் பகுதி முழுவதும் உழைக்கும் மக்களின் குடும்பங்களிலிருந்து தோன்றுகிறது. மக்களிடையே இருந்து தோன்றி மக்களுக்குப் பணி புரியும் வர்க்கமாக அது இருக்கிறது. தொழிலாளிகள் விவசாயிகள் ஆகிய அனைத்து உழைக்கும்

மக்களும் நல்வாழ்வு பெறுகிருர்கள். கம்யூனிஸ உணர்வு, எல்லா வர்க்கங்களேச சேர்ந்தவர்களிடத்தும் வளர்ச்சியடைகிறது. சோஷலிஸ சமுதாயத்தில் எல்லா வர்க்கங்களேச் சேர்ந்தவர்களும் அரசியல் தத்துவார்த்த சிந்தனேயில் ஒருமைப்பாடு கொண்டவர்களாக இருக்கிருர்கள். புதிய அரசியல் சமுதாயத்தின் எல்லாப் பகுதி மக்களுடைய நலன்கள் பிரதிபலிக்கிறது. மக்களும் அரசும் தத்துவார்த்த நோக்கில் ஒன்றுபடுகிருர்கள். சோஷலிஸ சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனேவருக்கும் உழைககும் உரிமை, ஓய்வு பெறும் உரிமை, கல்வி பெறும் உரிமை, பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை முதலிய ஜனநாயக உரிமைகள் அரசியல் சாசனத்தால் வழங்கப்படுகின்றன. அவர்களுடைய ஒற்றுமைக்கு அடிப்படையாக இருப்பது, மார்க்ஸிய-லெனினிய தத்துவமாகும்.

## 8. மார்க்ஸீய சமுதாயப் புரட்சிக் கொள்கை

இந் நூலின் முந்தைய பகுதிகளில் ஒரு விதமான வர்க்க சமுதாயங்களேப் பற்றி குறிப்பிட்டிருக்கிருேம். அவை அடிமை உடைமை சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் ஆகியவை. இச் சமுதாயங்களில் வர்க்கப் போராட்டம் நடைபெற்றதென்றும் அதன் விளேவாக சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்தனவென்றும் கண்டோம். உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகளோடு பொருந்தாத நிலேயில் வர்க்கப் போராட்டம் தீவிரமடைகிறது. ஆளும் வர்க்கம் பிற்போக்கான சமூக சக்தியாகிறது. அதாவது தனது நலன்களுக்கு விரோதமான முற்போக்கான மாறுதலேத்

தடுக்க முயல்கிறது. மாறுதலை விரும்பும் சமூக சக்திகள் ஆளும் வர்க்கத்தை எதிர்க்கின்றன. இந்த எதிர்ப்பு படிப்படியாக ஒன்றுபட்ட செயலாக வளர்ச்சி பெறுகிறது. பழைய சமுதாய உறவுகளைப் பாதுகாக்க முயலுகிற ஆளும் வர்க்கத்தின் வன்முறைக்கு எதிராக முற்போக்கு சக்திகள் வன்முறையைப் பயன்படுத்தி எதிர்க்கத் தொடங்குகின்றன. இந்நிலையில் வர்க்கப் போராட்டம் அதிகபட்சத் தீவிரத் தன்மை அடைகிறது. இந்நிலைமையைத்தான் சமுதாய புரட்சி என்று மார்க்ஸீய வாதிகள் அழைக்கிறார்கள்.

### அடிப்படை, மேற்கோப்புகளின் தீவிரமாற்றம்

உற்பத்தி உறவுகளுக்கும், வளர்ந்து வருகிற உற்பத்தி சக்திகளுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுதான் சமுதாய புரட்சியின் பொருளாதார அடிப்படையாகும். மார்க்ஸினுடைய வரையறுப்பின்படி, ''உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளினுடைய வளர்ச்சிக்குத் தடையான விலங்குகளாகும்போது சமுதாய புரட்சி பிறப்பதற்குரிய காலம் நெருங்கி வருகிறது.'' இம் முரண்பாடு சமுதாயப் புரட்சியால் தீர்த்து வைக்கப்படுகிறது, புதிய உறவுகள் தோற்றுவிக்கப் படுகின்றன. சமுதாய புரட்சி என்பது சமுதாய உறவுகள் அனைத்தையும் முற்றிலும் மாற்றியமைத்து புதியதொரு சமூக, பொருளாதார அமைப்பைத் தோற்றுவிப்பதாகும். எனவே புரட்சி பொருளாதார அடிப்படையையும், அதன் மேற்கோப்பையும் பெரிதும் மாற்றியமைக்கிறது. பொருளாதார அமைப்பு மாறுவதோடு மட்டுமல்லாமல் பழைய அமைப்பின் அரசியல் போக்குகள் சட்ட உரிமைகள் போன்ற மேற்கோப்புகளும் முற்றிலும் மாற்றப்படுகின்றன. தத்துவார்த்தம், அரசியல், ஒழுக்கம்,

சமயம், கலை முதலிய எல்லாக் கருத்துத் துறைகளி லும் புதிய சிந்தனைகள் தோன்றுகின்றன. சமுதாய புரட்சியின் அடிப்படைப் பிரச்னை அரசாங்க அதி காரப்பிரச்னை ஆகும். ஒரு சமுதாயத்தின் அமைப்பை முழுமையாக மாற்றுவதற்கு அரசியல் அதிகாரம் தேவை. ஒரு வர்க்கத்தின் கையிலிருந்து மற்றொரு வர்க்கத்தின் கைக்கு அதிகாரம் மாறுவது புரட்சி யின் முதன்மையான அறிகுறியாகும். இவ்வாறு அதி காரம் மாறுவதற்கு வெவ்வேறு அளவில் வன் முறை தேவையாகலாம். புரட்சி என்றாலே வன் முறைத் தேவை என்பது பொருளல்ல. ஆனால் பிற் போக்கு வர்க்கங்கள் தமது அதிகாரத்தை வன் முறையைக் கையாண்டு பாதுகாத்துக் கொள்ள முயன்றால் முற்போக்கு வர்க்கங்கள் வன் முறையைக் கையாண்டு அதிகாரத்தைக் கைப் பற்றிக் கொள்ள முயலும். இது பற்றி மார்க்ஸ், "ஒரு பழைய சமுதாயம் ஒரு புதிய சமுதாயத்தைக் கருவினுள் கொண்டிருக்கும்போது வன்முறைப் புரட்சி புதிய சமுதாயம் பிரசவிக்க மருத்துவச்சி யாக இருக்கிறது" என்று கூறினார்.

ஒரு சமுதாயப் புரட்சித் தோன்றுவதற்கு சில அகவியல் புறவியல் காரணிகள் இருத்தல் வேண் டும். இவைபற்றி லெனின் கூறுவதாவது: "ஆளும் வர்க்கங்கள் எவ்வித மாறுதலுமின்றி பழைய முறையிலேயே ஆட்சி நடத்த முடியாத நிலைமை தோன்ற வேண்டும். ஆளும் வர்க்கங்களுக்குள்ளே ஏதாவது ஓர் வடிவத்தில் நெருக்கடி ஏற்படுதல் வேண்டும். கொள்கை பற்றிய இத்தகைய நெருக் கடியின் போது அடக்கப்பட்ட வர்க்கங்களின் கோபம் பீறிட்டுக் கொண்டு வெளிப்படுதல் வேண் டும். ஒரு புரட்சி நடைபெறுவதற்கு சுரண்டப்படும் வர்க்கங்கள் முன்போல வாழ முடியாது என்று முடி வுக்கு வந்துவிட்டால் மட்டும் போதாது. ஆளும்

வர்க்கங்களும் முன்போல் வாழமுடியாது என்ற நிலைமைக்கு வர வேண்டும்.

''அடக்கப்பட்ட வர்க்கங்களுடைய துன்பங்கள் அவர்களது சகிப்புத் தன்மையின் எல்லையை அடைந்துவிட வேண்டும். மேற் குறிப்பிட்டக் காரணங்களால் பொது மக்களின் எதிர்ப்புச் செயல்கள் அதிகப்பட வேண்டும். நெருக்கடி நிலைமைகளாலும், ஆளும் வர்க்கங்களின் செயல்களாலும் அவர்கள் செயல்பாட்டிற்கு உந்தித் தள்ளப்படுகிறார்கள்.''

மேற்கூறிய நிலைமையை புரட்சி நிலைமை என்று லெனின் அழைக்கிறார். இத்தகைய நிலைமை இல்லாமல் செயற்கையாக யாரும் புரட்சியை உற்பத்திச் செய்துவிட முடியாது. பிறவியல் நிலைமைகள் பக்குவமாகும் பொழுது மக்களின் அகவியல் உணர்வும் அதற்கு பொருத்தமாக இருந்தால்தான் புரட்சி தோன்றும். அகவியல் நிலைமை என்றால் புரட்சியை சாதிக்க வேண்டிய வர்க்கத்தின் வர்க்க உணர்வும், ஸ்தாபன பலமும், மக்களிடம் அந்த வர்க்கத்தின் செல்வாக்கும், அந்த வர்க்கத்திற்கு அரசியல் வழிகாட்டக்கூடிய கட்சியின் தகுதியும் ஆகும். புரட்சிகரமான கொள்கையினால் வழிகாட்டப்பட்டு, முற்போக்கு வர்க்கங்கள் பிற்போக்கான அரசியல் அமைப்பை உடைத்தெறிந்துவிட்டு தமது வர்க்க அரசியல் அதிகாரத்தால் பழைய உற்பத்தி உறவுகளை அகற்றிவிட்டு புதிய உற்பத்தி உறவுகளை ஏற்படுத்துகின்றன. பழைய சமுதாய அமைப்பு அடைய முடியாத உழைப்பு உற்பத்தித் திறனை புதிய சமுதாயம் அடைய வேண்டும். எனவே புதிய சமுதாய அமைப்பு உற்பத்திச் சக்திகளை வளர்க்கக் கூடியதாக இருக்கும். சமுதாயப் புரட்சி வர்க்கச் சமூகங்கள் வளர்ச்சி அடைவதற்கு இன்றியாமையாத நியதி

யாகும். பழைமையிலிருந்து புதுமைத் தோன்ற அதுவே உந்துச்சக்தியாக உள்ளது. அழியத்தொடங்குகிற சமுதாயத்தை அழித்து வளரத் தொடங்குகிற சமுதாயத்தை உருவாக்குகிறது. மனித இனத்தின் வரலாற்று வளர்ச்சியில் திடீர் திருப்பங்களேயும், துரிதமான முன்னேற்றத்தினேயும் அது ஏற்படுத்துகிறது. புரட்சி, பல நாட்டு மக்களேயும் செயலுக்குத் தூண்டுகிறது. சமுதாயப் புரட்சிகளின் நெறிமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடும். சில வகையான புரட்சிகள் இறுதி மாறுதலுக்குத் தயாரிப்பாக அமையலாம். இவ்வகையான புரட்சிகளுக்குப் பின் முழுமையான சமுதாயப்புரட்சி தோன்றும். சமுதாயப் புரட்சிக்குமுன் புரட்சியை நடத்தும் சக்திகள் அரசியல் அதிகாரத்தைப் பெற வேண்டும். **இதனே அரசியல் புரட்சி** என்று கூறுகிறேம். ஒரு பிற்போக்கு வர்க்கம் முற்போக்கு வர்க்கத்திடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டால் அதனே **எதிர்ப்புரட்சி** என்கிறேம். உதாரணமாக சிலியில் நடந்தது எதிர்ப்புரட்சி. திடீர் ஆட்சிக் கவிழ்ப்புகள் முற்போக்காகவுமிருக்கலாம், அல்லது பிற்போக்காகவுமிருக்கலாம். ஆட்சிக் கவிழ்ப்பின் பின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பகுதி எந்த வர்க்கத்தின் நலன்களுக்குப் பணிபுரிகிறது என்பதைக் குறித்து அதனே முற்போக்கு என்றே பிற்போக்கென்றே கூறுகிறேம். இத்தாலியில் 1922லும், ஜெர்மனியில் 1933லும் பாசிஸ்ட்டுகளும் நாஸிகளும் திடீர் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியது பிற்போக்கானதாகும். ஏனெனில் அவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை மிகவும் பிற்போக்கான தேசீய ஏகபோகங்களின் நலன்களே விஸ்தரிக்கவே பயன்படுத்தினர்கள். தற்காலத்தில் திடீர் ஆட்சிக் கவிழ்ப்பு முறைகளே முற்போக்கான ராணுவப் பகுதிகள் பயன்படுத்தி முற்போக்கு வர்க்களுக்காக அரசாங்க அதி

காரத்தை பயன்படுத்துகின்றனர். போர்ச்சுகலில் நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பையும், கிரீஸில் ராணுவ சர்வாதிகார ஆட்சியை பூர்ஷுவா ஜன நாயக வாதிகள் கவிழ்த்த செயலையும் மேற்கூறிய கருத்துக்கு உதாரணங்களாகக் கூறலாம். ஒவ்வொரு சமுதாயப் புரட்சியின் தன்மையும் அது எத்தகைய சமுதாய அமைப்பை ஒழிக்கிறது, எத்தகைய சமுதாய அமைப்பை உருவாக்குகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. எனவே வரலாற்றில் நிகழ்ந்துள்ள சமுதாயப் புரட்சிகள் அனைத்தின் தன்மைகளைப் பற்றி சுருக்கமாகக் காண்போம்.

## முதன் முதலில் பண்டைய சமுதாயத்திலிருந்து வர்க்க சமுதாயம் தோன்றுதல்

மனித வரலாற்றில் முதன் முதலில் தோன்றிய சமுதாயம் புராதன பொதுவுடைமை உறவுச் சமுதாயம் ஆகும். இதனுள் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி பெற்றபோது வர்க்க சமுதாயம் தோன்றியது. இனக்குழு சமுதாயத்தினுள் அடிமை முறை வளர்ந்து அது அடிமை உடைமைச் சமுதாயமாக மாறியது. பாபிலோனியா, கிரீஸ், எகிப்து, ரோம் முதலிய நாடுகளில் இச்சமுதாயங்கள் நிலைபெற்று இருந்ததற்கு தெளிவான சான்றுகள் உள்ளன. அடிமைகள், அடிமைச் சொந்தக்காரர்களையும் எதிர்த்து பல போராட்டங்கள் நடத்தியுள்ளனர். ஆனால் அவை தனிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப் பட்டன. பல நூற்றாண்டுகளுக்குப் பின் சுதந்திர மான விவசாயிகளின் நிலைமையும், அடிமைகளின் நிலைமையும் பொருளாதார நிலையில் சமமாகி விட்டது. அடிமை வர்க்கமும் விவசாய வர்க்கமும் அடிமைச் சமுதாய நெருக்கடிக் காலத்தில் ஒன்று சேர்ந்து போராடத் தொடங்கின. அடிமைச் சமுதாயம் வீழ்ச்சியடைந்து நிலப்பிரபுத்துவ சமுதாய

மும் ஆட்சியும் தோன்றின. அடிமைச் சமுதாயத்தைப் போலவே நிலப்பிரபுத்துவ சமுதாயமும் ஒரு வளர்ச்சிக் கட்டத்தையும், ஒரு வீழ்ச்சிக் கட்டத்தையும் வரலாற்றில் கடந்து சென்றது. நிலப்பிரபுத்துவத்தின் வளர்ச்சிகளின் கட்டத்திலேயே ஐரோப்பாவில் பல விவசாயிகளின் போர்கள் நடந்து வந்துள்ளன. நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து விவசாயிகளும், ஏழை மக்களும் போராடினர். பிரான்சில் 12, 13-ம் நூற்றாண்டுகளிலும், பொகிமியாவில் 15-ம் நூற்றாண்டிலும் விவசாயிகள் தீவிரமாகப் போராடினர். ஆயினும் இப்போர்களில் விவசாயிகள் தோற்றுப் போயினர். ஏனெனில், விவசாயிகள் ஒரு நல்ல அரசன் வேண்டுமென்றே போராடினார்கள். கொடுங்கோன்மையை எதிர்த்து, செங்கோன்மைக்காகத் தங்கள்மீது சுமத்தப்பட்ட நிலப்பிரபுத்துவ அடக்குமுறையை ஒழிக்க வேண்டுமென்று போராடினார்கள். சீனாவில் போராடிய விவசாயிகள் தனி அரசுகளை நிறுவியபொழுது அவை நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மை அரசுகளாகவே மாறி விட்டன. இத்தாலியில் விவசாயிகளின் புரட்சியால் நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மை ஒழிக்கப்பட்டபின் வியாபாரிகளது ஆட்சி நிறுவப்பட்டது.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலைக்கு ஏற்றவாறு இருந்தவரைக்கும் விவசாயிகளின் புரட்சிகள் நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்க முடியவில்லை.

முதலாளித்துவ உற்பத்திமுறை தலை தூக்கிய பின்னர்தான் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை பலவீனமடையத் தொடங்கியது. முதலாளித்துவ உற்பத்தி சக்திகள், நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளோடு முரண்பட்டன. புதிய சமுதாய சக்திகளான முதலாளித்துவ வர்க்கமும், பாட்டாளி

வர்க்கமும அரசியல் அரங்கில் தோன்றின. முதலாளித்துவ உற்பத்தி முறையின் தோற்றத்தோடு நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியின் கால கட்டமும் துவங்கிற்று. இது சுமாராக 16-ம் நூற்றுண்டில் துவங்கிற்று. ஒவ்வொரு நாடாகப் பார்த்தால் முதலாளித்துவப் புரட்சியின் ஆரம்ப காலம் சிறிது முன் பின்னுக இருக்கலாம். சில நாடுகளின் முதலாளித்துவ புரட்சியின் காலங்களை கீழே குறிப்பிடுவோம்.

| | | |
|---|---|---|
| நார்வே, டென்மார்க் | — 1566 | — 1609 |
| இங்கிலாந்து | — 1641 | — 1653 |
| அமெரிக்கா | — 1775 | — 1783 |
| பிரான்ஸ் | — 1789 | — 1794 |

ஒவ்வொரு முதலாளித்துவப் புரட்சியும் அந்தந்த நாட்டு வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ப வர்க்க சேர்க்கைகளைக் கொண்டிருந்தது. இவ் வர்க்கச் சேர்க்கைகள், இங்கிலாந்து, பிரான்ஸ், டென்மார்க் முதலிய நாடுகளில் வெவ்வேறு விதமாய் இருந்தன. இங்கிலாந்தில் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான புரட்சியில் முதலாளிகளும், முதலாளிகள் ஆகிவிட்ட நிலப்பிரபுக்களில் ஒரு பகுதியினரும் தலைமை ஏற்றனர். இதனுல்தான் இப் புரட்சியின் விளைவாக நிலப் பிரச்சினையில் விவசாயிகளுக்கு ஆதரவான தீர்வு ஏற்படவில்லை. முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் சேர்ந்து நின்று விவசாயிகளுக்கு எதிராக நிலப்பிரபுக்களுக்கு நிலவுரிமை கிடைக்கும்படி செய்தனர். விவசாயிகள் முதலாளிகளோடு சேர்ந்து புரட்சிப் போராட்டங்களின் முன்னணியில் நின்ற போதும் அவர்கள் ஏமாற்றப்பட்டனர். 19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் விவசாய வர்க்கம் என்ற பெயரே இல்லாமல் போயிற்று. இந் நிலைமைக்கு நேர்மாருன நிலைமை பிரெஞ்சு முதலாளித்துவ புரட்சியில் காணப்பட்டது. பிரான்

சில் நிலப்பிரபுக்களில் மிகச் சில பகுதியினரே முதலாளிகளாக மாறியிருந்தனர். பெரும் பகுதி நிலப்பிரபுக்கள் விவசாயிகளை நேரடியாகவும், முதலாளிகளை மறைமுகமான வரிகளின் மூலமாகவும் சுரண்டி வாழ்ந்தனர். பிரெஞ்சு முதலாளிகள் நிலப்பிரபுத்துவ அரசையும், நிலப்பிரபுக்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு விவசாயிகளையும், தொழிலாளிகளையும் சேர்த்துக் கொள்ள முடிந்தது. நிலப்பிரபுக்களோடு கொண்டிருந்த நேச உறவு களைக் கைவிட்டு அவர்கள் விவசாயிகளோடும், சிறு உற்பத்தியாளரோடும், தொழிலாளரோடும் நேச உறவை ஏற்படுத்திக் கொண்டனர். பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தினுல் தலைமை தாங்கப்பட்ட புரட்சியின் விளைவாக நிலப்பிரபுத்துவ அமைப்பு, நாட்டிலும், நகரத்திலும் முழுவதுமாக அழிக்கப் பட்டது. நிலப்பிரச்சினை விவசாயிகளுக்கு ஆதர வாகத் தீர்வு காணப்பட்டது.

எப்பொழுதுமே, முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான புரட்சியில் உழைக் கும் மக்களோடுதான் சேர்ந்து கொள்ளும் என்று சொல்வதற்கில்லை. அது எந்த வர்க்கங்களோடு சேரும் என்பதை ஆளும் நிலப்பிரபுத்துவ வர்க்கத் தின் நிலைமையும் முதலாளி வர்க்கம் உழைக்கும் வர்க்கங்களோடு கொண்டுள்ள உறவையும் பொறுத் தது. முதலாளி வர்க்கமும் ஒரு சுரண்டும் வர்க்கம். ஆதலால் உழைக்கும் மக்களால் தனது சொத்துரி மைக்கும் ஆபத்து வருமோ என்று அஞ்சுவது இயற்கையே. ஜெர்மனியில் தொழிலாளி வர்க்கத் தோடும் விவசாய வர்க்கத்தோடும் கூட்டுச்சேராத காரணத்தால் பூர்ஷுவாப் புரட்சி வெற்றி பெற முடியவில்லை

முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் ஏகாதி பத்தியம் என்று லெனின் கூறினர். ஏகாதிபத்தியக்

கால கட்டத்தில் முதலாளித்துவ நாடுகளில் வர்க்கங்களின் உறவுகள் பெரிதும் மாறுதலடைகின்றன. பல முதலாளித்துவ நாடுகளில் நிலப்பிரபுத்துவ ஒழிப்புப் புரட்சி முற்றுப் பெறவில்லை. இப் புரட்சியை நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு-முதலாளித்துவப் புரட்சி என்று மார்க்ஸீய வாதிகள் அழைக்கிறார்கள். இந் நாடுகளில் தொழிலாளி வர்க்கமும் விவசாய வர்க்கமும் இப் புரட்சிக்கு உந்து சக்திகள் ஆகின்றன. தொழில் முதலாளித்துவ கால கட்டத்தில் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முதலாளித்துவப் புரட்சிக்கு முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்கியது. ஆனால் ஏகாதிபத்தியக் கால கட்டத்தில் பல நாடுகளில் முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தோடு சேர்ந்து கொண்டது.

சார்பு நாடுகளிலும், கலோனியல் அடிமை நாடுகளிலும் நிலைமை வேறுவிதமாக இருந்தது. அந் நாடுகளில் தேசீய முதலாளித்துவ வர்க்கம், நிலையான தன்மையுடையதாக இல்லாதிருந்த போதிலும் அது ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மைகள் கொண்டதாக இருக்கிறது. எனவே முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி முற்றுப்பெறாத இந்தியா போன்ற ஏகபோகமல்லாத தேசீய முதலாளித்துவ வர்க்கம் ஜனநாயக மாற்றங்களை விரும்பும் புரட்சிகரமான சக்தியாக விளங்குகிறது.

நிலப்பிரபுத்துவ ஒழிப்புப் புரட்சிகள் இரண்டு வகையானவை. ஒன்று, உச்சத்திலிருந்து செயல்படும் முதலாளித்துவப் புரட்சி. இரண்டு, உழைக்கும் மக்கள் பெருமளவில் பங்குகொள்ளும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி. மக்கள் திரளாக செயல்படுவதால் இதை மக்கள் புரட்சி என்றும் கூறலாம். மேற்கூறிய முதல் வகையான புரட்சியில் விவசாயிகளும், தொழிலாளிகளும் பங்கு கொள்ளாம

லேயே முதலாளித்துவ வர்க்கம், நிலப்பிரபுத்துவ எதிர்புரட்சியில் வெற்றி பெறுகிறது. இரண்டாவது வகைப் புரட்சியில் தொழிலாளிகளும், விவசாயி களும் பங்கு கொண்டு புரட்சியின் விளைவுகளை வெளிப்படுத்துகிறார்கள். லெனின் தம்முடைய ''அரசும் புரட்சியும்'' என்ற நூலில், இவ்விரு வகை புரட்சிகளுக்கு உதாரணங்கள் காட்டுகிறார். முதல் வகைப் புரட்சிக்கு உதாரணங்களாக, 1908-ல் நடை பெற்ற (துருக்கியப் புரட்சியையும், 1910-ல் நடை பெற்ற போர்த்துக்கீசிய புரட்சியையும் உதாரணங் களாகக் கூறுகிறார். 1905-ல் நடைபெற்ற ருஷ்யப் புரட்சியை மக்கள் புரட்சிக்கு உதாரணமாக காட்டுகிறார்). துருக்கியப் புரட்சியிலும், போர்த் துக்கீசியப் புரட்சியிலும் மக்கள் பங்குகொண்ட போதிலும் பெருந்திரளாக பங்கு கொள்ளாத தினால் புரட்சியின் போக்கின்மீது தங்கள் வர்க் கங்களின் செல்வாக்கை செலுத்த முடியவில்லை.

முதலாளித்துவ வர்க்கம் புரட்சிகளில் வெற்றி பெறும்போது, நிலப்பிரபுத்துவ அரசாங்கக் கரு வியை முற்றிலும் அழித்து விடுவதில்லை. அதுவே ஒரு சுரண்டும் வர்க்கமாதலால், வர்க்கச் சுரண்டலை அது ஒழிப்பதில்லை. நிலப்பிரபுத்துவ அரசாங்கக் கரு வியை முதலாளித்துவ வர்க்கம் கைப்பற்றிக் கொண்டு, தன்னுடைய சுரண்டல் தேவைகளுக் கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளுகிறது. இப்படி மாற்றியமைக்கிறபோது அது வெற்றி பெற்றது, முதலாளித்துவ புரட்சியின் மூலமா அல்லது மக்கள் புரட்சியின் மூலமா என்பதைப் பொறுத்து அர சாங்க அமைப்பில், ஜனநாயக அம்சங்கள் காணப் படும். மக்கள் மிகுதியாகப் பங்கு கொண்ட புரட்சி யின்மூலம் முதலாளி வர்க்கம் அதிகாரத்திற்கு வந் திருக்குமானால் நிலப்பிரபுத்துவ அரசாங்கம் உடைத் தெறியப்படும்.

நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு-பூர்ஷுவா புரட்சிகள், தேசீய விடுதலைப் போர்களின் வடிவத்தில் கடந்த சில நூற்றுண்டுகளின் வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. அயல் நாட்டு நிலப்பிரபுத்துவ அரசு, வேறு நாட்டில் ஆட்சி செலுத்தி வந்தால் அதனை எதிர்த்து நடைபெற்ற புரட்சிப் போர்கள் விடுதலைப் போர்களாக இருந்திருக்கின்றன. இப்புரட்சிகளுக்கு உள்நாட்டு முதலாளித்துவம் தலைமை தாங்கியிருக்கிறது. மக்கள் திரளாக பங்கு கொண்டுள்ளனர். இவை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாகவே இருந்தன. இத்தகைய புரட்சிகளுக்கு உதாரணமாக, 16-வது நூற்றுண்டில் நடைபெற்ற நார்வே, டென்மார்க் புரட்சியையும், 18-ம் நூற்றுண்டில் நடைபெற்ற அமெரிக்கப் புரட்சியையும், 19-ம் நூற்றுண்டில் நடைபெற்ற லத்தீன் அமெரிக்கப் புரட்சிகளையும் குறிப்பிடலாம். முதல் புரட்சி ஸ்பானிய ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்றது. இரண்டாவது புரட்சி ஆங்கில சாம்ராஜ்யத்தின் ஆட்சியை எதிர்த்து நடைபெற்றது. மூன்றுவது புரட்சி ஸ்பானிய, போர்த்துக்கீசிய கொடுங்கோன்மையை எதிர்த்து நடைபெற்றது. இவையாவும் உள்நாட்டு முதலாளித்துவத்தின் தலைமையில் அந்நிய நிலப்பிரபுத்துவ சாம்ராஜ்ய ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்றவை. முதலாளித்துவ நாடுகள் தங்கள் அடிமை நாடுகளைச் சுரண்டுகிற வேகமும், பரப்பும் அதிகரித்தபொழுது உள்நாட்டு முதலாளிகள் அயல்நாட்டு முதலாளித்துவத்தை எதிர்த்தனர். இந்த அம்சம் ஏகாதிபத்ய மூலதன ஏற்றுமதி, கலோனியல் நாடுகளுக்கு அளிக்கப்பட்ட பொழுதிலிருந்து தோன்றத் தொடங்கியது. இந்தியாவில் நடைபெற்ற தேச விடுதலைப் போராட்டம் மக்கள் பெருமளவு பங்கு கொண்ட காரணத்தால் அது பூர்ஷுவா-ஜனநாயகப் புரட்சியாகும்.

வரலாற்றில் நடைபெற்றுள்ள பல வகைப் புரட்சிகளிலின்றும் பாட்டாளி வர்க்க சமுதாயப் புரட்சி, பல அடிப்படையான அம்சங்களில் வேறு படுகிறது. அக்டோபர் சோஷலிசப் புரட்சி அதற்கு முன்னர் நடைபெற்றுள்ள பூர்ஷுவா புரட்சிகளி லிருந்து அடிப்படையாக வேறுபட்டது. முந்தைய புரட்சிகளில் உழைக்கும் மக்கள் வெற்றி பெற்ருலும் அந்த வெற்றியைப் புதிய சுரண்டல்காரர்கள் பறித்துக் கொண்டு விட்டார்கள். பழைய நிலப்பிர புத்துவ சுரண்டல்காரர்களுக்குப் பதில் புதிய முதலாளித்துவ சுரண்டல்காரர்கள் உழைக்கும் மக்களின் எஜமானர்களாஞர்கள். முந்தைய புரட்சி கள் ஒரு வகையான சுரண்டலேயும், சுரண்டல் ஆட்சியையும் ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாக மற்ருெரு வகை சுரண்டலேயும் சுரண்டல் ஆட்சியை யுமே ஸ்தாபித்தன. ஆனுல் பாட்டாளி வர்க்க சோஷலிசப் புரட்சியான அக்டோபர் புரட்சி எல்லா வகையான சுரண்டலேயும் ஒழித்து விட்டது. சோஷ லிசப் புரட்சிக்கும் முதலாளித்துவப் புரட்சிக்கும் மற்ருெரு முக்கியமான வேறுபாடு உள்ளது. நிலப் பிரபுத்துவ சமுதாயத்திற்குள்ளேயே முதலாளித்துவ உற்பத்தி ஒரு விரோதமான உற்பத்தி முறையாகத் தோன்றி விடுகிறது. அதற்குள்ளேயே இவ்விரண்டு உற்பத்தி முறைகளுக்கும் முரண்பாடு தோன்றி, முதலாளித்துவ உற்பத்தி முறை வளருகிறது. ஆனுல் சோஷலிச உற்பத்தி முறை தனக்கு முந்திய உற்பத்தி முறையான முதலாளித்துவ உற்பத்தி முறையோடு சேர்ந்து முதலாளித்துவ சமுதாயத்தி லேயே தோன்றுவதில்லே. சோஷலிச உற்பத்தி முறைக்குத் தேவையான இயந்திர உற்பத்தியும் உற்பத்தி சக்திகளின் சமுதாயத் தன்மையும் முதலாளித்துவ உற்பத்தி முறையில் தோன்றிவிட்ட

போதிலும் அவ்வுற்பத்தி முறை அழிக்கப்பட்ட பின்னர்தாம் சோஷலிச அமைப்புமுறை தோன்று கிறது. பூர்ஷுவாப் புரட்சி ஏற்கனவே வளர்ந்து வரும் முதலாளித்துவ உற்பத்தி முறையைப்பிரதான உற்பத்தி முறையாக ஆக்குவதே நோக்கமாகும். ஆனால் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் அதிகாரத் தைக் கைப்பற்றிய பின்னர்தாம் புதிய சோஷலிச உற்பத்தி முறை நிறுவப்பட வேண்டும். முதலாளித் துவ உற்பத்தி சாதனங்களை சமூக உற்பத்தி சாதனங் களாக மாற்றுவதற்கு ஒரு அரசியல் புரட்சியின் மூலம் முதலாளித்துவ வர்க்க அதிகாரத்தை ஒழித்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது அவசியம். அவ்வதிகாரத்தை பயன்படுத்தித்தான் உறபத்தி சாதனங்களின் சமூக உடைமையையும். கூட்டுடைமையையும் நிறுவுதல் வேண்டும். இந்த மாறுதல் நடைபெற நீண்டகால வர்க்கப் போராட் டம் நிகழ வேண்டியது அவசியமாகும். இக்கால கட் டம் முழுவதும் சோஷலிசப் புரட்சிக் கால கட்ட மாகும். இக்கால கட்டத்தில் அரசியல், பொருளா தார, பண்பாட்டு வாழ்க்கை முழுமையாக மாற்றியமைக்கப்படுகிறது. முதலாளித்துவத்திலி ருந்து சோஷலிசத்திற்கு மாறுகின்ற புரட்சிகரமான மாற்றம், படிப்படியான பரிணும மாற்றத்தால் ஏற்பட முடியாது.

20-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் முதலாளித் துவ அமைப்பு ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற் றது. முற்போக்கு சக்திகள், ஏகாதிபத்தியத்தை ஒழிக்கும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டன.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சில புரட்சிகர மான இயக்கங்களிலிருந்து சோஷலிஸப் புரட்சி தோன்றக்கூடும். முதலாளித்துவப் பாதையில் சிறிது

தூரம் முன்னேறிய நாடுகளில், சோஷலிஸப் புரட்சி தோன்றுவதற்கு முன்னர், நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி இயக்கங்கள் தோன்றலாம். பொருளாதார அரசியல் துறைகளில் நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்களை அகற்ற அது முற்படும். இப் புரட்சிகள் ஏகாதிபத்ய எதிர்ப்புத் தன்மை கொண்டிருக்கும்.

உலக முதலாளித்துவ அமைப்பு, சோஷலிஸப் புரட்சிக்கான பக்குவ நிலையடையும் பொழுது, விவசாயி வர்க்கம், பாட்டாளி வர்க்கத்தோடு கூட்டுச் சேர்ந்து ஏகாதிபத்திய முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடும் பொழுது, முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்ற சிறிது காலத்திற்குள்ளேயே சோஷலிஸ்டுப் புரட்சியின் கடமைகளைப் பாட்டாளி வர்க்கம் மேற்கொள்ள இயலும்.

நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துவிட்ட முதலாளித்துவ நாடுகளில், சோஷலிஸப் புரட்சிக்கு முன்னர், ஏகபோக எதிர்ப்பு-ஜனநாயகப் புரட்சிகள் தோன்றி, அவை வெற்றியடைந்த பின்னரே சோஷலிஸப் புரட்சிக்குரிய தன்மைகள் பக்குவமடையும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலக ஏகபோகங்கள் பிரம்மாண்டமாக வளர்ச்சியடைந்து தங்கள் சுரண்டலை உலக முழுவதற்கும் விஸ்தரித்துள்ளன. சுரண்டல் வர்க்கம் உலக முழுவதையும், சுரண்டல் களமாக ஆக்கிக் கொண்டிருக்கிற நிலைமையில் உலக மக்கள் அனைவருமே, ஏகாதிபத்தியச் சுரண்டலை எதிர்க்கும் மாபெரும் சக்தியாக வளர்ச்சி பெறுகிறார்கள். எனவே, ஏகபோகங்களை எதிர்த்து பாட்டாளி வர்க்கம் நடத்துகிற போராட்டத்திற்கு, அறிவாளிப் பகுதிகளும் விவசாயிகளும், நகர நடுத்தர மக்களும், செயல் பூர்வமான ஆதரவளிக்கிறார்கள்.

அவர்களே ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரணியில் சேருகிறார்கள். இதனால் புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் சமுதாய அடிப்படை பெரிதும் விரிவடைகிறது. முதலாளித்துவ ஏகபோகங்களை எதிர்க்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பணி, பரப்பும் பலமும் அடைகிறது.

சீர்திருத்தங்களுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் மக்கள் நடத்தும் போராட்டம், அவற்றின் குறுகிய எல்லைகளைக் கடந்து, ஏகபோக எதிர்ப்பு—புரட்சி போராட்டமாக உருவெடுக்கிறது. "ஜனநாயகக் கோரிக்கைக்காக உழைக்கும் மக்கள் நடத்தும் போராட்டம், சோஷலிசத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதியே" என்று 1960 மாஸ்கோ அறிக்கை கூறுகிறது. இப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் மக்கள் பகுதிகள், தம்மிடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளுகிறார்கள். போராட்டங்களின்மூலம் அரசியல் உணர்வு மக்களிடையே வளருகிறது. சோஷலிஸப் போராட்டத்தின் கடமைகளை உணர்ந்துகொண்டு, அவற்றை நிறைவேற்றும் உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது.

இப் புதிய நிலைமைகள் உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கு ஆதரவான சாத்தியப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. பல முதலாளித்துவ நாடுகளில் இந்த வர்க்கக் கூட்டாளி ஏகபோக ஆதிக்கத்தை முறியடித்து, அதன் ஆட்சியை அகற்றி, உழைக்கும் வர்க்கங்களின் கூட்டாட்சியை நிறுவுகிற புரட்சியை நிறைவேற்ற முடியும். இவ்வர்க்கங்களுக்கு தொழிலாளி வர்க்கமே தலைமை தாங்கி வழிகாட்ட இயலும். ஏகபோக எதிர்ப்பு—ஜனநாயக மக்கள் அரசு அமைத்தால், அது விரைவிலேயே தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிஸப் புரட்சியாக உருவாகி வளர முடியும்.

தேசிய விடுதலைபெற்ற நாடுகளில், ஜனநாயகப புரட்சி சக்திகள், உலக ரீதியான வர்க்கச் சேர்க்கையில் ஏகாதிபத்திய — ஏகபோக — எதிர்ப்புப் பேரணியில் ஒரு முக்கியமான படைப் பிரிவாகும். அந் நாடுகளில், உள்நாட்டு ஏகபோகங்களும், நிலப் பிரபுத்துவமும், அயல் நாட்டு ஏகபோகங்களோடு கைகோர்த்துக் கொள்வதால், அந் நாடுகளின் புரட்சிக் கடமைகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவ எதிர்ப்பாக இருக்கும். இந்தியாவில் புரட்சியின் நிலைமை இதுதான். ஏகாதிபத்திய நிலப் பிரபுத்துவ எதிர்ப்புக் கடமையைத்தான் இந்தியாவின் புரட்சிகரமான வர்க்கங்கள் மேற்கொண்டுள்ளன. இந்தப் புரட்சியில் இந்திய தேசீய முதலாளிகளுக்கும் பங்குண்டு. அவர்களுடைய இரட்டைத் தன்மையை அறிந்த தொழிலாளி வர்க்கமும், கம்யூனிஸ்டுக் கட்சியும், நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைகளில் அவர்களுடைய பிறழ்ச்சியையும், ஊசலாட்டத்தையும் உறுதியாக எதிர்த்து, அவர்களை மக்கள் போராட்ட இயக்கத்திற்குக் கொண்டு வருகிறது. இக் கடமையை தொழிலாளி வர்க்கம், தேசீய முதலாளி வர்க்கத்தின் நாடியைத் தாங்கிச் செய்வதில்லை. விவசாயி வர்க்கத்தோடு உறுதியான நேச உறவை ஏற்படுத்திக் கொண்டு, இயக்கத்தையும், கூட்டணியையும் பலப்படுத்துவதன் மூலமாகவே, முதலாளிகளின் பிறழ்ச்சியையும் ஊசலாட்டத்தையும் தடுத்து நிறுத்துகிறது.

தேசிய விடுதலை இயக்கம்பற்றிய லெனினுடைய புகழ் பெற்ற வாசகம் இங்கே கருதத்தக்கது.

''ஏகாதிபத்திய அறிவாளிகள், பொருளாதார விடுதலையை ஒதுக்கிவிட்டு, அரசியல் விடுதலையையே வற்புறுத்துகிறார்கள். ஆனால் பொருளாதார விடுதலையே இரண்டினுள் முக்கியமானது.'' புதி

தாக விடுதலை பெற்ற நாடுகளில் சுயேச்சையான பொருளாதார வளர்ச்சி ஏற்படாதபடி ஏகாதிபத்தியங்கள் தடுக்கின்றன. வளர்ச்சியடையாத நிலையில், இந்நாடுகளின் பொருளாதாரத்தோடு பிணைத்து, தங்கள் சுரண்டலைப் பாதுகாத்துக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகள் திட்டமிடுகிறார்கள். இதனாலேயே அரசியல் விடுதலை பெற்றவுடன், அடிமை நாடுகளின் புரட்சி இயக்கம் முடிந்து விடுவதில்லை. அது புரட்சியின் மற்றோர் பகுதியின் ஆரம்பமே. அரசியல் விடுதலை பெற்றதும், சுதந்திர தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வாய்ப்பு தானாகவே பழுத்து விடுவதில்லை. இந்த வாய்ப்பு செயலாகி விடாதபடி, ஏகாதிபத்தியங்கள் தடைசெய்கின்றன. இத்தடையை நீக்க ஏகாதிபத்திய பொருளாதாரப் பிணைப்புகள் அகற்றப்படுவதற்காக விடுதலை பெற்ற நாடுகள் போராட வேண்டும், இதுவே விடுதலைப் புரட்சியின் இரண்டாவது கட்டம். இந்நாடுகள் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருப்பதற்கு அவற்றின் தொழில்கள் பின் தங்கிய நிலையில் இருப்பதே காரணம். இவை, தங்கள் தொழில்களை விரைவாக வளர்த்துக் கொள்ள வேண்டும். பின்தங்கிய நாடுகளே, ஏகபோகங்களுக்குச் சந்தைகளாகவும், சுரண்டல் வேட்டைக் காடுகளாகவும் இருக்கும். ஆதலால், இந்நாடுகளின் தொழில் வளர்ச்சியை ஏகபோகங்கள் விரும்பமாட்டா. உள்நாட்டு நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்காமல் நவீன இயந்திரத் தொழில்களை வளர்க்க முடியாது. எனவே தொழில் வளர்ச்சிக்கு நிலப்பிரபுத்துவ அமைப்பு ஒழிக்கப்படுவது அவசியம்.

இந்நிலையில் கடுமையான வர்க்கப் போராட்டம் நிகழ்கிறது. ஏகாதிபத்திய ஆதரவு-நிலப்பிரபுத்துவ பிற்போக்கு சக்திகள், தங்கள் பலம் முழுவதையும் திரட்டி, ஏகாதிபத்திய எதிர்ப்பு—நிலப்

பிரபுத்துவ சக்திகளனைத்தையும் எதிர்த்து உக்கிர மாகப் போராடுகின்றன. முதலாளித்துவ நெருக் கடியால் மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைப் பயன் படுத்திக்கொண்டு, ஜனநாயகத்தையும், முற்போக் குப் பாதையையும் தாக்குகின்றன. சோவியத் எதிர்ப்பு சோஷலிஸ எதிர்ப்பு பாதையில், அதிர்ச்சி யுற்ற மக்களைத் திருப்பிவிட பெரு முயற்சியில் ஈடு பட்டுள்ளன. முற்போக்கு சக்திகள் ஒற்றுமைப்படும் பொழுது, பிற்போக்கு சக்திகளும் தங்கள் பலம் அனைத்தையும் திரட்டி, வரலாற்றை பின்னேக்கித் திருப்ப முயலுகின்றன. இவர்களிடையே பாஸிஸ சக்திகள் தலை தூக்குகின்றன. மார்க்ஸிஸ அறிவில் லாத போலி மார்க்ஸிஸ்டுகளும், எந்தக் கலகமும் புரட்சியென்று நம்பி தங்கள் குரலையும், கலகக் கூச்ச லோடு சேர்த்து ஒலிக்கின்றனர்.

முற்போக்கு சக்திகளும், பிற்போக்கு சக்தி களும், புரட்சிப் போராட்டக்களத்தில், மகாபாரதப் போரில் பாண்டவர்களும் கௌரவர்களும் நின்றது போல் நிற்கிறார்கள்.

இப்போராட்டம் இருவகையான பாதைகளுக் கான போராட்டம். அவை முதலாளித்துவப் பாதை, முதலாளித்துவமற்ற பாதை என்பனவாகும். நமது நாடு முதலாளித்துவப் பாதையில் சென்றுவருகிறது. மக்கள் இயக்கங்களால் இப்பாதையை மாற்ற தொழிலாளி வர்க்கமும் கம்யூனிஸ்டுக் கட்சியும் போராடுகின்றன. பழைய பாதையில் தங்குதடை யின்றிச் செல்ல வேண்டும் என்பதற்காக பிற் போக்கு சக்திகள் போராடுகின்றன.

கடந்த பதினைந்துஆண்டு அனுபவத்தில் விடுதலை பெற்ற நாடுகள், முதலாளித்துவமற்ற பாதையில் சென்றால்,சோஷலிசத்துக்குரிய பொருளாதார அடிப் படைகளை அமைத்துக் கொள்ள முடியும் என்பதை

உலக கம்யூனிஸ்டு இயக்கம் அறிந்துள்ளது. புதிதாக விடுதலையடைந்த வளர்ச்சியடையாத நாடுகள், ஏகாதிபத்தியச் சார்பு நிலையிலிருந்து விலகி, சோஷலிஸ்டு அணியோடு நேச உறவு கொண்டால், சுயேச்சையான வளர்ச்சியை அடைய முடியும் என்பதை பல நாடுகளின் அனுபவம் மெய்ப்பித்துள்ளது. இப்பாதையைப் பின்பற்றி சோஷலிஸக் குறிக்கோளை அடையும் வாய்ப்பு, விடுதலை பெற்ற நாடுகளுக்கு இருக்கிறது.

முதலாளித்துவமற்ற பாதையில் ஒரு நாட்டை வழிப்படுத்துவது மார்க்சிச-லெனினிச கட்சிகளாக மட்டுமல்லாமல், சில நாடுகளில் புரட்சிகரமான முதலாளித்துவ ஜனநாயக கட்சிகளாகவும் இருக்கலாம். இந்நாடுகளில் மார்க்சிஸ்டுக் கட்சிகள் இல்லாமல் இருக்கலாம், அல்லது போதுமான செல்வாக்கை பெறுமலிருக்கலாம். ஏகாதிபத்திய எதிர்ப்பு-ஜனநாயகப் போராட்டம் தீவிரமடையும்போது அதற்கு தலைமை தாங்குகிற ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிவாதிகள் மார்க்சிய - லெனினிய தத்துவத்தைக் கற்றுக்கொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுக்காக போராடுகிற மார்க்சிய வாதிகள் ஆகின்றனர். இது போன்றுதான் கியூபாவில் ஜனநாயகப் புரட்சி வாதிகள் போராட்டம் தீவிரமடையும் பொழுது விஞ்ஞான சோஷலிசப் பாதைக்கு தாமாகவே வந்து விட்டனர். இவ்வாறு பல்வேறு பாதைகளில் ஏகாதிபத்திய இணைப்பிலிருந்து நாடுகள் மீண்டு வருகின்றன. எனவே உலக சோஷலிசப் புரட்சி இயக்கம் பல புரட்சி இயக்கங்களின் கூட்டு இயக்கமாக இருக்கிறது. முக்கியமாக, பாட்டாளி வர்க்க ஏகபோக எதிர்ப்புப் போராட்டம், தேசீய விடுதலைப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் ஆகிய மூவகை புரட்சிப் பாதைகள் சோஷலிச இயக்கத்தை நோக்கிச் செல்லுகின்றன.

தற்காலத்தில் உலக சோஷலிச அமைப்பின் சக்திகள் பெரிதும் வளர்ச்சிபெற்று வருகின்றன. ஆனால் முதலாளித்துவ அமைப்பின் சக்திகள் சக்தி குன்றி வருகின்றன. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டமும், அடிமை நாட்டு மக்களின் தேச விடுதலைப் போராட்டமும் உச்ச நிலையை எட்டி வருகின்றன. இந்நிலைமைகளில் சில நாடுகளில் பாட்டாளி வர்க்கம் உள்நாட்டுப் போர் நடைபெறாமலே அமைதியான வழிகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது சாத்தியமாகலாம். ஒவ்வொரு தனிபட்ட நாட்டின் விஷயத்திலும் அந் நாட்டின் பாட்டாளி வர்க்கம் அமைதியான முறையில் அதிகாரத்திற்கு வருமா அல்லது ஆயுதம் தாங்கிய உள்நாட்டுப் போரின்மூலம் ஆட்சிக்கு வருமா என்பது அந்தந்த நாட்டின் சமுதாய நிலைமைகளையும் வர்க்கச் சேர்க்கை நிலைமைகளையும் இவையாவும் சேர்ந்த புரட்சிக்கான பக்குவ நிலைமையினையும் பொறுத்திருக்கிறது.

இனி, இவ்வாறு வெற்றி பெறும் புரட்சிகர ஜனநாயகச் சக்திகளும் பாட்டாளி வர்க்கமும் தாங்கள் வெற்றி பெறும் முன்பு இருந்த அரசாங்க இயந்திரத்தை தங்களுடைய புரட்சிக் குறிக்கோள்களை நிறைவேற்ற பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று காண்போம். இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய மூவரும் வகுத்துள்ள அரசு பற்றிய தத்துவார்த்தக் கொள்கையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

# 9. அரசு பற்றிய மார்க்ஸீயக் கொள்கை

அரசு என்ற பிரச்சினையை மார்க்ஸீயக் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வதற்கு எங்கெல்ஸ் எழுதிய 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலைப் படிக்கவேண்டும். அரசின் தோற்றத்தை, சமுதாய வளர்ச்சியின் வரலாற்றுப் போக்கில் எங்கெல்ஸ் விளக்குகிறார். அதன் பின்னர் வர்க்க சமுதாயங்கள் தோன்றி வளர்ந்த காலத்தில் அதன் அமைப்பையும், பாத்திரத்தையும் லெனின் தமது, '**அரசு**', '**அரசும் புரட்சியும்**' என்ற நூல்களில் விளக்குகிறார். இந்நூல்களின் கருத்தமைப்பை விளக்குவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

அரசு மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்து இருக்கிறது என்று சிலர் நம்புகிறார்கள். நமது புராணங்கள்கூட இக் கருத்தை ஒப்புக் கொள்ளுவதில்லை. இந்திய தர்ம சாஸ்திரங்களின் அரசும், அரசனது ஆட்சியும் எவ்வாறு ஏற்பட்டன என்பதை விளக்க சில கதைகளை கற்பித்திருக்கின்றன. ''மக்கள் வாழ்க்கையில் பெருங் குழப்பங்களும், கலகங்களும் தோன்றி மனித இனம் அழிந்துவிடும் நிலையில் இருந்தபோது, சில பெரியவர்கள் அறிவாற்றலும், உடல் வலிமையும், ஆயுதப் பயிற்சியும் உள்ள ஒரு இளைஞனை அணுகி, ''நீ ஒரு இளைஞர் கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு எங்களிடையே ஒழுங்கை ஏற்படுத்து. அந்நியர்களின் தாக்குதலில் இருந்து காப்பாற்று. எங்களுக்கு சமுதாயப் பணிகளைப் பகிர்ந்து கொடு. நாங்கள் உழைத்து, தானியங்களையும், கனிகளை விளைவித்து உனக்கு ஒரு பங்கு தருகிறோம். அழகான பெண்களை உனக்குக் கொடுக்கிறோம். உன் ஆணைப்படி நாங்கள் நடக்கிறோம்.

நீ எங்களைப் பாதுகாத்துக் கொள்'' என்று கூறினார்கள். அவனும் சம்மதித்தான். இது போலவே பல மக்கள் குழுக்களிலும் அரசன் ஆட்சி தோன்றியது.''

பல நீதி நூல்கள், (வசிஷ்ட நீதி, மனுநீதி, காமண்டக நீதி, யாக்ஞ்ய வல்கீயம்) முதலிய நூல்கள் ஏறக்குறைய இத்தகைய முறையிலேயே அரசின் தோற்றம் பற்றிக் கூறுகின்றன.

அரசு ஒரு மனித சமுதாயத்தின் குழப்பமான காலத்தில் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்ற உண்மையையே இக் கதைகளில் இருந்து நாம் அறிகிறோம். புராணம் வரலாறல்ல. சில உண்மைகளின் அடிப்படையில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்த மக்கள் பண்டைய நிகழ்ச்சிகளைப் பற்றிக் கொண்டிருந்த கற்பனைகளே புராணங்கள்.

விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் அரசு தோன்றிய விதத்தை எங்கெல்ஸ் விளக்கினார். அவருடைய விளக்கத்தைச் சுருக்கமாக இங்கே தருவோம்.

''அரசு இல்லாதிருந்த காலம் ஒன்று மனித இனத்தின் வரலாற்றில் இருந்தது, எங்கெங்கே எவ்வெப்பொழுது சமுதாயத்தில் வர்க்கப் பிரிவினை தோன்றுகிறதோ, அங்கங்கே, அவ்வப்பொழுது அரசும் தோன்றுகிறது''—(எங்கெல்ஸ்).

வர்க்கப் பிரிவினை மனித வரலாற்றில் முதன் முதலில் தோன்றுவதற்கு முன்னர் தந்தை வழிக் குடும்பம் இருந்தது. இதனை குலவழிக் குடும்பம் என்றும் கூறுவதுண்டு. இத்தகைய குலவழிக் குடும்பங்கள், இன்றும் பல இனக்குழு மக்களுடைய சமுதாயங்களில் காணப்படுகிறது. பண்டைக் காலத்து குலவழிக் குடும்ப சமுதாயத்தில், உழைப்பவன்,

உழைக்காதவன், உடைமையாளன், உடைமை யற்றவன், ஆண்டான், அடிமையென்ற வர்க்க வேறுபாடுகள் இருந்ததில்லை. அக்காலத்தில் அரசு என்ற அமைப்பும் இருந்ததில்லை. முறையாக வன்முறையை பெரும் பகுதி மக்களின்மீது செலுத்தும் விசேஷக் கருவியான அரசு இருந்ததில்லை.

மக்கள் சிறு சிறு குலங்களாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை காட்டுமிராண்டி வாழ்க்கை நிலையை ஒத்திருந்தது. அக் காலத்தில் அரசு என்ற அமைப்பு தோன்றவில்லை. அக்குலக் குழு சமுதாயங்களில் வழக்கம், மரபு இவற்றைப் பின்பற்றி மக்கள் ஒழுக்கங்களை அமைத்துக்கொண்டார்கள். பண்டைய ஒழுக்கங்களையும் வழக்கங்களையும் அறிந்திருந்த குலத் தலைவர்கள் செல்வாக்கும், மதிப்பும், அதிகாரமும் பெற்றிருந்தார்கள். இந்த அதிகாரம் சில சமுதாயங்களில் பெண்களுக்கும், வேறு சில சமுதாயங்களில் ஆண்களுக்கும் இருந்தது. மக்களின் ஒரு பிரிவினரை மற்றொரு பிரினர் அடக்கியாள்வதற்காக ஒரு வன்முறை யந்திரம் தோன்றவில்லை. ஒரு பிரிவினரின் நோக்கங்களை பலவந்தமாக நிறைவேற்றிக் கொள்வதற்குரிய சாதனங்களான ஆயுதம் தாங்கிய படைப் பிரிவுகள், சிறைச்சாலைகள் முதலியவை அக் காலத்தில் இருந்ததில்லை. அரசு என்ற யந்திரத்தின் இன்றைய உருவம் இவைதாம் என்பதை நாம் அறிவோம்.

மக்களில் ஒரு சிறு பிரிவினர் பெரும் பிரிவினரை அடக்கி ஆண்டு தமது லாபத்திற்காக உழைப்பதற்கு கட்டாயப்படுத்தும் நிலை ஒரு சமுதாயத்தில் தோன்றும்பொழுதுதான் சிறைச்சாலைகள், படைகள் முதலிய பலவந்த ஆயுதங்கள் கொண்ட அரசு தோன்றுகிறது. ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரின் உழைப்பை நிரந்தரமாக அபகரித்துக்

கொள்ள முடிகிற நிலைமை ஒரு சமுதாயத்தில் தோன்றும்பொழுது அரசு என்பது மக்களை நிர்ப்பந்திக்கும் விசேஷ யந்திரமாகத் தோன்றியது. இந்த நிலைமை முதன் முதலில் அடிமைச் சமுதாயம் தோன்றுகிற பொழுது உண்டாகிறது. உலகத்தின் எல்லாப் பகுதிகளில் உள்ள மக்களும் இந்தக் கட்டத்தை தமது வரலாற்றில் கடந்து வந்திருக்கின்றனர்.

ஆண்டைகளும், அடிமைகளும் சமுதாய வரலாற்றில் முதன் முதலில் தோன்றிய வர்க்கங்கள் ஆவர். ஆண்டைகள் என்னும் பிரிவினர் நிலத்தையும், கருவிகளையும், அடிமைகளான மக்களையும்கூட தம் உடைமையாக்கிக் கொண்டார்கள். ஆண்டைகளின் லாபத்திற்காக உழைத்து உழைப்பை வழங்கியவர்களே அடிமைகள் எனப்பட்டனர். பெரும்பாலான நாடுகளில் அடிமை முறை தன் வளர்ச்சிப் போக்கில் பண்ணை அடிமை முறையாக வளர்ந்தது. இங்கே நிலப்பிரபுக்களும் பண்ணை அடிமைகளும் பிரதான வர்க்கங்களாக அமைந்தனர். மக்களுக்கிடையே நிலவிய உறவில் நிலைமை மாறியது. அடிமைச் சமுதாயத்தில் அடிமைகள் சட்ட பூர்வமாக ஆண்டைகளின் உடைமையாக வேக் கருதப்பட்டனர். நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் பண்ணைக் குடியானவர்கள் நிலப்பிரபுவின் உடைமையாகக் கருதப்படவில்லை. ஆயினும் அவர்கள் நில உடைமையாளர்களது ஒழுக்க முறைகளுக்கும், சட்டங்களுக்கும் உட்பட்டே இருந்தனர். நில உடைமை சமுதாயத்தில் வாணிபம் வளர்ச்சியுற்று, உலகச் சந்தை தோன்றியது. வாணிப வளர்ச்சியினுல் ஒரு புது வர்க்கம் தோன்றியது. இதுதான் முதலாளித்துவ வர்க்கம். பண்ட உற்பத்தி முறையிலிருந்து, பண்ட மாற்றத்திலிருந்து பணத்தின் அதிகாரம் தோன்றியது. இதிலிருந்து மூலதனத்தின்

ஆதிக்கம் வளர்ந்தது. இந்த வர்க்கம் தனது வளர்ச்சிக்கு தடையாக இருந்த நிலப்பிரபுத்துவ முறையை எதிர்த்து புரட்சிகளை நடத்தியது. மேற்குஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் நிலப்பிரபுத்துவ முறை அழிக்கப்பட்டது. முதலாளித்துவ வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. வர்க்கப் பிரிவினை முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் என்ற உருவத்திற்கு மாறியது. எல்லாமுதலாளித்துவ நாடுகளிலும் மூலதன உடைமையாளர்கள் மக்களில் மிகச் சிறுபான்மையினராகவே இருக்கிறார்கள். நில உடைமையாளர்களும் அவ்வாறே. மக்களுடைய உழைப்பு முழுவதும் இவர்கள் வசத்தில் இருக்கிறது. உழைப்பாளி மக்களனைவரையும் இவர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் உழைக்கும் மக்களைச் சுரண்டுகிறார்கள். அவர்களை ஒடுக்கி வைக்க முயலுகிறார்கள்.

இந்த சமுதாய வளர்ச்சிப் போக்கின் பின்னணியில் அரசின் தோற்றத்தைக் காண வேண்டும். முதல் வர்க்க சமுதாயத்தின் தோற்றத்தோடு அதுவும் தோன்றி விடுகிறது. அது தோன்றிய காலத்திலிருந்தே சமுதாயத்திலிருந்து தனித்துப் பிரிந்து ஒரு வன்முறைக் கருவியாக இருந்து வந்திருக்கிறது. இவ்வரசின் அங்கமாக இருக்கும் ஊழியர்கள் அடக்கி ஆளுகிற பணியைத்தான் செய்கிறார்கள். ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள் என்ற பிரிவினை வர்க்கப் பிரிவினைக்கு ஏற்றபடி தோன்றுகிறது. ஆளுபவர்கள், சமுதாயத்திற்கு மேற்பட்டவராகி அரசின் உறுப்புகளாக அமைகின்றனர். இந்த ஆளும் பிரிவினர் பலம் கொண்ட ஒரு கருவியை மக்களை ஒடுக்குவதற்காகப் படைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கேற்றபடி இக்கருவி குண்டபிந்த அல்லது வேல் ஏந்திய படையாகவோ, வாள் அல்லது வில்

ஏந்திய படையாகவோ, எந்திரத் துப்பாக்கியும் அல்லது விமானங்களும் கொண்ட படையாகவோ இருக்கும். இப்பொழுது சமுதாயத்தின் அரசின் பாத்திரம் பற்றி தெளிவாகத் தெரிந்து கொண்டோம்.

அரசு என்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தின் மீது தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக உள்ள ஒரு வன்முறைக்கருவி

சமுதாயத்தில் வர்க்கங்களே இல்லாதபோது இந்த அமைப்பிற்கு தேவையே இல்லை. அடிமை முறை தோன்றியபோது சமுதாயத்தில் தேவைக்கு எஞ்சிய உபரிப் பொருள் தோன்றவில்லை. அதன் வளர்ச்சிக் காலத்தில் தேவைக்குமேல் ஓரளவு உபரிப் பொருளை அடிமை வர்க்கம் உற்பத்தி செய்தது. அது ஆண்டைகளின் கையில் சேர்ந்தது. ஆண்டை வர்க்கத்தின் நிலை ஸ்திரமானபோதுதான் அதை மேலும் உறுதியாக்கிக் கொள்வதற்காக அரசு தோன்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அடிமை உடைமையாளர்களின் அரசு, அடிமைகள் தொடர்ந்து அடிமைகளாக இருக்குமாறு கட்டாயப் படுத்தியது. இந்த யந்திரமில்லாமல் மக்களின் ஒரு பகுதியை, பிறருக்காக உழைக்கும்படி செய்வது முடியாத காரியம். எனவே இந்தக் கருவி அவர்களுக்கு இன்றியமையாததாய் இருந்தது.

அரசின் வடிவங்கள் பல்வேறு வகைப்பட்டவையாக வரலாற்றில் இருந்திருக்கின்றன. அடிமை உடைமையாளர் அரசுகள்கூட கிரேக்க, ரோம நாடுகளில் வெவ்வேறு வடிவமுடையனவாக இருந்திருக்கின்றன. முடியரசு, குடியரசு, உயர்குடியாட்சி என பல்வேறு வடிவங்களில் ஆண்டை வர்க்க ஆட்சி இருந்திருக்கிறது. முடியரசோ அல்லது குடியரசோ, அடிமைச் சமுதாயத்தால் ஏற்பட்ட ஆட்சிகள் ஆண்டைகளின் அதிகாரத்தை அடிமை

கள் மீதும், மக்களின் மீதும் பிரயோகிக்கும் வன்முறைக் கருவி என்ற அளவில் வேறுபடவில்லை. அடிமைச் சமுதாய குடியரசில் ஆண்டைகளுக்கு மட்டும்தான் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையிருந்தது. இவ்வகை அரசுகளில், அடிமை மக்களுக்குப் பங்கில்லை. அவர்களை ஒடுக்கி வைப்பதே இவ்வரசின் நோக்கம்.

அடிமை முறை மாறி நிலப்பிரபுத்துவ முறை தோன்றிய பொழுது, அடிமைமுறை அரசும், நிலப்பிரபுத்துவ அரசாக மாறியது. அடிமைச் சமுதாயத்தில் அடிமைக்கும் உழவுக் கருவிக்கும் வேறுபாடு இல்லை. அடிமையை அரிஸ்டாட்டில், "பேசும் கருவி" என்று அழைத்தார். மண்வெட்டிக்கு என்ன உரிமையிருந்ததோ, அதுதான் அடிமைக்கும் இருந்தது. ஆனால் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் பண்ணையடிமை அல்லது குடியானவன் நிலத்தோடு பிணைக்கப்பட்டான். தனக்கு நிலவுடமையாளரால் தரப்பட்ட ஒருநிலப்பகுதியில் அவன் சிலசில நாட்கள் உழைத்து தனக்கென பயிர் செய்து கொள்ளலாம். மற்ற நாட்களில் அவன் நிலப்பிரபுவின் நிலத்தில், நிலப்பிரபுவின் லாபத்திற்காக உழைத்தான். நிலப்பிரபுத்துவ சமுதாயம் வர்க்க சமுதாயமே. ஆனால் வர்க்கங்களின் தன்மை வேறாயிருந்தது. நிலப்பிரபுத்துவம் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் நெருக்கடிக்கு உள்ளாகி வலுக்குன்றியபோது முதலாளித்துவ உற்பத்தி முறை நிலப்பிரபுத்துவ அமைப்பினுள் வளரத் தொடங்கியது. நிலப்பிரபுத்துவ அரசு முடியரசு, குடியரசு என்ற இரண்டு வடிவங்களில் இருந்தது. இரண்டிலும் நிலப் பிரபுக்களே ஆளுவோர். பண்ணையடிமைகள் எவ்வித அரசியல் உரிமையுமின்றி ஒடுக்கப்பட்டிருந்தனர். இது நிலப்பிரபுக்களின் ஆட்சியை நிலை நிறுத்த அவர்கள் படைத்துக் கொண்ட கருவி. சில வேளைகளில்

அடிமை உடைமை அரசையே நிலப்பிரபுக்கள் கைப் பற்றி தங்கள் வர்க்க நலன்களைப் பாதுகாக்கும் அரசாக மாற்றியமைத்துக் கொண்டனர். முதலாளித்துவ உற்பத்தி முறையில் வளர்ச்சியில் நிலப் பிரபுத்துவ வர்க்கத்தின் பொருளாதார வலிமை குறைந்தது. புதிய வர்க்கம் எல்லாக் குடிமக்களும் சமம் என்று பிரகடனம் செய்தது. சட்டத்தின்படி மக்களனைவரும் சரிநிகராக மதிக்கப்பட்டனர். உடைமை வேறுபாடு இருக்கும்வரை அரசும் சட்டமும் உடைமையாளர்களின் சொத்துக்களைத்தான் பாதுகாக்கிறது. நிலப்பிரபுத்துவ அரசினிடத்தில் முதலாளித்துவ அரசு நிலை பெற்றதும் எல்லா மக்களுக்கும் விடுதலை என்பது தன்னுடைய கோஷம் என்று கூறுகிறது. ஒரு வர்க்கச் சார்பான அரசு என்பதை மறுக்கிறது. அண்மையில் நில உடைமை முறை ஒழிக்கப்பட்டதால், முதலாளித்துவ வர்க்கத்திற்குத்தான் விடுதலைக் கிடைத்தது. நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டதால் குடியானவர்கள் நிலத்தை விலை கொடுத்து மீட்டோ, பகுதி பகுதியாக தவணை முறைகளிலோ பணத்தைக் கட்டி நிலத்தை மீட்டுக் கொள்ள வாய்ப்புக் கொடுத்தது. முதலாளித்துவ அரசு, சொத்து எவ்வழியாக வந்தாலும் அதனை பாதுகாத்தது. நாகரீக நாடுகள் அனைத்திலும், விவசாயிகள் தனி உடைமையாளராகி விட்டனர். தனி உடைமையை முழுமையாக பாதுகாப்பதாக முதலாளித்துவ அரசு பறைசாற்றியது. வணிகன், தொழில் முதலாளி, ஆலை உடைமையாளன், நில உடைமையாளன், கடைக்காரன் ஆகிய எல்லோருடைய தனிச் சொத்துரிமையை அது ஆதரித்தது. தனிச் சொத்துரிமையை அது ஆதரித்தது. சொத்துடைமை உரியவர்கள் ஜனத்தொகையில் மிகச் சிறிய பகுதியினரே. உழைப்பை விற்றுப் பிழைக்கும் உழைப்பாளி மக்களே மிகப் பெரும்பான்மையினர்.

எனவே உழைக்கும் வர்க்கங்களை அடக்கி உபரி உழைப்பைப் பெறுவதில் இவ்வரசு அக்கறை கொண்டிருந்தது. முதலாளி வர்க்கம் உழைக்கும் வர்க்கங்களை ஒடுக்குவதற்கான ஒரு வன்முறை யந்திர மாக அது இருந்தது. ஆனால் வெளித் தோற்றத்தில் 'சுதந்திரமானதாக' தன்னைக் காட்டிக் கொண்டது. அனைத்து மக்கள் வாக்குரிமையை தான் அளித்த மாபெரும் நன்கொடையாக, தனது ஆதரவாளர் மூலம் பிரகடனப்படுத்தி தன்னை ஒரு மக்கள் அரசு என்று அறிவித்துக் கொண்டது. ஆயினும் தற்காலத் தில் மக்கள் போராட்டங்களின் எழுச்சியால், முத லாளித்துவ அரசுகள் எந்த வர்க்கத்திற்காக பணி புரிகின்றன என்பது, அதன் அடக்குமுறைச் சட்டங் களாலும், வன்முறைக் கொடுமைகளாலும் தெளி வாக வெளியாகிவிட்டது.

பாட்டாளி வர்க்கப் புரட்சியினால் பாட்டாளி கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும்போது அப்பொழுது இருக்கும் அரசாங்க யந்திரத்தை என்ன செய்ய வேண்டும்? இவ்வினாவிற்குரிய விடையை லெனின் தமது "அரசும் புரட்சியும்" என்ற நூலில் தெளிவாகவே விளக்கியுள்ளார். இந்நூற்றாண்டில், 1917 அக்டோபருக்குப் பிறகு பல நாடுகளில் தொழிலாளி வர்க்கம் புரட்சிகளில் வெற்றி பெற்றுள்ளது. வெற்றி பெற்ற பின்னர் முதலாளித்துவ அரசை அந் நாடுகளின் பாட்டாளி வர்க்கம் எவ்வாறு பயன்படுத்தியது? லெனினுடைய போதனைகளையும், அப்போதனைகளின் அடிப்படை யைப் பின்பற்றி வரலாற்று நிலைமைகளுக்கேற்ப கம்யூனிஸ்டுக் கட்சிகள் செயல்பட்ட முறையினையும் நாம் அறிந்து கொண்டால்தான் மேற்கண்ட வினா விற்கு விடை காணமுடியும். எனவே வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் பூர்ஷுவா அரசு பற்றி என்ன கொள்கையைக் கைக்கொள்ள வேண்டும்? லெனி

னுடைய போதனையையும் கம்யூனிஸ்ட் கட்சி களினுடைய அனுபவத்தையும் இங்கு சுருக்கமாக விளக்குவோம்.

## 10. பாட்டாளி வர்க்கப் புரட்சியும்-அரசும்

பூர்ஷுவா அரசின் பல வடிவங்கள், ராணுவ சர்வாதிகாரம், பாஸிஸம், கொடுங்கோலாட்சி பார்லிமெண்டரி குடியரசு என்பன போன்றவை. எந்த வடிவமாயினும் பூர்ஷுவா, அரசு, அதன் வர்க் கத்தின் சர்வாதிகாரமே. வடிவம் எதுவாயினும், முதலாளித்துவ வர்க்கம் பிற வர்க்கங்களை ஒடுக்கு வதற்கான கருவியே அது.

பார்லிமெண்டரி முறை ஜனநாயகம் கூட மக்களது போராட்டங்களால், சில நாடுகளில் முதலாளி வர்க்கம் பெற்ற சலுகைகளாகும். பார்லி மெண்டரி முறையில் முதலாளி வர்க்கம், தன் னுடைய அரசியல் அதிகாரத்தை மக்கள் மீது பிர யோகிப்பதற்கு, மக்களே தேர்ந்தெடுக்கும் பார்லி மெண்டு என்ற சபையைப் பயன்படுத்துகிறது. சில ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தலில் வாக்களிப்பதன் மூலம், இச் சபையின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப் பதோடு, மக்களுடைய உரிமை தீர்ந்து போகிறது. முதலாளித்துவ நாடுகளில் இச்சபையின் பெயராலும் ஜனநாயகத்தின் பெயராலும், முதலாளி வர்க்கத் தின் உடைமைகள் பாதுகாக்கப்படுகின்றன. அரசின் அலுவல்களில் பொது மக்கள் பங்குகொள்ள இய லாது. சுதந்திரங்கள் எல்லா சொத்துடைமையாளர் களுக்கே. பத்திரிகைகள், முதலாளிகளின் உடைமை யாயிருப்பதால் அவை முதலாளித்துவச் சார்பு நிலை

யிலேயே எழுதும். நமது தமிழ் நாட்டுப் பத்திரிகை களைப் பற்றி வாசகர்களுக்குத் தெரியும்.

முதலாளித்துவத்தின் பொருளாதார அடிப் படைகள் நிலையில்லாமல் போகும் பொழுது, தொழி லாளி வர்க்கமும் உழைக்கும் வர்க்கங்களும் முத லாளிவர்க்கத்தை எதிர்த்துப் போராடுகிற போராட் டங்கள் வலுவடையும் பொழுது, முதலாளி வர்க்கம் பார்லிமெண்டின் உரிமைகளையும், மக்களின் உரிமைகளையும் ஒடுக்க முயலுகிறது. உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் தனது வர்க்க ஏதேச்சாதிகாரத்தை செயல்படுத்த முற்படுகிறது. இந்தப் போக்கு ஏகாதிபத்தியமாக முதலாளித் துவம் வளர்ச்சி பெற்ற பிறகு அதிகமாகிறது. ஏக போகங்கள் தமது நலன்களுக்கு பார்லிமெண்டின் உரிமைகளை உட்படுத்துகிறது. அரசியல் விழிப் படைந்த உழைக்கும் வர்க்கங்கள், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், முதலாளித்துவ ஏதேச்சாதிகாரத்தைத்தடுக்கவும் போராடுகின்றன. இதன் விளைவாக வர்க்கப் போராட்டங்களின் பலத் தைப் பொறுத்து, பார்லிமெண்ட் மூலம் மக்களுக்கு இருக்கும் உரிமைகள் விரிவடைகின்றன; அல்லது சுருங்குகின்றன. ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய நாடுகளில் 1918 முதல் 1946 வரையுள்ள காலத்தில் மாதர்கள் வாக்குரிமை பெற்றனர்கள். வாக்காளருக்கு சொத்து இருக்க வேண்டுமென்ற தகுதி நீக்கப்பட்டது, சமூக இன் ஷூரேன்ஸ் முறை சட்டமாக்கப்பட்டது. போராட் டங்களின்மூலம் முதலாளிகளின் விருப்பத்திற்கெதி ராக, மக்கள் பார்லிமெண்டைச் செயல்பட வைக்க முடியும் என்பது தெளிவாகிறது. ஆயினும் உண்மை யான அரசியல் அதிகாரம் பார்லிமெண்டின் கையில் இல்லை. அரசுதான் பார்லிமெண்டைவிட அதிகாரம் உடையதாக இருக்கிறது.

பல முதலாளித்துவ நாடுகளில் ஏகபோகங்களின் பிரதிநிதிகளும், பாங்கு முதலாளிகளின் பிரதிநிதிகளுமே அரசின் அமைப்பில் அங்கம் வகிக்கிறார்கள். அரசின் கொள்கைகளை அவர்களே உருவாக்குகிறார்கள். ஆனால் இந்த உண்மையை பார்லிமெண்டின் ஜனநாயகத் தோற்றத்தால் அவர்கள் மறைத்துக் கொள்ளுகிறார்கள். அரசை அமைக்கும், முதலாளித்துவ கட்சிகளின் தலைமைப் பதவிகளை, இவர்கள் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள். அதிகாரம் பரவலாக இருந்தால் அதனை மத்திய அரசு உறுப்புகளில் குவித்து அவற்றைக் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள்.

உழைக்கும் வர்க்கங்களின் போராட்டங்களை சீர்குலைக்கவும், நசுக்கவும் இரகசிய பயங்கர ஸ்தாபனங்களை ஊக்குவிக்கின்றனர். முதலாளித்துவ ஜனநாயக முறைகளால், தங்கள் நலன்களை பாதுகாத்துக் கொள்ள முடியாதபடி நெருக்கடி ஏற்பட்டு விட்டால், ஜனநாயக அமைப்புகளை ஒழித்துவிட்டு பாஸிஸத்தைத் தோற்றுவிக்கிறார்கள். ஒரு மனித சர்வாதிகாரத்தை ஏற்படுத்துகிறார்கள். இச்சர்வாதிகாரி, பார்லிமெண்டுக்கோ, மக்களுக்கோ பொறுப்புடையவனல்லன். கட்சியும், அரசும் ஒன்றாக இணைக்கப்படுகிறது.

### பூர்ஷுவா ஜனநாயக முறைகளை போலீஸ் வன்முறை அரசாக மாற்றுகிற முயற்சிகளின் இறுதிக் கட்டமே பாஸிஸமாகும்

இது ஒரு நாட்டு ஏகபோகத்தின் ஏதேச்சாதிகார வன்முறை அரசு, இது பார்லிமெண்டு ஜனநாயக முறைகள் அனைத்தையும் ஒழித்துவிடும். பாஸிஸ அரசும், பார்லிமெண்டு ஜனநாயக அரசும் வடிவத்தில் மாறுபாடுகள் கொண்டிருப்பினும், அவையிரண்டுமே முதலாளித்துவ அரசின் இரண்டு வடிவங்களே.

முதலாளித்துவம், நெருக்கடிகளுக்கேற்ப ஜெர்மனியில் மூன்று விதமான அரசு வடிவங்களைத் தோற்றுவித்தது.

1. வீமார் குடியரசு.
2. ஹிட்லரின் மூன்றுவது ரீஷ்.
3. பெடரல் ஜெர்மன் குடியரசு.

வடிவங்கள் எவ்வாறிருந்த போதிலும், பாங்கு ஏகபோகங்களின் கையிலேயே இம்மூன்று அரசுகளிலும் அதிகாரம் இருந்தது.

**பாஸிஸம் என்பது ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் பயங்கரமான ஏதேச்சாதிகாரம். பார்லிமெண்ட் ஜனநாயகம் என்பது அவர்களுடைய மறைமுகமான சர்வாதிகாரம்.** பாஸிஸம் என்பது வர்க்க நீதியில் ஏகபோக பாங்கு மூலதன முதலாளிகள் வேறு நடுத்தர முதலாளிகளோடு அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள விரும்பாமல் தங்களுடைய யதேச்சாதிகாரத்தை ஸ்தாபித்துக் கொள்ளுவதேயாகும்.

முதலாளித்துவப் பொது நெருக்கடிக் காலத்தில் நிதி மூலதனமும், அரசும் இணைந்து கொண்டு சமுதாய வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கையையும் பாசிச மயம் ஆக்க முயலுகின்றன. இம் முயற்சி எப்பொழுதும் வெற்றிபெறும் என்று சொல்ல முடியாது. இம்முயற்சியைத் தடுத்து பார்லிமெண்டரி ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஸ்தாபன வலிமையும், உழைக்கும் வர்க்கங்களின்மீது செல்வாக்குமுள்ள தொழிலாளி வர்க்கத்தினுல் முடியும்.

ஒருநாட்டின் அரசு பாஸிஸ அரசாக மாறுகிற அறிகுறிகள் தென்பட்டால் அந்நாட்டின் பாட்டாளி வர்க்கம் அலட்சியமாக இருக்கக்கூடாது. ஜனநாயக உரிமைகளுக்கு நிதி முதலாளி வர்க்கத்தின்

செயல்பாடுகளால் ஆபத்து வரும்போது தொழிலாளி வர்க்கம் பிற வர்க்கங்களோடு ஒன்றுபட்டு நின்று தலைமைத்தாங்கி அப்போக்குகளைத் தடுத்து ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்தல் வேண்டும். இதுவே தனது வர்க்க நலன்களையும் தொழிற் சங்க உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கான வழியாகும்.

பூர்ஷுவா ஜனநாயகம் முதலாளிகளால் பிற வர்க்கங்களுக்கு அளிக்கப்பட்ட தாராளமான நன்கொடை அல்ல. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான உரிமைப் போராட்டங்களின் வெற்றியாகவே முதலாளித்துவ ஜனநாயகத்தைக் காணவேண்டும். ஜனநாயகத்தின்மூலம் தொழிலாளி வர்க்கம் தனது பொருளாதார அரசியல் போராட்டங்களை நடத்துவதற்கு வாய்ப்புக்களைப் பெறுகிறது. இதனால் ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்கம் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுகிறது.

"ஜனநாயகத்திற்காகப் போராடாமல் பொது மக்களை சோஷலிஸ்ட் புரட்சிக்கு ஆதரவாகக் கொணர முடியாது" என்று லெனின் கூறியுள்ளார். எனவே ஏகபோக முதலாளித்துவத்தின் சுரண்டலையும் அடக்குமுறையையும் எதிர்த்துப் போராடுகிற பாட்டாளி வர்க்கமும் அதன் மார்க்ஸீய லெனினியக் கட்சிகளும் முதலாளித்துவ ஜனநாயக சுதந்திரங்களைப் பயன்படுத்திப் போராடுகிறது. இத்தகைய சுதந்திரங்களை விஸ்தரித்துக் கொள்ளவும் போராடுகிறது. இத்தாலியிலும், பிரான்ஸிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் பார்லிமெண்டில் அதிக எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களைக் கொண்டு மக்களுக்கு எதிரான சட்டங்களை எதிர்த்து முறியடித்துள்ளன. அது மட்டுமல்லாமல் மக்களுக்கு நன்மையான பல சட்டங்களை பார்லிமெண்டிற்கு வெளியேயுள்ள மக்கள் இயக்கத்தின் சக்தியாலும்,

பார்லிமெண்டிற்குள் உள்ள சக்தியாலும் நிறை வேற்ற முடிந்திருக்கிறது. பாஸிஸப் போக்குகள் தலை தூக்கும்பொழுது பார்லிமெண்டரி ஜனநாயகத் துக்காகப் போராடுவது தொழிலாளி வர்க்கத்தின் கடமையாகும்.

பரந்த அளவில் மக்கள் பங்கு கொள்ளும் ஜனநாயகப் போராட்டங்களின் வெற்றியால் பலவிதமான இடைக்கால ஜனநாயக அரசுகள் தோன்றக்கூடும். முதல் ருஷ்யப் புரட்சிக் காலத்தில் (1905—1907) லெனின் தொழிலாளி விவசாயி வர்க்கங்களின் புரட்சிகர ஜனநாயக சர்வா திகார அரசை நிறுவி அதனையே வளர்ச்சி பெறச் செய்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக மாற்ற வேண்டும்'' என்று கூறினார்.

தற்காலத்தில் இத்தகைய வர்க்கக் கூட்டாளி அரசுகள் சில நாடுகளின் சமுதாய நிலைமைகளில் தோன்றக்கூடும். பாசிசத்தை எதிர்த்து, பாஸிஸ எதிர்ப்பு சக்திகளின் முற்போக்கான கூட்டணி அரசுகள் ஐரோப்பாவில் எழுந்ததை வரலாறு கண்டிருக்கிறது. இத்தகைய கூட்டணி அரசுகள் ஏகாதிபத்திய ஊடுருவலும், உள்நாட்டு நிலப்பிரபுத் துவ ஆதிக்கமும் இன்னும் எஞ்சியிருக்கக்கூடிய நாடு களில் தோன்றுவது சாத்தியமே. இத்தகைய அரசு களால் தொழிலாளி வர்க்கம் பல வர்க்கங்களோடு அரசியல் அதிகாரத்தில் பங்குகொள்ளும்.

## 11. சோஷலிஸப் புரட்சியும், அரசும்

பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியில் வெற்றி பெற்ற வர்க்கங்கள், முதலாளித்துவ அரசை எப்

படிப் பயன்படுத்தும் என்று முற்பகுதியில் கண்டோம். முதலாளித்துவ அரசின் உள்ளடக்கம், உழைக்கும்வர்க்கங்களின் சர்வாதிகாரமாக மாற்றப் படும் அரசு ஒரு வர்க்கத்தின் வன்முறைக் கருவியாக இராது.

சோஷலிச புரட்சி வெற்றி பெறும்பொழுது, தொழிலாளி வர்க்கம் அரசின்பால், மேற்கொள்ள வேண்டிய கொள்கை என்ன?

அரசும் புரட்சியும் என்ற நூலில் லெனின் எங்கெல்ஸின் அரசுபற்றிய கருத்தமைப்புக்களை விளக்குகிறார். இதனை இங்கு விளக்குவோம். பின்னர் இக் கொள்கை, தற்கால வரலாற்றில் தொழிலாளி வர்க்கப் புரட்சியில் எவ்வாறு செயல்படுத்தப்பட்டது என்பதை சோவியத் புரட்சி, ஐரோப்பிய மக்கள் ஜனநாயகப் புரட்சிகள் முதலிய சோஷலிஸப் புரட்சிகளின் உதாரணங்களில் நடைமுறை அனுபவமாகக் காண்போம். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய விஞ்ஞான சோஷலிசத் தத்துவாசிரியர்களின் சிந்தனைகள் இந் நூற்றுண்டில் எவ்வாறு நடைமுறையால்நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்போம். கடந்த முப்பதாண்டு நடைமுறை அரசுபற்றிய மார்க்ஸியக் கருத்தைச் செழுமைப் படுத்தியுள்ளது.

எங்கெல்ஸ் முதன் முதலில் தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார். அச் செயலால் அரசு எவ்வாறு பாதிக்கப்படும் என்று விளக்குகிறார்.

> **பாட்டாளி வர்க்கம் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றி உற்பத்தி சாதனங்களை அரசுடைமையாக்குகிற கடமையை முதன்முதலில் நிறைவேற்றுகிறது.**

இச்செயலின் மூலம் பாட்டாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்ற தனது நிலையை அழித்துக்

கொள்ளுகிறது. எல்லா வர்க்கங்களையும், வர்க்கப் பிரிவினைகளையும் அது ஒழித்துவிடுகிறது. அரசை, (வர்க்க அடக்குமுறைக் கருவி என்ற நிலையில்) அரசென்ற நிலையில் ஒழித்து விடுகிறது. (It abolishes state as state) வர்க்க விரோதங்களின் சூழ்நிலையில் இயங்கிவந்த சமுதாயத்திற்கு அரசு தேவையாக இருந்தது. ஏனெனில் அரசு, ஒரு சுரண்டும் வர்க்கத்தின் அமைப்பாயிருந்து, உற்பத்தி உறவுகளை நிலைப்படுத்தி வந்தது. ஒரு உற்பத்தி அமைப்பில், சுரண்டப்படும் வர்க்கத்தை, ஒடுக்கி வைத்து உற்பத்தியின் புற நிலைமைகளைப் பாதுகாக்க அரசு கருவியாக இருந்தது. ஆயினும் அதுதான் சமுதாயம் முழுவதற்கும் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக பார்வைக்கு காட்சியளிக்கிறது. ஏனெனில் ஆளும் வர்க்கமே ஒரு சமுதாயத்தின் பிரதிநிதியாக அதிகார பூர்வமாக தோன்றுவதால், அதிகார அமைப்பே, சமுதாய முழுமைக்கும் பிரதிநிதியாகத் தோன்றுகிறது. பண்டைக் காலத்தில் அடிமையுடைமைஅரசு, இடைக்காலத்தில் நிலப்பிரபுக்களது அரசு, நமது காலத்தில் முதலாளிகளது அரசு. அரசு, சமுதாய முழுவதற்கும் உண்மையான பிரதிநிதியாக ஆகும் பொழுது, அதற்கு அவசியம் இல்லாமற் போய் விடுகிறது. ஒரு சமூக வர்க்கத்தையும் ஒடுக்கி வைக்க வேண்டிய அவசியம் இல்லாமற் போகிற பொழுது, வர்க்க ஆட்சியும், உற்பத்தி அராஜகத்தால் ஏற்படும் வாழ்க்கை போராட்டமும், அப் போராட்டத்தால் விளையும் நெருக்கடிகளும் அகற்றப்பட்ட பின்னர், ஒடுக்கி வைப்பதற்குரிய வர்க்கம் ஒன்றும் இல்லை. சமுதாய முழுவதற்கும் பிரதிநிதியாக அது செய்கிற செயல், உற்பத்தி சாதனங்களை சமூகத்தின் பிரதிநிதியாக உடைமையாக்கிக் கொள்ளுவதுதான். இச்செயல்தான் அதனுடைய சுயேச்சையான கடைசிச் செயல். சமுதாய உறவு

களால் அரசு தலையிடுவதற்கு அவசியமில்லாமல் போகிறது. அதனால் அரசு வாடி உதிர்ந்துபோகும். மனிதர்களின்மீது செலுத்தப்பட்ட ஆட்சி, ஒழிக்கப் பட்டு, பொருள்களை நிருவகிக்கும் நிருவாகமாக மாற்றப்பட்டு உற்பத்திச் செயல்முறையை ஒழுங்கு படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. பாட்டாளி வர்க்க அரசு ஒழிக்கப் படுவதில்லை. அது தானாகவே உதிர்ந்து போகிறது. ''சுதந்திரமான மக்களின் அரசு'' என்ற சொற்றொடரின் பொருள் அதற்கு உண்டாகிறது. சிறிது காலத்துக்கு அது மக்கள் அர சாங்கமாகப் பயன்பட்டுவிட்டு முடிவாக விஞ் ஞான ரீதியாகவே செயலற்றதாக ஆகிவிடுகிறது; அது உதிர்ந்து போகிறது. அராஜக வாதிகள் கூறு வதுபோல அது ஒரேநாளில் ஒழிக்கப்படுவதில்லை.''

''அரசு உதிர்ந்து போகும்'' என்ற எங்கெல் ஸின் வாசகம், ''அரசு ஒழிக்கப்படும்'' என்ற அரா ஜக வாதிகளின் கருத்துக்கு நேர் விரோதமாக உள்ளது. இதன் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளாமல், பல சோஷலிஸ்டுக் கட்சிகள், புரட்சி கரமான துள்ளல் மாறுதல்களும், சமுதாயப் புயல் களும் இல்லாமல், படிப்படி மாறுதல்களால் அரசு உதிர்ந்துவிடும் என்று பொருள் கொள்ளுகிறார்கள். இவ்வாறு பொருள் கொள்ளுவது, புரட்சி என்பதன் பொருளை தெளிவற்றதாக்குவதாகவே முடியும். புரட்சியே தேவையில்லை என்ற முடிவுக்குக் கூட, இவ்வாறு பொருள் கொள்ளுவோர் வரக்கூடும்.

ஆனால் இவ்வாறு பொருள் கொள்ளுவது மார்க்சீயத்தை வலதுசாரிப் பக்கமாகப் புரட்டுவ தாகும். இந்தக் கருத்து, முதலாளிகளுக்கு அனுகூல மான கருத்தாகும். கொள்கையளவில், எங்கெல்ஸ் விவரமாகவும், தெளிவாகவும் விளக்கிய கருத்துக்கு நேர் முரணானதாகும். 'அரசு உதிர்தல்' பற்றிய

எங்கெல்ஸின் கருத்து பெரிதும் குழப்பப்பட்டிருப்ப தால் அதைத் தெளிவாக்க வேண்டிய அவசியம் என்று லெனின் கருதினர். எனவே எங்கெல்ஸின் கருத்தை, தத்துவார்த்த ரீதியில் அரசும் புரட்சியும் என்ற நூலில் விளக்கினர். அவருடைய விளக்கத்தை இங்கு முழுமையாகத் தருவோம்.

எடுத்த எடுப்பிலேயே, 'தொழிலாளி வர்க்கம் அரசாங்க அதிகாரத்தை கைப்பற்றியவுடன், அரசை, அரசென்ற நிலையில் ஒழித்துவிடுகிறது' என்று கூறுகிறர். இதன் பொருள் என்னவென்று சிறிது சிந்திக்க வேண்டும், இதனை யாரும் ஆழ்ந்து சிந்திப்பதில்லை அல்லது இது எங்கெல்ஸின், ஹெகலிய பலவீனம் என்று ஒதுக்கி விடப்படுகிறது. உண்மையில் இந்த வாக்கியம், பாட்டாளி வர்க்கத்தின் உன்னதமான புரட்சிகளில் ஒன்றாக, 1871ஆம் ஆண்டில் நடைபெற்ற பாரிஸ் கம்யூனின் அனுபவத்தை சாராம்சமாக்கிக் கூறுகிறது. இங்கே, எங்கெல்ஸ், பாட்டாளி வர்க்கப் புரட்சி, **முதலாளித்துவ அரசை** ஒழித்து விடுகிறது என்று கூறுகிறர். **உதிர்ந்து போகிறது** என்று அவர் கூறுவது, புரட்சிக்குப்பின், பாட்டாளி வர்க்கத்தின் அரசினுடைய எச்சங்களை. முதலாளித்துவ அரசு தானாக உதிர்ந்து விடும் என்பது எங்கெல்ஸின் கருத்தல்ல. அது பாட்டாளி வர்க்கத்தால், புரட்சிப் போக்கில் ஒழிக்கப்படுகிறது. தானாக உதிர்ந்து போவது, பூர்ஷுவா அரசுக்குப் பதிலாக அமைக்கப்படும் பாட்டாளி வர்க்க அரசு அல்லது **அரைகுறை அரசு** (Semi state).

இரண்டாவதாக, அரசு விசேஷமான ஒடுக்குமுறைக்கருவி. இதைக் குறித்து மிகத் தெளிவான வரையறுப்பையும், விளக்கத்தையும் எங்கெல்ஸ் அளிக்கிறர். கோடிக்கணக்கான பாட்டாளி மக்களை ஒடுக்குவதற்காக சிறு தொகையினரான முதலாளி

ளிகளால் உருவாக்கப்பட்ட விசேஷமான ஒடுக்கு முறைக் கருவி முதலாளித்துவ அரசு தான் வெற்றி யற்றதும். முதலாளி வர்க்கத்தை ஒடுக்குவதற்காக ஒரு விசேஷமான ஒடுக்கு முறைக் கருவியான பாட்டாளி வர்க்க அரசை அது படைத்துக் கொள்கிறது.

இதைத்தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றழைக்கிறோம். இம்மாற்றத்தைத்தான் எங்கெல்ஸ், ''அரசு என்ற நிலையில் அரசு ஒழிக்கப்படுகிறது'' என்று எழுதினார். இதுதான், உற்பத்தி சாதனங்களை சமுதாயத்தின் பெயரால், அதன் பிரதிநிதியாக, அரசு உடைமையாக்கி கொள்ளும் செயல். (முதலாளித்துவ விசேஷ சக்திக்குப் பதிலாக, பாட்டாளிவர்க்க விசேஷ சக்தியை உருவாக்குவது, உதிர்ந்து போவதாகாது: (முதலாளித்துவ அரசு ஒழிக்கப்பட்டு, பாட்டாளி வர்க்க அரசு அமைக்கப்படுகிறது.)

மூன்றாவதாக, எங்கெல்ஸ், ''உதிர்ந்து போகிறது'', ''தானாகவே செத்துப் போகிறது'' என்ற இலக்கிய நயம் வாய்ந்த சொற்களை, தமது விளக்கவுரையில் பயன்படுத்துகிறார். சமுதாய முழுமையின் பிரதிநிதியாக அரசு உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாக்கிக் கொண்டதற்குப் பிற்காலத்தைக் குறிப்பிடும்பொழுதுதான், அரசு ''உதிர்ந்து போகிறது'' என்று எழுதுகிறார். அதாவது, சோஷலிஸப் புரட்சி முற்றுப்பெற்ற காலம் அக்காலத்தில் 'முழுமையான ஜனநாயகம்' அரசின் அரசியல் வடிவமாயிருக்கும். சந்தர்ப்பவாதிகள், எங்கெல்ஸின் கருத்தை, 'ஜனநாயகம் உதிர்ந்து விடும்' என்று பொருள் கொண்டால், அது அவர்களது மூளைக் கோளாறே அன்றி, அதற்கு எங்கெல்ஸ் பொறுப்பாளி அல்லர். இப்படியும் பொருள் கொள்ள

முடியுமா என்று நமக்கு வேடிக்கையாயிருக்கலாம். ''ஜனநாயகம் உதிர்ந்து போகிறது'', ''ஜனநாயகம் தானுகவே செத்துப்போகிறது'' என்று பொருள் கொள்ளும் அளவுக்கு அவர்களுடைய மூளைகள் குழம்பிப் போயிருக்கின்றன. ஆனுல் 'ஜனநாயகம்' என்பதும் (ஒரு முதலாளித்துவ) அரசு என்பதைப் புரிந்து கொள்ளுபவர்களுக்கு முதலாளித்துவ அரசு மறைந்து போகும்பொழுது அதுவும் மறைந்து விடும் என்பது புரிய முடியாததாக இராது. புரட்சியால் மட்டும்தான் முதலாளித்துவ அரசு அழிக்கப்படும். ஆனுல் பொதுவாக அரசு என்பதே, (அதாவது முழுமையான ஜனநாயகம்) அழிக்கப்படுவதில்லை; உதிர்ந்து போகிறது.

நான்காவது, 'அரசு உதிர்ந்து போகும்' என்ற புகழ் பெற்ற வாசகத்தை எழுதிய எங்கெல்ஸ் இந்த வரையறுப்பை, சந்தர்ப்பவாதிகளுக்கும், அராஜகவாதிகளுக்கும் எதிராகக் கூறியதாக விளக்குகிருர். சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராகவே முக்கியமாக இந்த வரையறுப்பை கொடுத்ததாக எங்கெல்ஸ் தெளிவாக்குகிருர்.

''அரசு உதிர்ந்து போகிறது'' என்ற முடிவை அராஜகவாதிகளுக்கு எதிராக மட்டும் எங்கெல்ஸ் கூறவில்லை என்பதை, இந்த வாசகத்தை படிக்கிற 10,000 வாசகர்களில் 10 பேர் கூடப் புரிந்து கொள்ளுவதில்லை. மிச்சம் 10 பேரில் ஒன்பது பேருக்கு இந்த வாசகத்தை எதிர்ப்பது, சந்தர்ப்பவாதிகளின் கொள்கையில் எதிர்ப்பது என்ற உண்மை புரிவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு ''சுதந்திர மக்களின் அரசு'' என்ற கருத்தமைப்பே விளங்குவதில்லை. ''இப்படித்தான் வரலாறு எழுதப் படுகிறது! இவ்வாறுதான் ஒரு மேன்மையான புரட்சிகரமான போதனை, தற்கால போலிப் புரட்சிவாதிகளின் தீர்வுவாதங்களுக்கு ஏற்ற முறையில்

ஒளிவு மறைவாக மாற்றப்படுகிறது. அராஜகவாதி களுக்கு எதிரான இந்த முடிவு ஆயிரம் தடவை வற்புறுத்தப்படுகிறது. சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான இந்த முடிவு மறைக்கப்படுகிறது அல்லது மறந்துவிடப்படுகிறது.''

1870-ல் ஜெர்மன் சோஷல் டிமாக்ரடிக் கட்சி 'சுதந்திர மக்கட் அரசு' என்ற கருத்தமைப்பை தங்கள் திட்டத்தில் கோரிக்கையாக வைத்தது. இக் கோரிக்கையில் அரசியல் உள்ளடக்கம் இல்லை. ஜன நாயகம் என்ற கருத்தை படாடோபமாக இதுவெளி யிட்டது. கிளர்ச்சிக் கண்ணோட்டத்தில், சட்டபூர்வ மான நிலைமையில், ஜனநாயகக் குடியரசு தேவை என்று இக்கோரிக்கை வற்புறுத்தியதால் சிறிது காலத்திற்கு இது பொருந்தும் என்று எங்கெல்ஸ் ஒப்புக்கொண்டார். ஆனால் இது ஒரு சந்தர்ப்பவாத ம்கோஷமே. ஏனெனில் இது ஒரு முதலாளித்துவ கோஷம்; அரசு பற்றிய சோஷலிஸ விமர்சனங்களை அவர்கள் கருததில் கொள்ளவில்லை. முதலாளித்துவ அமைப்பில், பாட்டாளி வர்க்கத்திற்கு உகந்த அமைப்பு ஜனநாயகக் குடியரசு என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் கூலி அடிமைத்தனம் தான் எந்தவித முதலாளித்துவ ஜனநாயகக்குடியரசி லும் பாட்டாளி வர்க்கத்தின் நிலை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எந்த அரசும், அடக்கப்பட்ட வர்க்கத்தை ஒடுக்குவதற்கான விசேஷ ஒடுக்கு முறைக் கருவியே. எனவே எந்த அரசும் சுதந்திர மானதல்ல. மக்கள் அரசும் அல்ல. 1870-ல் மார்க்சும், எங்கெல்ஸூம் இந்தக் கருத்தை அவர் களுடைய கட்சித் தோழர்களுக்கு பலமுறை விளக் கினார்கள்.

ஐந்தாவது, அரசு உதிர்வது பற்றி எழுதிய அதே நூலில் எங்கெல்ஸ் வன்முறைப் புரட்சியின் முக்கியத்துவம் பற்றியும் எழுதியுள்ளார். 'அரசு

உதிர்வதை' ஞாபகத்தில் வைத்துள்ளவர்களுக்கு, புரட்சி பற்றி எங்கெல்ஸ் எழுதியது மறந்துபோய் விட்டது. புரட்சியின் பாத்திரம் பற்றி எங்கெல்ஸின் வரலாற்றியல் ஆராய்ச்சி, புரட்சிக் காவியமாகக் காணப்படுகிறது. இதை யாரும் ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை. இக் கருத்தின் முக்கியத்துவம் பற்றி நினைப்பதோ, அல்லது இக் கருத்தைப் பிரச்சாரம் செய்வதோ அவசியமென்று நவீன சோஷலிஸ்டுக் கட்சிகளுக்குத் தோன்றவில்லை ஆயினும் இவையிரண்டையும் பிரிக்கமுடியாத ஒரு கருத்தின் இரு அம்சங்களாகவே எங்கெல்ஸ் எழுதியுள்ளார்.

''பயங்கரமான சக்தியாக மட்டுமல்லாமல் வேறோர் பாத்திரத்தையும், வன்முறை புரட்சி வரலாற்றில் வகிக்கிறது. அதுதான் அதன் புரட்சிகரமான பாத்திரம். மார்க்ஸினுடைய சொற்களில் கூறுவதானால், ''புரட்சிதான், புதிய சமுதாயத்தை தன் கருவினுள் கொண்டிருக்கும் ஒவ்வொரு பழைய சமுதாயத்திற்கும், (புதியது பிரசவிக்க) ஒரு மருத்துவச்சியாகும். இறந்துவிட்ட, வளர முடியாத அரசியல் வடிவங்களைப் பிணைந்து கொண்டு சமுதாய இயக்கம் வெளிப்படுவதற்கு, புரட்சி என்னும் கருவி தேவையாக இருக்கிறது.''

'பூர்ஷுவா அரசை, பாட்டாளி வர்க்க அரசால் அடக்குவது வன்முறைப் புரட்சியல்லாமல் சாத்தியமில்லை. பாட்டாளி வர்க்க அரசு அகற்றப்படுவது, உதிர்ந்துபோகிற முறையிலன்றிச் சாத்தியமில்லை.'' (லெனின்—அரசும் புரட்சியும் என்ற நூலில்)

அரசு பற்றிய மார்க்சீய போதனைகளை, எங்கெல்ஸின் கருத்துக்களின் மூலமும், அக்கருத்து பற்றி லெனினுடைய விளக்கங்கள் மூலமும் தெரிந்து கொண்டோம். இனி புரட்சிக்கால கட்டத்தின் நிகழ்ச்சிகளிலிருந்து, நடைமுறையில் இக் கொள்கை

கள் பாட்டாளி வர்க்க அரசுகளைத் தோற்றுவித்ததையும், அவற்றின அனுபவத்தால் இக்கொள்கை கருத்தமைப்பில் செழுமையடைந்ததையும் கூறுவோம்.

## 12. சோஷலிஸ அரசின் தன்மையும் கடமையும்

சோஷலிச அரசு, அதற்கு முன்பிருந்த எல்லா வகை அரசுகளினின்றும் தன்மையில் மாறுபட்ட அரசாகும். இவ்வரசில் அரசியல் அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கையில் இருக்கும்.

சுரண்டும் வர்க்கங்களின் அரசுகள், தனி உடைமை அடிப்படையில் சுரண்டுவதற்கு ஏற்ற சமுதாய அமைப்பின் வர்க்கப் பிரிவினைகளைப் பாதுகாக்கவே அமைக்கப்பட்டவை. ஆனால் தொழிலாளி வர்க்கமோ தனது அரசின் அதிகாரத்தை மனிதனை மனிதன் சுரண்டுவதையும் அதற்குரிய காரணங்களையும் அடியோடு ஒழிக்கப் பயன்படுத்துகிறது. தனது அதிகாரத்தை என்றும் நிலைத்திருக்கச் செய்வது அதன் நோக்கமல்ல. ஆனால் அதற்கு சமுதாயத்திலுள்ள வர்க்கப் பிரிவினைகளையும் அவை ஏற்படுவதற்குரிய காரணங்களையும் அகற்றுவதற்கே அரசு என்ற அமைப்பு தேவைப்படுகிறது. பாட்டாளி வர்க்கம் சோஷலிஸ அரசை, முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாற்றுவதற்கு உரிய சாதனமாகவே கருதுகிறது. கம்யூனிஸ நிர்மாணக் கடமைகள் நிறைவேற்றப்பட்டவுடன் பாட்டாளி வர்க்க அரசு உதிர்ந்து போக வேண்டும். பாட்டாளி வர்க்கம் சோஷலிஸப் புரட்சியில்

வெற்றி பெற்று சுரண்டும் வர்க்கங்களைத் தோல்வி யடையச் செய்தவுடன் தோற்றுப்போன வர்க்கங் களை தங்கள் எதிர்ப்பைக் கைவிட்டு விடமாட்ட. தோல்வியின் காரணமாகத் தாங்கள் இழந்துவிட்ட உடைமைகளை மீட்டுக் கொள்வதற்காக அவர்கள் பாட்டாளி வர்க்க அரசை எதிர்த்துப் போராடு வார்கள். அப்பொழுது இவ்வரசு அவ்வெதிர்ப்பை அடக்கி முறியடிப்பதற்கு அ சின் அதிகாரத்தைப் பயன்படுத்தும்.

இவ்வரசு அரசியல் உள்ளடக்கத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகும். இதன் முக்கிய கடமை சுரண்டல் வர்க்கங்களை வர்க்கங்கள் என்ற நிலையில் அழிப்பதுதான். அதன் மற்றொரு முக்கியமான கடமை, பாட்டாளி வர்க்க அரசியல் அதிகாரத்தை உழைக்கும் மக்கள் அனைவருடைய ஆதரவையும் பெற்று சுரண்டலமைப்பை ஒழித்து புதிய சோஷலிச சமுதாயத்தை அமைப்பதாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முற்போக்கு வர்க்கங்களின் வர்க்கப் போராட்டத்தின் சாதனமாயினும், அதன் அடிப்படை நோக்கம் வர்க்கப் போராட்டம் மட்டு மல்ல. பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்குரிய சாதனமாகவும் இவ்வரசு பயன்படுத்தப்பட வேண்டும். இது பற்றி லெனின் கூறுவதாவது: ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மிக முக்கியமாக சமூகப் பொருளா தார அரசியல், தத்துவார்த்த அம்சங்களில் சமூக வாழ்க்கையை சோஷலிஸப் பாதையில் மாற்றி யமைக்கும் சாதனமாகும்.''

இக்கடமைகளை நிறைவேற்ற பாட்டாளி வர்க்கத்திற்கு, உழைக்கும் வர்க்கங்கள் அனைத்தின் ஆதரவு தேவையாகும். இத்தகைய நேசக் கூட்டாளி அமைவதைப் பொறுத்தே பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி நிலைத்திருக்கும். முக்கியமாக

விவசாயி வர்க்கத்தின் கூட்டுறவை அது நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலை கொண்டிருப்பதற்கு இக் கூட்டுறவு இன்றியமையாதது. அக்காரணத்தாலும் விவசாயிகளை முதலாளித்துவ வர்க்கத்தோடு சேர்ந்து விடக் கூடாது. இதற்காக சோஷலிஸ்டு நிர்மாணப் பணிகளில் விவசாய வர்க்கத்தை ஈடுபடுத்த வேண்டும். ஆட்சிப் பதவி இழந்த சுரண்டல் வர்க்கங்களை அடக்கி ஒழிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு உழைக்கும் மக்களுக்கு ஜனநாயகத்தை விஸ்தரிப்பதும் அவசியமாகும். தொழிலாளிவர்க்கம், பேச்சுரிமை, பிரசுர உரிமை, பண்பாட்டு உரிமை போன்ற பல உரிமைகளை இடைக்கால கட்டத்தில் கண்காணப் பெற வேண்டும். இத்தகைய சுதந்திரங்களைப் பெறுவது, முதலாளி வர்க்கம் அரசியல் ஆதிக்கம் வகிக்கும் வரை சாத்தியமில்லை. அந்த ஆதிக்கத்தை ஒழிப்பது உற்பத்தி சாதனங்கள் தனி உடைமையாக இருக்கும் வரை சாத்தியமில்லை.

இனிவரும் பகுதியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு, வர்க்கங்களை ஒழித்து சோஷலிச நிர்மாணத்தில் எவ்வகையான பாதைகளில் செயல்பட்டன என்பதை விளக்குவோம். முக்கியமாக சோவியத் அரசும், கிழக்கு ஐரோப்பிய மக்கள் ஜனநாயக அரசுகளும் ஆசியாவில் தோன்றியுள்ள சோஷலிஸ்ட் அரசுகளும் சோஷலிச மாற்றம் என்னும் ஒரே குறிக்கோளை எத்தகைய வெவ்வேமுன வழிகளில் அடைந்தன என்பதைக் காண்போம். இங்கு தத்துவார்த்த சிந்தனைக்கும், நடைமுறை அனுபவத்திற்கும் உள்ள ஒற்றுமையைக் காண்பதோடு நடைமுறை அனுபவம் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய சிந்தனையாளர்களின்

விஞ்ஞான ரீதியான முடிவுகளை வளர்த்துச் செழுமைப்படுத்துவதை காணலாம்.

### சோஷலிச அரசின் வடிவங்கள்

கால வரிசைப்படி கூறுவதானால், உலகில் தோன்றிய முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு பாரிஸ் கம்யூன் ஆகும். பாரீஸ் கம்யூனின் தன்மையை ஆராய்ந்து, மார்க்ஸூம், எங்கெல்ஸூம், பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் இயல்புகளை விளக்கினர். 1. பொது மக்களின் நேரடியான அரசியல் அமைப்புகள் அரசாங்க அதிகாரத்தில் இருந்தன. 2. சட்ட நிர்மாணத்திற்கும், அரசாங்க அதிகாரத்திற்கும் ஒற்றுமையிருந்தது. 3. குடியரசு ஆட்சிமுறை, அரசாங்க அதிகாரத்தின் வடிவமாய் இருந்தது. 4. ஜனநாயக மத்தியத்துவம் அரசாங்க அமைப்பின் அடிப்படைக் கொள்கையாயிருந்தது. பாட்டாளி வர்க்க ஜனநாயக அம்சங்கள் பல அரசாங்க உறுப்புகளில் இருந்தன. தேர்தலால் எல்லா நியமனங்களும் நடந்தன. ஒரு சபைக்கு எல்லா அதிகாரிகளும் பொறுப்பாக இருக்க வேண்டும். அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் பதவியில் நீடிக்காமல் மாற்றப்படுவர்.

இந்த ஜனநாயக அம்சங்களை சோவியத் அரசில் மேலும் வளர்ச்சியுற்ற நிலையில் காணலாம். தொழிலாளிகளின் முன் முயற்சியால் படைக்கப்பட்ட பொது மக்கள் நிறுவனங்கள் சோவியத் அமைப்புகள். 1905 புரட்சியின் போது அவை தோன்ற ஆரம்பித்தன. 1917-ல் அவை நாடு முழுவதும் பரந்த அளவில் தோன்றிவிட்டன. 1905-ல் அவை தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களாக இருந்தன. அவை 1917-ல் தொழிலாளர், விவசாயிகள், ராணுவத்தினர் கொண்ட சோவியத் சபைகளாக

மாறிவிட்டன. இவை தொழிலாளி வர்க்கத் தலைமையில், உழைப்பாளி வர்க்கங்களின் வர்க்க சபைகளாக இருந்தன, ருஷியப் புரட்சி வெற்றியுற்று வெற்றி நிலையாக இருந்ததற்கு இந்த சபைகளே காரணம் என்று லெனின் கூறியுள்ளார். இச்சபைகள் இல்லாவிட்டால் கைப்பற்றிய அதிகாரத்தை தொழிலாளி வர்க்கம் நீடித்து வைத்திருக்க முடியாது. அதிகாரத்தைக் கைப்பற்றியதும் அதனை ஏற்று நிர்வகிக்க உழைப்பாளிகளின் வர்க்க சபைகள் இருந்ததால், லெனின் ''எல்லா அதிகாரமும் சோவியத்துகளுக்கே'' என்று கோஷம் கொடுக்க முடிந்தது. இவையில்லாவிட்டால், பழைய ஆதிகார வர்க்கம், அரசாங்க யந்திரத்தை சுரண்டும் வர்க்கங்களுக்கு ஆதரவாக பயன்படுத்தியிருக்கும். ரஷ்ய நாட்டின் வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ற முறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலிருந்து சோவியத் சபைகளின் அரசியல் அதிகாரமாக உருவெடுத்தது.

ஹிட்லர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பல அம்சங்களில் வேறுபட்டிருந்தது. அந்நாடுகளெல்லாம் பாசிச எதிர்ப்புக் கூட்டணிகள் உருவாகியிருந்தன. இத்தகைய கூட்டணிகள் ரஷ்யாவில் புரட்சிக்கு முன் இருக்கவில்லை. இக் கூட்டணிகள் தொழிலாளி வர்க்கம், உழைக்கும் விவசாயிகள் நகரச் சிறு உற்பத்தியாளர் அறிவாளிப் பகுதிகள் ஆகியோரைக் கொண்டிருந்தது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தொழிலாளி வர்க்கமும் தேச பக்தியுடைய தேசீய முதலாளிகளும் பாசிச எதிர் பணியில் ஒன்று பட்டிருந்தனர். இத்தகைய மக்கள் கூட்டணிகள் ஆட்சிக்கு பொறுப்பேற்றன.

கூட்டணியில் பங்குகொண்ட சமுதாய வர்க்கங்களனைத்திற்கும் பொதுவான திட்டங்களுக்காகப்

போராடின. இக் கூட்டணிகள் கம்யூனிஸ்ட் கட்சிக் கும் பிற ஜனநாயகக் கட்சிகளுக்கும் இடையே கூட்டுறவை ஏற்படுத்தின. மக்கள் ஜனநாயகத் திட் டங்கள் நிறைவேற்றப்படும் பொழுது உழைக்கும் வர்க்கத்தின் அரசியல் கட்சிகளனைத்தும் மார்க்ஸிய லெனினியத்தை ஏற்றுக்கொண்டு சோஷலிஸ நிர் மாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியோடு நேசப்பான்மை யில் இணைந்து செயல்பட்டன. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தொழிலாளி வர்க்கம் பின்பற்றுகிற இரண்டு பெரிய கட்சிகளான சோஷலிஸ்ட் கட்சி யும் ஜெர்மன் தொழிலாளர் கட்சியும் மார்க்ஸிய லெனினிய தத்துவத்தை ஏற்றுக்கொண்டு ஜெர்மன் சோஷலிஸ்ட் ஒற்றுமைக் கட்சி என்று ஒரே கட்சி யாக இணைந்து வந்தன.

ஒவ்வொரு நாட்டின் புறவய சமுதாய வரலாற் றுச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பாட்டாளி வர்க்கச் சர் வதிகாரத்தில் அரசாங்கத்தின் வடிவமும் உள்ளடக் கமும் இருக்கும். முதலாளி வர்க்கம் எந்த வழியில் தோற்கடிக்கப்படுகிறது, அந்த நாட்டின் வர்க்க உறவு நிலைமைகள் என்ன? சுரண்டல் வர்க்கங்கள் பாட்டாளி வர்க்க அரசை எம்முறைகளில் எதிர்க் கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வின் அளவும் அதன் ஸ்தாபன வடிவங்களும் எவ்வாறுள்ளன? அந்நாட்டின் பாட்டாளிவர்க்கத் தின் முந்திய புரட்சிகளின் அனுபவம் என்ன? அண் மையில் சோஷலிஸ அரசு உள்ளதா? உலக சோஷ லிஸ அமைப்பு எவ்வளவு? அந்நாட்டின் பொரு ளாதார வளர்ச்சியும் பொருளாதார அமைப்பின் தன்மையும் எவை? அந்நாட்டில் பல தேசீய இனங் கள் உள்ளனவா? நாட்டின் பரப்பும் மக்கள் தொகையின் அடர்த்தியும் எவ்வளவு? என்ற பல காரணிகளின் கூட்டு விளைவாக அந்நாட்டில் தோன்

றக்கூடிய பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் வடிவம் இருக்கும்.

பாட்டாளி வர்க்க அரசின் உள்ளடக்கம் அதன் சர்வாதிகாரமாக இருந்த போதிலும், வெவ்வேறு நாடுகளின் வரலாற்று நிலைமைகளைப் பொறுத்தும், சமுதாய வர்க்க உறவுகளைப் பொறுத்தும், மேற் கூறிய பிற காரணிகளையும் பொறுத்தும், வடிவங் களில் மாறுபடும் என்பதை தற்காலப் புரட்சிகளால் தோன்றிய பாட்டாளி வர்க்க சோஷலிஸ அரசு களின் அனுபவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

### சோஷலிஸ அரசின் வளர்ச்சியும், கம்யூனிஸ நிர்மாணமும்

சோஷலிஸம் வெற்றி பெற்று சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட பின்னர், தொழிலாளி வர்க்க அரசு, விரோதி வர்க்கங்களை ஒடுக்க வேண்டிய அவசியமில்லாமல் போகிறது. எனவே அது ஒடுக்கு முறைக் கருவி என்ற நிலையிலிருந்து விடுபடுகிறது. விவசாயிகள், சிறுநிலவுடைமையாளர்களாக இருந்த நிலை சோஷலிஸ சமுதாயத்தில் மாறி விடுகிறது. அவர்கள் உற்பத்திச் சாதனங்களை பொதுவில் சொந்தமாகக் கொண்ட கூட்டுப்பண்ணை விவசாயி களாகவோ, அல்லது அரசாங்கப்பண்ணை ஊழியர் களாகவோ, கூட்டுறவுப் பண்ணை விவசாயிகளாகவோ மாறி விடுகிறார்கள். அவர்கள் சோஷலிஸப் பாதையிலிருந்து ஊசலாடுவதற்குரிய காரணங்கள் மறைந்து விடுகின்றன. அதனால் அவர்களுடைய ஊசலாட்டத்தைத் தடுக்கவேண்டிய அவசியம் பாட் டாளி வர்க்க அரசுக்கு இல்லாமல் போகிறது. தொழிலாளி வர்க்கமும், விவசாயி வர்க்கமும், மார்க்ஸிய லெனினிய தத்துவத்தின் அடிப்படை யில் ஒற்றுமைப்படுகின்றன. இவ்விரு வர்க்கங் களின் நேச உறவு, உயர்ந்த நிலையை அடைகிறது.

சோஷலிஸ நிர்மாணக் கட்டம் முற்றுபெறும பொழுது ஏற்பட்டுள்ள சமூக-பொருளாதார மாறுதல்கள், ஜனநாயகத்தைப் பெரு வளர்ச்சியடையச் செய்கின்றன.

சோஷலிஸ சமுதாயத்தில், வேலை செய்யும் உரிமை, ஓய்வு பெறும் உரிமை, கல்வி பெறும் உரிமை முதலிய அடிப்படை உரிமைகள், குடிமக்கள் அனைவருக்கும் சோஷலிஸச் சட்டங்களால் அளிக்கப்படுகின்றன. மக்களின் பொருளாயத வாழ்வில் செழிப்பு அதிகரிக்கிறது. ஆன்மீக வாழ்வில் பண்பாட்டு நிலை உயருகிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறும் காலத்தில் இருந்ததை விட, அதிகமாகப் பொது மக்கள் அரசாங்கப் பணிகளில் ஈடுபடுகிறார்கள். சோஷலிஸ நிர்மாணத்தால், மக்களுடைய சோஷலிஸ உணர்வு, உயர்ந்த நிலையை அடைகிறது. தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம் அறிவாளிப்பகுதியினர் எல்லோரும் நெருங்கிய நேச உறவை வளர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு நேச வர்க்கங்களாகி. சோஷலிஸ உணர்வால் ஒன்றுபட்டு உழைக்கும் மக்கள் அரசாங்கப் பணிகளில் மேலும் மேலும் பங்கு கொள்ள முன் வருவதால், தொழிலாளி வர்க்க ஜனநாயகம் மக்களுடைய ஜனநாயகமாக வளருகிறது. இந்நிலைமைகள் தோன்றும்பொழுது, சோஷலிஸ அரசு அனைத்து மக்களின் அரசாக மாறுகிறது. அப்பொழுது அது அனைத்து மக்களின் இச்சா சக்தியை பிரதிபலிக்கிறது. இப்பொழுதும் தொழிலாளி வர்க்கம் அனைத்து வர்க்கங்களிலும் முற்போக்கான வர்க்கம் ஆதலால், இவ்வரசில் தலைமைப் பாத்திரம் வகிக்கிறது. இப்பொழுது ஒரு வர்க்கத்தின் ஆதிக்கம் அரசாங்க இயந்திரத்தில் இல்லை. எல்லா வர்க்கங்களும், தொழிலாளி வர்க்கத்தின் கடமை

யான கம்யூனிஸ நிர்மாணத்தைத் தங்கள் கடமை யாகவும் ஏற்றுக் கொள்கின்றன.

சுரண்டல் வர்க்கங்கள் ஒழிந்தவுடன் புல்லுருவிக் குழுக்கள் இல்லாமற்போய் விடுவதில்லை. சோஷலிச வெற்றிக்குப் பின்னரும் நீண்ட காலத்துக்கு பழைய சமுதாயத்தின் எச்சமாக திருடர்கள், கொள்ளைக்காரர்கள், ரவுடிகள் போன்ற சமூக விரோதிகள் இருப்பார்கள். குடிமக்களையும், சோஷலிச சொத்துக்களையும், இப்புல்லுருவிகளிடம் இருந்து பாதுகாக்க சோஷலிஸ அரசு வன்முறையையும் ஒடுக்குமுறைகளையும் பயன்படுத்த வேண்டும்.

அனைத்து மக்களின் அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் கடமைகளைத் தொடர்ந்து, முன்னிலும் பெரிய அளவில் செயல்படுகிறது. அனைத்து மக்களுடைய குறிக்கோளும் கம்யூனிஸமாக ஆகிவிடுகிறது. இக் குறிக்கோளுக்காக அனைத்து மக்களும் உழைக்கிறார்கள். உள்நாட்டு வர்க்கப் போராட்டம் முற்றுப்பெற்று, சோஷலிச நாடுகளின் வர்க்கங்கள் அனைத்தும் ஏகாதிபத்திய-முதலாளித்துவத்தை எதிர்த்து உலக அரங்கில் வர்க்கப் போராட்டத்தை நடத்துகின்றன.

சோஷலிச அரசின் வெளி விவகாரக் கடமைகள், அயல் நாட்டுப் படையெடுப்பிலிருந்து தாய் நாட்டைக் காப்பது, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து சோஷலிசத்தால் பெற்ற நன்மைகளைப் பாதுகாப்பது முதலியன. உலக அரங்கில் முதலாளித்துவத்திற்கும் சோஷலிஸத்திற்கும் இடையே போராட்டம் நடைபெறும்வரை, ஏகாதிபத்தியம் நிலைத்திருக்கும்வரை, சோஷலிஸ்டு அரசு, தனது ராணுவ பாதுகாப்பில் கவலையின்றி இருக்க முடியாது. சோவியத் யூனியன் தனது அரசாங்க

வருமானத்தில் 11 சதவிகிதம் ராணுவத் தயாரிப்புகளுக்காகச் செலவிடுகிறது. போரை ஒழிக்கவும், ராணுவச் செலவைக் குறைக்கவும், அதனுல் மிச்சமாகும் செல்வத்தை ஆக்க பணிகளுக்குப் பயன்படுத்தவும் சோவியத் யூனியன் தயாராயுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளோடு இவ் விஷயத்தில் ஒரு ஒப்பந்தத்திற்கு வரவும் தயாராயுள்ளது.

யுத்தப்பதட்ட நிலைமையைத் தயாரிக்கவும், ஆயுதப்போட்டியைக் குறைக்கவும் ஆணு ஆயுதங்களைத் தடை செய்யவும், சோவியத் அரசு எடுத்து வரும் முயற்சிகளை உலகம் அறியும்.

சோவியத் நாட்டில் சோஷலிஸ நிர்மாணக் கட்டம் முடிவடைந்து கம்யூனிஸ கட்டம் தோன்றியுள்ளது. இந்நிலையில் அரசின் அடக்குமுறைப் பணிகள் மிகவும் குறைந்துவிட்டன. பொருளாதார, பண்பாட்டு, கல்விப்பணிகளை நிருவகிக்கும் கடமை அதிகமாகியுள்ளது. சோஷலிஸ அரசாங்க இயந்திரத்தின் வளர்ச்சி பற்றி லெனின், "அரசு என்ற பழைய அமைப்பு, (முன் அது எந்தப் பணிகளைக் குறித்ததோ, அந்தப் பணிகளைச் செய்யும் அரசு) செத்தே போகும். உயர் பொருளாதாரக் கௌன்சில் போன்ற அமைப்புகள் வளரும். சமுதாயத்தின் முக்கியமான செயல்களை நிருவகிக்கும் (பொருளாதார, பண்பாட்டு, கல்வி) அமைப்புகள் வளர்ச்சியடையும்" என்று கூறினர்.

சோஷலிஸப் பொருளாதாரக் கொள்கை, "வேலைக்குத் தகுந்த ஊதியம்" என்பது இந்த பங்கீட்டுக் கொள்கையை நிறைவேற்ற சோஷலிஸ அரசு சட்டத்தைப் பயன்படுத்துகிறது. சட்டங்கள், அரசின் கட்டாயப்படுத்தும் அம்சமாகும். சோஷலிஸத்தில் வேலையைச் செய்ய வைப்பதிலும், வினியோகத்தை ஒழுங்குபடுத்துவதிலும் சோஷலிஸ

அரசு கட்டுப்பாட்டை மேற்கொள்ளுகிறது. முழுமையாக கம்யூனிஸம் நிர்மாணிக்கப் பட்ட பின்னர்தான் அரசு உதிர்ந்து போகும். ''ஒவ்வொருவரிடமிருந்தும், அவரவர் திறமைக்குத் தகுந்த வேலை, ஒவ்வொருவருக்கும் தேவைக்குத் தகுந்த ஊதியம்'' என்ற விதிமுறையைச் சமுதாயத்தில் அமுலாக்க முடிகிறபோதுதான் அரசு உதிர்ந்து போகும் சமுதாய உறவுகளின் விதிகளை உணர்ந்து மக்கள் அவற்றைத் தாமாக கடைபிடிக்கும் நிலைமை தோன்றிய பின்னர், அவர்களுடைய உழைப்பு, மிகுதியானப் பலன் அளிக்கும் அளவில் உற்பத்தி சக்திகள் வளர்ச்சி பெற்ற பின்னரும்தான், அவர்கள் தாமாகவே தங்களுடைய திறமைக்கேற்றபடி உழைப்பார்கள். அப்பொழுதுதான் அரசு உதிர்ந்து போகும் காலம்வரும் என்று லெனின் எழுதினர்.

NCBH